# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2051 சித்திரை / ஏப்ரல் 2020 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be


## தேசத்தின் குரல்

## கொரோனா நோய்க் கிருமிக்கு எதிரான போர் செய்ய வேண்டியது என்ன?



புதுவிதக் கொரோனா (கொவிட்-19) உலகையே உலுக்கி விட்டது இன்றளவும் உலுக்கிக் கொண்டிருக்கிறது, இந்த நெருக்கடி மாந்தக் குலத்தின் நல்வாழ்வு தொடர்பானது மட்டுமன்று. இந்த நோய்த்தொற்று பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளும் நோயாளர்களைப் பேணும் ஏற்பாடுகளும் பொருளியல், அரசியல், பண்பாட்டுத் தளங்களில் கடுமையான சமூகத் தாக்கமும் கொண்டுள்ளன. உடல்நல நெருக்கடியும் சமூக நெருக்கடியும் ஒன்றையொன்று சார்ந்திருப்பவை என்பதை மனத்திலிருத்தி, கொரோனாவுக்கு எதிரான போரை இருதளங்களிலும் இணையாக

## உள்ளே...


1. தேசத்தின் குரல் - 1
2. பாஜக அரசு கைகழுவியது கொரோனாவையா?மக்களின் பொருளாதாரத்தையா? - 15
3. கொரோனாவும் சட்ட உரிமைகளும் - 21
4. செங்காட்டான் குறிப்புகள் - 25
5. ஆரியப் புலப்பெயர்வு விவாதத்தை மரபணுவியல் எப்படி முடித்து வைக்கிறது?(3) -27
6. முதலாளித்துவம் தொற்றுநோய்களின் அடைகாப்பகம், சோசலிசமே தீர்வு - 33
7. கொரோனாவும் அன்றாடங்காய்ச்சிகளின் நிலையும் - 41
8. கொரோனா எதிர்ப்புப் போரின் முன்கள வீரர்களைக் காப்போம் - 49
9. நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில்(6)- 56
10. கியூபாவின் புரட்சிப் பெண்கள் (2) -68
11. டாலருக்கு வந்த வாழ்வு (1) - 79


பதிவு எண் :R.Dis. No. 1964/2014

நம்மால் முன்னெடுக்க முடிந்தால் உறுதியாகவும் இறுதியாகவும் வெற்றி பெற முடியும் என நம்புகிறோம். இயற்கை வளமும் மாந்த வளமும் அளப்பரியவை, இவற்றைப் பங்குச் சந்தைக் குறியீட்டு எண்களால் கணித்து விட முடியாது.

இந்த நெருக்கடியை வென்று மீள்வதற்கான முயற்சிகள் நல்வாழ்வுத் துறை சார்ந்தவையாக இருந்தால் மட்டும் போதாது. சமூகம் சார்ந்தவையாகவும் இருக்க வேண்டும். எனவேதான் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் சார்பில் நல்வாழ்வு சார்ந்த உடனடியான பத்துக் கோரிக்கைகளை முதலில் வெளியிட்டோம். பிறகு பொருளியல் சார்ந்த 13 உடனடிக் கோரிக்கைகளையும் வெளியிட்டோம். உடல் நலமும் பொருளியல் நலமும் ஒன்றையொன்று சார்ந்திருப்பவை என்பதை நினைவிற்கொண்டும், இந்த இடைக்காலத்தில் கிடைத்துள்ள பட்டறிவைக் கருத்திற்கொண்டும் கொரோனா தொடர்பான எம் கோரிக்கைகளை ஈண்டு தொகுத்தளிக்கிறோம்.

**கோரிக்கைகள்:**

1.பயணக் கட்டுப்பாடுகளும் சமூக விலகலும் பழைய வழிமுறைகளே என்றாலும் உலகெங்கும் நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த உதவியுள்ளன என்பதால் இவற்றை உறுதியாகவும் அறிவார்ந்த முறையிலும் தொடர வேண்டும். இவை குறித்த விழிப்புணர்வை வளர்ப்பதற்குக் குண்டாந்தடிகள் அல்லாத நல்ல பல வழிகளையும் அரசுகள் கையாள வேண்டும். இன்றியமையாத் தேவைகள் அனைத்தையும் அரசே மக்களுக்கு நிறைவு செய்வதோடு நேரில் சேர்ப்பிக்கவும் ஆவன செய்ய வேண்டும்.

2.நீண்ட கால நோக்கில் பார்த்தால், மனித வளத்தை முடக்கிப் போட்டு விட்டு கொரோனா எதிர்ப்புப் போரிலோ, கொரோனாவின் சமூகத் தாக்கங்களுக்கு முகங்கொடுத்து வாழ்வதிலோ நம்மால் வெற்றி ஈட்ட முடியாது. நல்வாழ்வுப் பணியில் போலவே சமூகத் துயர்தணிப்புப் பணியிலும் ஆர்வமுள்ளோரை உரிய எச்சரிக்கை கலந்த பாதுகாப்புடன் ஈடுபடுத்த வேண்டும். எதிர்காலத்தில் கிருமித்தொற்றுக்கு ஆளாகாமலும், அதே போது வீட்டுக்குள் முடங்கிக் கிடக்காமலும் சமூகம் இயங்குவதற்கு இவ்வாறு வழிகாண முடியும் என நம்புகிறோம். முழு அடைப்பைக் கவனமாகத் தளர்த்தி சமூகம் படிப்படியாக இயல்புநிலைக்கு மீள்வதற்கான எதிர்கால முயற்சிகளுக்கு இது ஊக்கமளிக்கும்.

இப்போதே மக்களுக்குத் தேவையான உதவிகளை உரிய பாதுகாப்புடன் ஒருசில தொண்டர்களைக் கொண்டுசெய்து தர இயலும். தன்னார்வலர்கள் இந்தப் பணியைச் செய்ய அனுமதிக்க வேண்டும். தமிழக அரசே முன்முயற்சி எடுத்துத் தொண்டர் படை போன்ற ஓர் அமைப்பை நிறுவ வேண்டும்.

3."வீட்டில் இரு" என்ற அறிவுரை வீடற்றவர்களை நோக்கிச் சொல்லப்படுவது பெரிய முரணகையாக உள்ளது. வீடில்லாதவர்கள், தெருவோரம் வசிப்போர், அலைகுடிகள், புலம்பெயர் தொழிலாளர்கள், பிச்சைக்காரர்கள், ஆதரவற்றோர், கண்பார்வையிழந்தோர் உள்ளிட்ட மாற்றுத் திறனாளர்கள் ஆகியோரை இந்த நெருக்கடிக் காலத்தில் பேணிக் காக்கும் முழுப் பொறுப்பையும் அரசே மேற்கொள்ள வேண்டும். அவர்கள் தங்குவதற்குரிய காப்பகங்கள் உடனே அமைக்கப்பட வேண்டும். அங்கு அவர்களுக்கு உணவும் நீரும் பிற இன்றியமையாத் தேவைகளும் கிடைக்கச் செய்ய வேண்டும். இப்போதே காப்பகங்களா அல்லது எதிர்காலத்தில் மருத்துவமனைகளா என்ற கேள்விதான் நம்முன்னுள்ளது. அரசுடன் தனியார் அறக்கட்டளைகளும் உடனே இந்தக் காப்பகங்கள் அமைக்க வழிசெய்ய வேண்டும்.

4.நோய்த் தொற்று ஆய்வு பரவலாகச் செய்யப்படாததுதான் நம் புள்ளிவிவரங்கள் நிலைமையின் தீவிரத்தைக் குறைத்துக் காட்டுவதற்குக் காரணம் என்ற குற்றாய்வில் நியாயம் இருப்பதாகக் கருதுகிறோம். நோய் அறிகுறிகளைத் தொடக்கத்திலேயே கண்டறியவும் நோயுற்றவர்களைத் தனிமைப்படுத்தவும் ஆய்வு வசதிகளை விரிவாக்க வழிகாண வேண்டும். பழைய நோய்காண் கருவி வழி ஆய்வில் முடிவு தெரிய நீண்ட நாளாவதால் முதற்கட்ட ஆய்வுக்கான புதிய மீவிரைவு ஆய்வுக் கருவியைப் பயன்படுத்தி விரிவான அளவில் ஆய்வு செய்வது அவசரத் தேவையாகும். சீனத்திடமிருந்து இந்த மீவிரைவு ஆய்வுக் கருவிகளை இறக்குமதி செய்யும் தமிழக அரசின் முயற்சியில் இந்திய அரசு குறுக்கீடு செய்வது கண்டிக்கத்தக்கது. தமிழ்நாட்டிலும் இந்தியத் துணைக்கண்டமெங்கிலும் மீவிரைவு ஆய்வுக்கருவிகளைக் கொண்டு பரந்த அளவில் முதற்கட்ட ஆய்வு செய்து இன்னுங்கூடுதலானோரை இறுதி ஆய்வுக்குத் தெரிவு செய்ய வேண்டும்.

5.நோய் தொற்றியிருக்குமோ என்ற ஐயத்தின் பேரில் சிலரைத் தனிமைப்படுத்தி அவர்தம்

இல்லத்திலேயே இருக்கச் செய்திருப்பதற்கு மாறாக அரசு அமைக்கும் தனி முகாம்களில் அவர்களைப் பிரித்து வைக்க வேண்டும். அயல்நாட்டிலிருந்து இங்கு வந்தவர்களுக்குச் செய்தது போல் முழுஅடைப்பு அறிவிப்புக்குப் பின் பயணம் செய்தவர்களுக்கும் அவர்களோடு தொடர்பு கொண்டவர்களுக்கும் இவ்வாறு ஆய்வு செய்யலாம். சில பகுதிகளை நோயடக்கு மண்டிலங்களாக இனங்கண்டு ஆய்வுகள் செய்வது மேலும் பல பகுதிகளுக்கும் விரிவாக்கப்பட வேண்டும்.

6.இன்றைய சூழலில் மருத்துவர்கள் உள்ளிட்ட நல்வாழ்வுப் பணியாளர்களின் பாதுகாப்பும் உடல், மன நலமும் தனி அக்கறைக்குரியவை. அவர்களையும் அவர்தம் குடும்பத்தாரையும் பிணியிலிருந்தும் பிறவகைத் துன்பத்திலிருந்தும் காப்பதற்கு அரசுகள் முன்னுரிமை தர வேண்டும். மருத்துவர்களுக்கும் செவிலியர்களுக்கும் பிறவகைப் பணியாளர்களுக்கும் முழுக்காப்புடைகள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கச் செய்ய வேண்டும். குறிப்பாகத் தூய்மைப் பணியாளர்களுக்கு முகக்கவசம், காலணிகள், காப்புடை உள்ளிட்ட அனைத்தும் வழங்க வேண்டும். இந்த நோய்நீக்கப் பணியில் ஈடுபட்டு அதனாலேயே நோய்த்தொற்றுக்கு ஆளாகி மருத்துவர்களோ மற்றவர்களோ மடியும் அவலம் இத்தாலி, பிரிட்டன் போன்ற அயல் நாடுகளிலிருந்து தமிழ்நாட்டுக்கும் வந்து விடுமோ என்று அச்சப்படுவதற்குக் காரணம் உள்ளது. ஏற்கெனவே மருத்துவர்கள் உள்ளிட்ட நல்வாழ்வுப் பணியாளர்கள் கொவிட்-19 நோய்த்தொற்றுக்கு ஆளான செய்தி வந்துள்ளது. இந்த அவலம் நேரிட்டு விடாமல் எப்பாடுபட்டும் தடுக்க வேண்டும்.

7.இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் இப்போதுள்ள மருத்துவ மனைகள், படுக்கைகள், தீவிர சிகிச்சைக் கூடங்கள், மூச்சுக்கருவிகள், முகக்கவசங்கள், மற்ற மற்ற ஏந்துகள் எத்தனை நோயாளர்களுக்குப் போதும்? இன்னும் எத்தனைப் பேர் வந்தால் என்ன செய்வது? என்று திட்டமிட்டு முன்கூட்டியே வழிவகை செய்ய வேண்டும்.

8.தொடர்வண்டிப் பெட்டிகளை மருத்துவ அறைகளாகப் பயன்படுத்தலாம் என்று தொடக்கத்தில் பேசப்பட்டது. கொரோனாவுக்கான தனி மருத்துவமனைகளும் கள மருத்துவமனைகளும் தனியடைப்புக் கூடங்களும் பல்வேறு வகையான முகாம்களும் அமைப்பதற்குப் பெரிய

தொழிற்கூடங்கள், நிறுவன அலுவலகங்கள், கட்சி அலுவலகங்கள், தனியார் மாளிகைகள், பழைய அரண்மனைகள், உல்லாச விடுதிகள், சிறைச்சாலைகள், விளையாட்டரங்குகள் போன்றவற்றையும் அரசு இடைக்கால அடிப்படையில் கையகப்படுத்திப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

9.அறைக்கலன் தொழிற்சாலைகளில் படுக்கைகள், ஆடைத் தொழிற்கூடங்களில் காப்புடைகள், முகக்கவசங்கள், ஆய்தத் தொழிற்சாலைகளில் மூச்சுக் கருவிகள் என்று உடனே மாற்று ஆக்கங்கள் செய்வது இந்த ஏந்துகளுக்கு எந்தக் கட்டத்திலும் பற்றாக்குறை வராமல் தவிர்க்க உதவும்.

10.மருத்துவர்கள், செவிலியர்கள், நல்வாழ்வுப் பணியாளர்கள், மருத்துவமல்லாத பணியாளர்கள், ஆய்வுக் கூடங்களுக்கான செய்நுட்பர்கள், ஓட்டுநர்கள் ஏராளமாகத் தேவை. இதற்காக அவசரக்கால அடிப்படையில் ஆள்சேர்த்துக் குறுகிய காலப் பயிற்சி தர வேண்டும். முழு அடைப்பு என்று எல்லாரும் வீட்டில் அடைபட்டுச் சோம்பியிருக்க வேண்டும் என்ற தேவை இல்லை. விழிப்புணர்வும் தொண்டுள்ளமும் கொண்டவர்கள் வெளியே வந்து மக்கள்பணி செய்யலாம். இராணுவம் உள்ளிட்ட ஆய்தப்படைகளில் இருப்பவர்களையும் வேறு துறை சார்ந்தவர்களையும் கூட இந்தக் கடமைக்கு அழைக்கலாம். இதற்கு உடனே ஆவன செய்து எந்தப் பணிக்கும் பெரிய ஆள் பற்றாக்குறை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதே போது அனைவரும் உரிய பாதுகாப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் பணியாற்ற வழிசெய்ய வேண்டும்.

11.கொரோனா எந்தெந்தப் பிரிவு மக்களுக்கு உறுதியாக உயிர்க் கொல்லியாகக் கூடும் என்று கணித்து அந்தந்தப் பிரிவு மக்கள்பால் தனிக்கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக முதியோரையும் ஏற்கெனவே வேறு வகையில் நோயுற்றவர்களையும் இனங்கண்டு பேணுதல் வேண்டும். கொரோனா மீது கவனத்தைக் குவிப்பது கருவுற்ற தாய்மார்கள், குழந்தைகள் போன்றோர் மீதான கவனத்தைக் குறைத்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நோயாளர் யாராயினும் நல்வாழ்வுப் பேணுகையில் குறை ஏற்படலாகாது. யார் சாகட்டும், யார் உயிர்வாழட்டும் என்று மருத்துவர்கள் தேர்வு செய்யும் இக்கட்டான நிலை இங்கு ஏற்படாமல்

உறுதி செய்ய வேண்டும்.

12.கொரோனா தொற்றுக்கான ஆய்வு ஆனாலும், சிகிச்சை ஆனாலும் மருந்து ஆனாலும் எல்லாம் முற்றிலும் இலவயமாகக் கிடைக்கச் செய்ய வேண்டும். இது குறித்துத் தனியார் ஆய்வகங்களோடும் மருத்துவமனைகளோடும் அரசு இப்போதே பேச்சு நடத்தி உடன்பாடு காண வேண்டும். ஒத்துவராத தனியார் ஆய்வகங்களையும் மருத்துவமனைகளையும் இழப்பீடின்றி நாட்டுடைமை ஆக்க வேண்டும். கொரோனா நெருக்கடி தீரும் வரை எல்லா மருத்துவமனைகளையும் அரசு தன் கட்டுக்குள் கொண்டுவரவும் செய்யலாம். கொரோனா நோய் தொடர்பான எல்லாச் செலவுகளுக்கும் அரசே பொறுப்பேற்க வேண்டும். ஒரே ஒருவர் கூட கட்டணம் செலுத்தக் காசில்லாமல் கொரோனாவுக்கு பலியானார் என்ற அவலம் நேராது உறுதி செய்ய வேண்டும்.

13.கொரோனா தடுப்புக்கும் சிகிச்சைக்கும் மருந்து கண்டுபிடிக்க மருத்துவ அறிவியல் உலகம் செய்து வரும் முயற்சிகளை உளமார வரவேற்கிறோம். இந்த முயற்சிகள் விரைவில் வெற்றி பெற வாழ்த்துகிறோம். அதே போது இந்தத் திசையில் பல்வேறு மரபுசார் மருத்துவ முறைகளின் பங்கையும் அறிந்தேற்று ஆதரிக்க வேண்டும்.

14.கொரோனாவுக்கு எதிரான இன்றைய போராட்டத்துக்கு மட்டுமின்றி சமூகத்தின் வருங்கால நல்வாழ்வுக்கும் சுற்றுப்புறத் தூய்மை இன்றியமையாதது என்பதைக் கருத்தில் கொண்டு, துப்புரவுப் பணியாளர்கள் என்று இதுகாறும் அழைக்கப்பட்டு வந்த தூய்மைப் பணியாளர்களுக்குத் தேவையான முகக்கவசங்கள், காலணிகள், தலையணிகள், கையுறைகள், காப்புடைகள், கிருமியழிப்பான்கள், வழலைகள், துப்புரவுக் கருவிகள், வண்டிகள் ஆகிய அனைத்தையும் வழங்க வேண்டும். துப்புரவுத் தொழிலாளர்களின் நெடுநாளையக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதோடு அவர்களது பணியைத் தமிழக அரசு நிரந்தரமாக்கவும் அரசுப் பணியாளர்களுக்குரிய அனைத்து உரிமைகள், சலுகைகளும் அவர்களுக்குக் கிடைக்கச் செய்யவும் வேண்டும். சிறும (குறைந்தபட்ச) ஊதியச் சட்டப்படி தூய்மைப் பணியாளருக்கு மாத ஊதியமாக ரூ.25,000/- வழங்க வேண்டும்.

15.கொரோனா எதிர்ப்பின் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையிலும், புதிய வேலைவாய்ப்புகளைத் தோற்றுவிக்கும் வகையிலும், மருத்துவப் பணிக்கும் தூய்மைப் பணிக்கும் தேவையான காப்புறைகள், ஆய்வுக்கருவிகள், மூச்சுக்கருவிகள் ஆக்கம் செய்வதற்கான சிறப்புத் தொழில் அலகுகளை அவசரக்கால அடிப்படையில் நிறுவ வேண்டும்.

16.சமூக உணவாக்கக் கூடங்களைப் பரவலாக நிறுவி நோயெதிர்ப்புத் திறன் வளர்க்கும் ஊட்டச் சத்துள்ள உணவு கிடைக்கச் செய்ய வேண்டும். அம்மா உணவகங்களைப் பரவலாக்குவதோடு அம்மா உணவகப் பணியாளர்களுக்கும் சிறும ஊதியச் சட்டத்தைச் செயலாக்க வேண்டும்.

17.சென்ற மார்ச்சு 22ஆம் நாள் 'மக்கள் ஊரடங்கு' அறிவிக்கப்பட்டதிலிருந்து, குறிப்பாக 24ஆம் நாள் முழு அடைப்பு தொடங்கியதிலிருந்து மக்களின் அன்றாட வாழ்க்கை அடியோடு முடங்கிக் கிடக்கிறது. மக்களும் இதை ஏற்றுக் கொண்டு பெரும்பாலும் ஒத்துழைத்து வருகின்றனர். ஆனால் அன்றாடக் கூலிகள், குறையூதியக்காரர்கள் போன்றோரின் வாழ்க்கை இந்த முழுஅடைப்பினால் நூலறுந்த பட்டம் போலாகி விட்ட்து. ஆனால் மக்களுக்கு உருப்படியான துயர்தணிப்பு நடைபடிகள் ஏதும் இந்திய அரசாலோ மாநில அரசாலோ அறிவிக்கப்படவில்லை. அரசுகள் அறிவித்துள்ள அற்பசொற்ப உதவிகளும் அவற்றை வழங்கும் வழிமுறைகளும் மக்களின் இன்றியமையாத் தேவைகளுக்கும் கூடப் போதுமானவை அல்ல என்பதோடு முழுஅடைப்பின் நோக்கங்களுக்கும் உதவக் கூடியவை அல்ல. எனவே, அமைப்புசாரா உழைப்பாளர்களுக்கும் வேலையற்றோருக்கும் முழு அடைப்பு நீடிக்கும் ஒவ்வொரு நாளுக்கும் 500 ரூபாய் வீதம் வாழ்க்கைப் படியாக வழங்க வேண்டும். இந்தத் தொகையை முன்கூட்டியே மொத்தமாகக் கிடைக்கச் செய்ய வேண்டும். முழு அடைப்பு இப்போதைய அறிவிப்பையும் நீண்டு செல்வதால் வாழ்வூதியமாக குடும்பம் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.20,000 வீதம் வழங்க வேண்டும். வங்கிக் கணக்கின் வழியாக, அல்லது வங்கிக் கணக்கு இல்லா விட்டால் அரசே வங்கிக் கணக்கு தொடங்கிக் கொடுத்து இணையப் பரிமாற்றம் வழியாக இத்தொகையை வழங்க வேண்டும்.

18.முழு அடைப்பினால் விளைபொருள் வீணாகிப் பேரிழப்புக்கு ஆளாகியுள்ள உழவர் பெருமக்களுக்கு அரசுகள் இழப்பீடு வழங்குவதோடு, விளைபொருள் முழுவதையும் சரியான விலைக்குக் கொள்முதல் செய்யவும் பொறுப்பேற்க வேண்டும். உழவர்கள் பட்ட கடன் முழுவதையும் நீக்கம் செய்ய வேண்டும்.

19.இந்தியச் சேம வங்கி அறிவித்துள்ள கடன் சலுகைகள் பெரிதும் பெருங்குழுமங்களுக்கே போய் விடாமல் உழவுக்கும் சிறு, குறு தொழிலுக்கும் பயன்படுவதை உறுதி செய்ய வேண்டும். வீட்டுக் கடன், கல்விக் கடன், சொந்தக் கடன் உள்ளிட்ட அனைத்துவகைக் கடனுக்கும் திருப்பிச் செலுத்தும் மாதத் தவணைகளை குறைந்தது மூன்று மாதக் காலம் தள்ளி வைக்க வேண்டும். வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும். கடன் ஒத்திவைப்புக்கு சேம வங்கியின் பட்டும்படாத அறிவுறுத்தல்கள் போதுமானவை அல்ல என்பதால், இந்திய அரசே பொறுப்பேற்றுத் தெளிவான ஆணைகள் பிறப்பிக்க வேண்டும்.

20.அடைப்புக் காலத்திலும் தொடர்ந்து ஊதியம் பெறும் பிரிவினர் தவிர மற்றவர்களுக்கு வீட்டு வாடகையைத் தள்ளுபடி செய்ய வேண்டும் அல்லது மூன்று மாதக் காலத்துக்கு ஒத்தி வைக்க வேண்டும். வீட்டு உரிமையாளர்களுக்கு அரசே இதற்கான உறுதியும், தேவைப்படுமிடத்து இழப்பீடும் வழங்க வேண்டும்.

21.கொரோனா நெருக்கடியைக் காரணம் காட்டி அரசுகள் உரிய திட்டமிடல் இன்றி மேற்கொண்ட அடைப்பு நடவடிக்கைகளால் பெரிதும் அல்லலுற்றவர்கள் புலம்பெயர் தொழிலாளர்களே. 130 கோடி மக்களையும் மிகக் குறுகிய அவகாசத்தில் பூட்டியடைக்கும் திடீர் முடிவு படுமோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கக் கண்கிறோம். ஏழை எளிய மக்கள், அன்றாடங்காய்ச்சிகள், புலம் பெயர் தொழிலாளர்கள் நடந்து நடந்து களைத்துச் சோர்ந்தும், சோறும் நீரும் இல்லாமல் வாடி வதங்கியும் அவர்களில் சிலர் மடிந்தும் போன அவலம் கொடிது! இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு மாநிலங்களிலும் சிக்கிக் கொண்ட இவர்கள் அவரவர் தாயகம் திரும்ப முடியாமல் இன்றளவும் இன்னலுற்றுத் தவிக்கின்றார்கள். இந்த மானிடத் துயரத்துக்கு நடுவணரசும் மாநில அரசுகளுமே பொறுப்பு. நோய்த் தடுப்பு என்ற நோக்கத்தையே இந்த அரசுகள் கேள்விக்கிடமாக்கி விட்டதோடு, இதனால் வறியோர் கூட்டம் அனலிட்ட புழுவாய்த் துடிக்க நேர்ந்துள்ளது, இவ்வகையில் துயருற்ற மக்களுக்கு அரசுகள் பொறுப்புக் கூறுவதோடு

தக்க இழப்பீடும் வழங்க வேண்டும், வெளி மாநிலத்திலானலும் வெளி நாட்டிலானாலும் இன்னும் ஆங்காங்கே சிக்கிக் கொண்டுள்ள மக்களை கண்ணியத்துடனும் காப்புடனும் அவரவர் தாயகத்தில் கொண்டுசேர்க்க அரசுகள் வழிவகை செய்ய வேண்டும், ஈரான் போன்ற அயல்நாடுளில் சிக்கிக் கொண்ட இந்திய நாட்டவரைத் தனி வானூர்தி அனுப்பி அழைத்து வந்தது போல் இந்தியாவுக்குள் புலம்பெயர்ந்த இம்மக்களையும் அவரவர் இடத்துக்கு அனுப்பவோ அழைத்துக் கொள்ளவோ ஆவன செய்ய வேண்டும். கேரளம், மராட்டியம் போன்ற வெளி மாநிலங்களில் சிக்கியுள்ள தமிழ் உழைப்பாளர்களைத் தமிழ்நாட்டுக்குப் பாதுகாப்பாகத் திருப்பி அழைத்துவரத் தமிழக அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

22.தமிழகச் சிறைகளில் கொரோனா தொற்று பரவும் ஆபத்தைக் கருத்தில் கொண்டு அனைத்து வகை சிறைப்பட்டோரையும் காப்பு, பிணை அல்லது வேறு எவ்வகையிலேனும் விடுதலை செய்ய வேண்டும். அமைச்சரவை விடுதலை செய்ய முடிவெடுத்த பிறகும் சிறையில் தொடரும் தமிழர் எழுவர் உட்பட பத்தாண்டுக்கு மேல் சிறையில் கழித்த அனைவரையும் இந்தத் தருணத்திலாவது உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

23.அகதி முகாம்களில் அல்லது முகாம்களுக்கு வெளியே வாழ்ந்து வரும் ஈழத்தமிழர் உள்ளிட்ட ஏதிலியரின் நல்வாழ்வுக்கும் வாழ்க்கைக்கும் அரசு முழுப் பொறுப்பேற்க வேண்டும்.

24.கொரோனா நெருக்கடிக்கு எதிரான போராட்டத்தில் நல்வாழ்வுப் பணிகளுக்கும் சமூகத் துயர்தணிப்புப் பணிகளுக்குமான செலவையும், முழுஅடைப்பால் தொழில், வணிகம், பணிகள் முடங்குவதால் ஏற்படும் இழப்பையும் ஈடுசெய்யும் நிதிச் சுமையை நடுவணரசும் தமிழக அரசும் 75க்கு 25 தகவில் பகிர்ந்து கொள்ளலாம். மாநில அரசுக்குத் தரவேண்டிய சரக்குசேவை வரி மற்றும் கடன் நிலுவையை அடைத்து இந்த நேரத்துக்குத் தேவையான கூடுதல் செலவை ஈடு செய்வதோடு இணக்கச் சூழல் ஏற்படவும் வழி செய்ய வேண்டும்.

25.கொரோனாக் காலத்தில் தமிழக உரிமைகளைப் பறிக்க இந்திய அரசு செய்து வரும் முயற்சிகளுக்கு எதிராக தமிழக மக்களுக்கு விழிப்பூட்டவும், கொரோனா எதிர்ப்பு நடவடிகைகளில் அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்பையும் உறுதிசெய்யவும் தமிழக அரசு அனைத்துக்கட்சிகள், அமைப்புகள், சங்கங்கள், இயக்கங்களையும் அழைத்துப் பேச வேண்டும்.

தொடர்ச்சியான அடிப்படையில் ஒருங்கிணைப்பை உறுதி செய்யவும் வேண்டும்.

26.இந்திய அரசும் தமிழக அரசும் கொரோனாவுக்கு எதிராக நன்கொடை வழி நிதி திரட்டுவதில் பிழை இல்லை. அதே போது அரசு மற்றும் அரசுசார் பணியாளர்களிடம் வன்கொடைத் தண்டலாக இது மாறிவிடக் கூடாது என்று எச்சரிக்கிறோம். ஏற்கெனவே பொருளியல் நெருக்கடியால் துவண்டு கிடக்கும் உழைக்கும் மக்கள் மீது கொரோனாவைச் சாக்கிட்டுப் புதிய சுமைகள் ஏற்ற முயலக் கூடாது என்றும் எச்சரிக்கிறோம். இப்போதே சட்டப்படியான தலைமையமைச்சர் துயர்தணிப்பு நிதியம் இருக்க, புதிதாக பி.எம். கேர்ஸ் என்று அறக்கட்டளை தொடங்கி நிதி சேர்ப்பது தேவையற்றது, குடியாட்சியத்துக்குப் புறம்பானது. இந்த நெருக்கடியான நேரத்தில் பெருங்குழுமங்களுக்கும் பெருஞ்செல்வத்துக்கும் பெருவரி விதிக்கவும் பெருஞ்சொத்துகளை அரசே கைப்பற்றவும் வேண்டும்.

27.நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேவையான ஆக்கப் பணிகளுக்குத் தங்கள் அதிகாரத்துக்குட்பட்டு ஓரளவு உதவி செய்யும்படியான நிதியை இந்திய அரசு தட்டிப்பறித்துள்ள செயல் கண்டிக்கத்தக்கது. இவ்வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரிமையை மீட்டளிக்க வேண்டும்.

28.கொரோனா நெருக்கடியை முன்னிட்டு அரசு படைத்துறைக்கும் படைக் கருவிகளுக்குமான செலவைக் குறைத்து நல்வாழ்வுக்கான செலவைப் பன்மடங்கு கூடுதலாக்க வேண்டும். குறிப்பாக அமெரிக்காவிலிருந்து போர்த்தளவாடங்கள் கொள்முதல் செய்யும் முடிவைக் கைவிட வேண்டும்.

29.இத்துணை நெருக்கடியிலும் கொரோனாவின் முற்றுகைக்கு ஆளான பிற நாடுகளுக்கு இந்தியா இயன்ற வரை உதவ வேண்டும் என விரும்புகிறோம், அதே நேரத்தில் அயல் நாடுகளுக்கும் உலக வங்கி, பன்னாட்டுப் பண நிதியம் போன்ற நிறுவனங்களுக்கும் தர வேண்டிய கடன் வட்டி அனைத்துக்கும் இடைக்காலத் தடை கோரி இந்தியா உரிய முயற்சிகள் எடுக்க வேண்டும்.

30.கொரோனா நெருக்கடிக்கு முகங்கொடுக்க தேசிய மக்கள்தொகைப் பதிவேட்டுக்கான

கணக்கெடுப்புப் பணிகளை நிறுத்தி வைப்பதாக இந்திய அரசு அறிவித்ததை வரவேற்றோம். ஆனால் அதே அரசு சந்தடி சாக்கில் காசுமீரின் தன்னாட்சிக்கு எதிராகப் புதிய ஆணை பிறப்பித்திருப்பதைக் கண்டிக்கிறோம். கொரோனா நெருக்கடியில் குடியாட்சியம் முடக்கப்பட்டுள்ள நிலையில் அரசு புதிய அடக்குமுறை நடவடிக்கைகளைத் தவிர்த்து, எதிர்க்கட்சிகளோடும் குடிமக்களோடும் ஒரு மொழியா தேக்கநிலை உடன்பாட்டைக் (A Tacit Stand-still Agreement) கடைப்பிடிக்க வேண்டும்.

31.இவ்வாறே, நகரப்புற நக்சல்கள் என்று சட்ட வரையறைக்கு அப்பால் முத்திரை குத்தப்பட்டு, பீமா கொரேகான் - எல்கார் பரிசத் வழக்கில் சிறைப்படுத்தப்படாமல் வெளியே மீதமிருந்த ஆன்ந்த் தெல்தும்ப்டே, கௌதம் நவ்லக்கா ஆகிய இரு மாந்தவுரிமைச் செயற்பாட்டாளர்களுக்கும் உச்ச நீதிமன்றம் பிணை மறுத்து சிறையிலடைத்திருப்பது, அரசும் நீதிமன்றமும் கூடிச் செய்துள்ள பாசிச நகர்வே என்பதில் ஐயமில்லை. குடியரசுத்தலைவர் தமது சிறப்பதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த வழக்கை நீக்கம் செய்து இவர்களையும் இதே வழக்கில் சிறையிலுள்ள மற்றவர்களையும் விடுதலை செய்யக் கோருகிறோம்.

32.பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட 1897ஆம் ஆண்டின் தொற்று நோய்கள் சட்டத்துக்கு மாற்றாக, நோயாளர்கள், நல்வாழ்வுப் பணியாளர்கள், பொதுமக்கள் ஆகியோரின் உரிமைகளைக் காக்கும் வகையிலும் அரசின் கட்டற்ற அதிகாரத்தைக் கட்டுக்குட்படுத்தும் வகையிலும் புதிய சட்டம் இயற்ற வேண்டும்.

33.இந்திய அரசமைப்புச் சட்டத்தில் நல்வாழ்வு என்பதை அடிப்படை உரிமையாக்கும் வகையில் சட்டத்திருத்தம் செய்ய வழிவகை செய்ய வேண்டும்.
இந்தக் கோரிக்கைகளை முழுக்க முழுக்க மக்கள்நல நோக்கில் முன்வைக்கிறோம். இவற்றைச் செயலாக்குவதில் ஆட்சியாளர்களோடு முழுமனதாக ஒத்துழைக்க அணியமாக உள்ளோம். இவற்றை மக்கள் கோரிக்கைகளாக மாற்றுவதில் அனைவரின் ஆதரவும் தோழமையும் நாடுகிறோம்.

## கவன ஈர்ப்பு இயக்கம்:

**2020 ஏப்ரல் 26 ஞாயிறு மாலை 5.30**

**கொரோனா நெருக்கடியையும் அது தொடர்பான ஊரடங்கையும் ஒட்டித் தமிழக மக்கள் நலன் கருதி கீழ்க்காணும் கோரிக்கைகளை இந்திய அரசின் கவனத்துக்குக் கொண்டுசெல்லும் பொருட்டு எதிர்வரும் 26. 04. 2020 ஞாயிறு மாலை 5 முதல் 5.30 வரை கோரிக்கை எழுதிய அட்டைகளோடும் கறுப்புத் துணிகளோடும் அவரவர் வீட்டு வாயிலில் உரிய இடைவெளியுடனும் பாதுகாப்புடனும் நிற்கும் படி தமிழக மக்களை வேண்டிக் கொள்கிறோம்.**

**கவன ஈர்ப்புக் கோரிக்கைகள்**

**இந்திய அரசே!**

கொரோனா நெருக்கடியை வெல்ல - பசியிலிருந்து மக்களை காக்க,

உடனே 5 இலட்சம் கோடி நிதி ஒதுக்கு!

நிரம்பி வழியும் இந்திய உணவுக் கிடங்கைத் திறந்து உணவு தானியங்களை மூன்று மாதங்களுக்கு இலவசமாக மக்களுக்கு வழங்கு!

ஒவ்வொரு குடும்பத்திற்கும் மூன்று மாதங்களுக்கு மாதம் ரூ.6,000 வழங்கு!

மாநில அரசுக்குத் தேவையான நிதி வழங்கு!

மருத்துவர்கள், செவிலியர்கள், நல்வாழ்வுப்பணியாளர்களுக்குப் பாதுகாப்புக் கருவிகள் கொடு!

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தித் தமிழகம் தழுவிய அளவில் வருகிற ஏப்ரல் 26 ஞாயிறு மாலை 5.30 மணியளவில் நடைபெறும் கவன ஈர்ப்பு இயக்கத்தில் அவரவர் வீட்டு வாசலிலோ மாடியிலோ அட்டை, தாள், அல்லது சிலேட்டில் கோரிக்கைகளைச் சுருக்கமாக எழுதிக் கறுப்புத் துணிகளுடன் கவன ஈர்ப்பு இயக்கத்தில் பங்கு பெற அழைக்கிறோம்.

**1.தியாகு**

பொதுச்செயலாளர், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

**2.வழக்கறிஞர் சி. ராஜு**

**மாநில ஒருங்கிணைப்பாளர், மக்களதிகாரம்**

**3.கோவை கு. இராமகிருட்டிணன்**

**தலைவர், தந்தை பெரியார் திராவிடர் கழகம்**

**4.திருமுருகன் காந்தி**

**ஒருங்கிணைப்பாளர் மே 17 இயக்கம்**

**5.சிவ, செந்தமிழ்வாணன்,**

பொதுச்செயலாளர், தமிழ்த் தேசக் குடியரசு இயக்கம்

**6.பாலன்**

பொதுச்செயலாளர் தமிழ்த் தேச மக்கள் முன்னணி

**7.நாகை. திருவள்ளுவன்**

தலைவர் தமிழ்ப் புலிகள் கட்சி

**8.கொளத்தூர் தா.செ. மணி,**

**தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்**

**9. குடந்தை அரசன்**

**தலைவர் விடுதலைத் தமிழ்ப் புலிகள் கட்சி**

**10.சிதம்பரநாதன்**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி - மக்கள் விடுதலை

11.**வாஞ்சிநாதன்**

மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையம்

12.**சௌ. சுந்தரமூர்த்தி**

தமிழர் விடுதலைக் கழகம்

**13.கே.பி. மணிபாபா**

தமிழக வாழ்வுரிமைப் பாதுகாப்பு மக்கள் கட்சி

---

## கொரோனாவை வெல்வோம்!

**தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்**

**முகநூல் நேரலையில் தொடர் பொழிவுகள் -- இது வரை**

| எண் | நாள் | தலைப்பு | பொழிவாளர் |
|---|---|---|---|
| 1 | 2020 மார்ச்சு 31 | கொரோனாவை வெல்வோம்! நல்வாழ்வுக் கோரிக்கைகள் | தோழர் தியாகு |
| 2 | 2020 ஏப்ரல் 4 | கொரோனாவும் பொருளியல் நெருக்கடியும் | தோழர் சமந்தா |
| 3 | 2020 ஏப்ரல் 6 | கொரோனாவை வெல்வோம்! பொருளியல் கோரிக்கைகள் | தோழர் தியாகு |
| 4 | 2020 ஏப்ரல் 9 | கொரோனா எதிர்ப்புப் போரில் நமது பங்கு | தோழர் சிலம்புச்செல்வன் |
| 5 | 2020 ஏப்ரல் 11 | கொரோனாவின் அரசியல் | தோழர் தியாகு |
| 6 | 2020 ஏப்ரல் 13 | அன்றாடங்காய்ச்சிகளின் அவலநிலை - அரசுகளின் கவனத்துக்கு | தோழர் மகிழன் |
| 7 | 2020 ஏப்ரல் 15 | கொரோனாவும் தமிழக உரிமைகளும் | தோழர் தியாகு |
| 8 | 2020 ஏப்ரல் 18 | கொரோனாவும் சட்ட உரிமைகளும் | தோழர் நா. கதிர்வேல் |
| 9 | 2020 ஏப்ரல் 20 | கொரோனாவும் சூழலியலும் | தோழர் தியாகு |
| 10 | 2020 ஏப்ரல் 22 | கொராானோவும் உழவர் துயரமும் | தோழர் அருண் மாசிலாமணி |

சமந்தா

## பாஜக அரசு கைகழுவியது கொரோனாவையா? மக்களின் பொருளாதாரத்தையா?

உலகளவிலும் சரி, இந்தியாவிலும் சரி பொருளாதாரச் சரிவை, பெருமந்தமாக்கிய உச்சப்புள்ளிதான் கொரோனாவே தவிர, கொரோனாவினால் மட்டுமே பெருமந்தம் வரவில்லை. முதலாளித்துவமும், பாஜக அரசும் தம் வசதிக்கேற்ப எல்லா அரசியல் பொருளாதாரப் பிரச்சனைகளுக்குமான பழியையும் கொரோனாவின் தலையில் கட்டும் விதமாகத்தான் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். தற்பொழுது ஏற்பட்டுள்ள மந்தநிலை 2009இல் ஏற்பட்டதைக் காட்டிலும் மோசமாக இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கிறது. பெருமந்தத்தின் விளைவாக உலகப் பொருளாதாரம் 2009இல் 0.6% சுருங்கியதாகவும், கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கத்தால் உலகப்பொருளாதாரத்தில் 1.5% அளவிற்குச் சரிவு ஏற்படலாம் எனவும் தெரிவித்துள்ளது.

கொரோனாவைச் சாக்கிட்டு மக்கள்-போராட்டங்களை முடக்கியதிலும், இனிமேல் எல்லா அரசியல் பொருளாதார பழிகளையும் கொரோனாவின் மீது போட்டு விடலாம் என்பதிலும் பாஜகவுக்கு இரட்டை மகிழ்ச்சி.

திசம்பரிலிருந்தே கொரோனா சீனாவில் மையங்கொண்டுள்ள நிலையில், அருகிலுள்ள மக்களடர்த்தி அதிகம் கொண்ட இந்திய நாட்டின் அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்து கொரோனாவை எதிர்கொள்ளத் தயார்நிலையில் இருந்திருக்க வேண்டும். ஆனால் பாஜக அரசு ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கைகளில் ஆழ்ந்திருந்தது. பொருளாதாரம் சரிந்து மக்களின் பணப் புழக்கமும், நுகர்வும் குறைந்த நிலையில், கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காக எந்த முன்னேற்பாடும் செய்யாமல் திடீரென்று மார்ச் 24 நள்ளிரவில் மோடி ஊரடங்கு உத்தரவிட்டார். குறைந்தபட்சம் 21 நாட்களுக்கு மக்கள் உயிருடன் இருக்க வேண்டும் என்பதைப் பற்றிக்கூட சிந்திக்காமல் மார்ச் 25 முதல் 21 நாட்களுக்குக் கண்மூடித்தனமாக ஒரு முழு அடைப்பை அறிவித்திருக்கிறார்கள். எப்பொழுதும் மேல்தட்டையே கவனிக்கும் பாஜக அரசு அன்றாடங்காய்ச்சிகள், தினக்கூலிகளைப் பற்றியோ, புலம்பெயர் தொழிலாளர்களைப் பற்றியோ யோசிக்காததில் ஆச்சரியமில்லை. பணமுள்ளவர்கள் தேவையானதை வாங்கி முடக்கிவைத்துள்ளனர். எளிய மக்கள் வாங்க இயலாத வண்ணம் ஊகவாணிகத்தையே இதனால்

பாஜக அரசு ஊக்குவித்துள்ளது. பட்டினியால் இறக்கட்டும், கொரோனாவினால் இறக்க வேண்டாம் என விட்டுவிட்டார்களா என்ன?.. மக்கள் சோற்றுக்கு வழியில்லாமல் பட்டினி கிடந்தால் அவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து நோய்தாக்கம் அதிகரிக்கும் என்ற அடிப்படை அறிவு கூட இல்லாதவர்கள் எதற்காக ஆட்சி செய்ய வேண்டும்? முன்பே அனைவருக்கும் பொது விநியோக முறையில் உணவுப் பொருட்களை விநியோகித்து அதன் பிறகு ஊரடங்கு உத்தரவை பிறப்பித்திருக்க வேண்டும்.வேற்று மாநிலத் தொழிலாளர்களை பாதுகாக்குமாறு மாநிலங்களை அறிவுறுத்தி அதற்கான நிதியையும் வழங்கியிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் கோடிக்கணக்கான தொழிலாளர்களை சாவின் விளிம்பிற்குத் தள்ளி அலைக்கழித்திருக்கிறார்கள். அரசின் ஆதரவின்றி அகதிகளாக விரக்தியுற்று அவர்கள் கால்நடையாகச் சென்று கொண்டிருக்கும் போது 5 நாட்களுக்குப் பிறகு மார்ச் 30ஆம் தேதி, நடுவழியில் அவர்களை நிறுத்தி, வெளிமாநிலத் தொழிலாளர்கள் சொந்த ஊர் திரும்புவதைத் தடுக்க அனைத்து மாநில எல்லைகளையும் மூட வேண்டும் என்றும், பதினான்கு நாட்கள் தனிமுகாம்களில் அவர்களை அடைக்க வேண்டும் என்றும் மாநிலங்களுக்குக் கட்டளையிட்டுள்ளனர். குற்றம் செய்தது மோடி அரசு, தண்டிக்கப்பட்டதோ தொழிலாளர் வர்க்கம். மக்கள் வேலைக்குத் திண்டாடிய பொழுதெல்லாம் நூறு நாள் வேலைத் திட்டத்தை கண்டு கொள்ளாமல் நிதியை வெட்டிய பாஜக அரசு தற்பொழுது அதற்கான கூலியில் வெறும் 20 ரூபாய் அதிகரித்து, ஊரடங்கை அறிவித்த பிறகு நிலுவைத் தொகையில் ரூ.4 ஆயிரத்து 431 கோடியை விடுவித்துள்ளது. ஏப்ரல் 10 தேதிக்குள் மொத்த நிலுவையான ரூ.11ஆயிரத்து 499 கோடியையும் விடுவிப்பதாக வாக்குறுதி அளித்துள்ளனர்.

பேரிடர் துயர்தணிப்பு நிதி, கனிம வளமுள்ள மாநிலங்கள் பெறும் கனிம நிதியம், கட்டுமானத் தொழிலாளர்களுக்கான துயர்தணிப்பு நிதி ஆகியவற்றின் மூலம் பெறப்பட்ட தொகையை தற்பொழுது துயர்தணிப்புக்குப் பயன்படுத்துமாறு மத்திய அரசு, மாநிலங்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.இவற்றைப் பயன்படுத்துவதற்கான உரிமை மாநிலங்களிடம் ஏற்கெனவே உள்ள போது அதில் மத்திய அரசின் பங்கு புதிதாய் எதுவும் இல்லை.

கொரோனா தாக்குதலிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக ரூ.1.70 லட்சம் கோடி மதிப்பிலான பொருளாதார நிதித்தொகுப்பை அளிப்பதாக நிதியமைச்சர் தெரிவித்தார். பொது விநியோக முறையின் பயனாளர்களுக்குக் கூடுதலாக 5 கிலோ தானியமும், 1கிலோ பருப்பும்

வழங்கப்படும். மூத்தக் குடிமக்கள் மற்றும் விதவைகளுக்கு மூன்று மாதங்களுக்கும் சேர்த்து ரூ.1,000 வங்கிக் கணக்கில் செலுத்த உள்ளதாகவும் குறிப்பிட்டார். அதாவது மாதத்திற்கு வெறும் 330 ரூபாய் அளிக்கப்படவுள்ளது. ஒரு நாளைக்கு 11 ரூபாயை வைத்து என்ன செய்ய முடியும்? பிரதமர்-விவசாயத் திட்டத்திற்கான முதல் தவணை ரூ. 2000 ஏப்ரல் 1இல் வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார். அடுத்த மூன்று மாதங்களுக்கு ஜன்தன் கணக்கு வைத்திருக்கும் பெண்களுக்கு மாதத்திற்கு ரூ. 500 அளிக்க உள்ளதாகவும், பிரதான் மந்திரி உஜ்வாலா திட்டத்தின் பயனாளிகளுக்கு மூன்று மாதங்களுக்கு இலவச எல்பிஜி சிலிண்டர்கள் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். இதுதான் அவர்கள் வழங்கியுள்ள துயர்தணிப்பு. இந்த உதவியையும் ஏற்கெனவே உள்ள திட்டங்களின் பயனாளிகள் மட்டுமே பெற முடியும். இத்திட்டங்களின் பயனாளராக இல்லாத எவருக்கும் எந்த உதவியும் கிடைக்காது. இயல்பான நாட்களில் கூட இதனால் எந்த அளவுக்கு மக்கள் உதவி பெறுவர் என்பது கேள்விக்குறியே.

பிரதமரின் கரீப் கல்யாண் திட்டத்தின் கீழ் கொரோனா தொற்றைத் தடுக்கப் போராடி வரும் சுகாதாரப் பணியாளர்களுக்குக் காப்பீட்டுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. மருத்துவ ஊழியர்களுக்கு முறையான பாதுகாப்பு வசதிகள் செய்து தராமல், கொரோனாவினால் பாதிக்கப்பட்டால் காப்பீட்டு நிவாரணம் தருவோம் என்பது என்ன மாதிரியான வழிமுறை? வருமுன் காக்கும் அடிப்படையில் பாஜக எதையும் செயல்படுத்தவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

இந்த துயர்தணிப்புத் திட்டங்களை பாஜக அரசின் காலங்கடந்த ஞானோதயம் என்று யாரேனும் நினைத்தால் அது தவறு. அவர்களின் திட்டம் என்ன? துயர்தணிப்பு (நிவாரணம்) அளிப்பது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்த வேண்டும் ஆனால் அளிக்கக் கூடாது என்பது தான். இல்லையென்றால் எதற்காகச் செயல்படுத்த முடியாத ஒரு நிலையை உருவாக்கி பெயரளவில் இவற்றை அறிவித்துள்ளனர்? பொது விநியோக ஊழியர்கள் ஊரடங்கு முடிந்தவுடன் விநியோகம் செய்வதாகவே தெரிவித்துள்ளனர். அதனால் எதற்காக இத்திட்டத்தை அறிவித்தார்களோ அதைச் செயல்படுத்த முடியாத நிலைமையை ஏற்படுத்தியே அறிவித்துள்ளார்கள். நிதிப் பற்றாக்குறை அதிகமானால் பங்குச்சந்தை சரியும். கார்ப்பரேட் நண்பர்கள் கோபித்துக் கொள்வார்கள் என்பதே பாஜக அரசின் கவலையாக உள்ளது.

ரிசர்வ் வங்கி கடன் தவணைகளை செலுத்துவதற்கான காலத்தை மூன்று மாதம் நீட்டித்துள்ளது.

வருங்கால வைப்பு நிதிகளில் 75 சதவீதம் வரை பெற்றுக் கொள்ள அனுமதியும் அளித்துள்ளது. 5.15 சதவீதமாக இருந்த வங்கிக் கடன் வீதத்தை ரெப்போ' 0.75% குறைத்து 4.4% ஆக நிர்ணயித்துள்ளது. ரிவர்ஸ்-ரெப்போ வீதத்தை 0.90% குறைத்து 4%ஆக நிர்ணயித்துள்ளது. இதனால் சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டிவிகிதமும் குறைக்கப்பட்டுள்ளது. வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி 7.1 சதவீதமாகவும், தேசிய சேமிப்புப் பத்திரத்திற்கான வட்டி 6.8% ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது. மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டத்திற்கு, வட்டி விகிதம் ஆண்டுக்கு 8.6 சதவீதத்திலிருந்து 7.4 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு உரிய அளவில் நிதி ஒதுக்காமல், ரிசர்வ் வங்கியின் பணக் கொள்கையில் மாற்றம் கொண்டுவருவதன் மூலம் மட்டுமே பொருளாதார மந்தத்தை சரிசெய்ய இயலாது.

நுகர்வோர் குறியீடு அடிப்படையிலான சில்லறை பணவீக்கம் ஃபிப்ரவரியில் 7.59 % உயர்ந்துள்ளது. உணவுப்பொருட்களின் விலைவாசி 10.81% சதவீதம் உயர்ந்துள்ளது. அதில் தானியப் பொருட்களின் விலைவாசி 5.23%, காய்கறி விலைவாசி 31.61% உயர்ந்துள்ளது. பருப்பு வகைகளின் விலை 16.61% உயர்ந்துள்ளது. மீன் இறைச்சியின் விலை 10.2%, முட்டை விலை 7.28% உயர்ந்துள்ளது. இந்தியாவின் சராசரி பணவீக்கம் 6.58 % ஆகவும் தமிழ் நாட்டில் 7.4% ஆகவும் உள்ளது.

தொழில்துறை உற்பத்திக் குறியீட்டு அறிக்கையின் (ஐஐபி) படி 2020 ஜனவரி மாதத்திற்கான தொழில்துறை உற்பத்தியானது சென்ற ஆண்டைக் காட்டிலும் 2% உயர்ந்துள்ளது. ஏப்ரல்-ஜனவரி 2019-20 காலகட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி முந்தைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது 0.5 சதவீதமாக உள்ளது. சென்ற நிதி ஆண்டின் (2018-19) ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும் போது சுரங்கத்துறை (4.4%), உற்பத்தித்துறை (1.5%) மற்றும் மின்சாரத் துறை (3.1%) வளர்ச்சி பெற்றுள்ளது. 2019-20இல் இந்த மூன்று துறைகளிலும் ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான ஒட்டுமொத்த வளர்ச்சி முறையே சுரங்கத் துறையில் 1.0 % ஆகவும், உற்பத்தித் துறையில் 0.3% ஆகவும் மற்றும் மின்சாரத் துறையில் 0.9% ஆகவும் உள்ளது.

உற்பத்தித் துறையில் இருபத்துமூன்று தொழில்வகைகளில் 12 தொழிற்குழுக்கள் 2020 ஜனவரி மாதத்தில் எதிர்மறை வளர்ச்சி காட்டியுள்ளன. அதாவது வளராமல் தேய்ந்துள்ளன. அனைத்தை விடவும் 'புகையிலைப் பொருட்களின் உற்பத்தி' 22.8 % உயர்ந்துள்ளது. 'அடிப்படை

உலோகங்களின் உற்பத்தி' 14.1 சதவீதமும், 'அறைகலன்களின் உற்பத்தி' 9.0 சதவீதமும் உயர்ந்துள்ளது. 'பதிவுசெய்யப்பட்ட ஊடகங்களின் அச்சிடுதல் மற்றும் மறு உற்பத்தி ' -16.3%, உணவுப்பொருட்களின் உற்பத்தி (-)0.9%, 'கணினி, மின்னணு மற்றும் ஒளியியல் தயாரிப்புகளின் உற்பத்தி' (-)11.6%, உலோகப் புனைபொருட்களின் உற்பத்தி (-)7.2% மற்றும் 'மோட்டார் வாகனங்களின் உற்பத்தி' (-)10.6% குறைந்துள்ளன. ஏப்ரல்-ஜனவரி வரையிலான உலோகப் புனை பொருட்களின் உற்பத்தி (-)13.1%, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி (-)10.2 %, மின் உபகரணங்களின் உற்பத்தி (-) 2.5%, ஜவுளித்துறையில் உற்பத்தி (-)1.9% குறைந்துள்ளன.

பயன்பாட்டு அடிப்படையில் மூலதனப் பொருட்களின் உற்பத்தி (-)4.3%, உள்கட்டமைப்பு / கட்டுமானப் பொருட்களின் உற்பத்தி (-)2.2%, நீடித்த நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி (-)4.0% மற்றும் உடனடி நுகர்வு பொருட்களின் உற்பத்தி -0.3% குறைந்துள்ளது. முதன்மைப் பொருட்களின் உற்பத்தி 1.8%, இடைநிலைப் பொருட்களின் உற்பத்தி 15.8% வளர்ச்சி பெற்றுள்ளது. கடந்த இரண்டு மாதங்களில் எஃகு உற்பத்தியின் அளவும் 8.56 மில்லியன் டன்னாக சரிந்துள்ளது. அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் ஜவுளித்துறையின் ஏற்றுமதியும் குறைந்துள்ளது.
நாட்டின் பொருளாதாரத்தில் 75% முடக்கப்பட்ட நிலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கடும் வீழ்ச்சி ஏற்படும் எனவும், 2021ல் மொத்தப் பொருளுற்பத்தியின் மதிப்பு 3.5% குறையும் எனவும் மத்தியப் புள்ளியியல் அமைப்பின் ஆய்வாளர்கள் கணக்கிட்டுள்ளனர். உற்பத்தித் துறையில், உணவு பதப்படுத்துதல், மருந்துத் தொழில்கள் மட்டுமே செயல்பட அனுமதிக்கப்படுவதாலும், பொறியியல் துறை, உலோகத் துறை போன்ற பிற பிரிவுகளும் செயல்பாடுகளை நிறுத்தி விட்டதாலும் உற்பத்தி 70 சதவீதம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மொத்த உற்பத்தியில் உணவு, பானங்கள் மற்றும் புகையிலை ஆகியவற்றின் உற்பத்தி 10 % பங்கையே வகிக்கின்றன.

இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் --- ஆட்டோமொபைல்கள், நுகர்வோர் பொருட்கள் மற்றும் மூலதனப் பொருட்கள் --- மொத்த உற்பத்தித் துறையில் சுமார் 20% ஆகவும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.7 %ஆகவும் பங்கு வகிக்கின்றன. ஒட்டுமொத்தமாக, உற்பத்தித்துறை, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 16.1 சதவீதமாக உள்ளது. பொருளாதார முடக்கத்தால் உற்பத்தியில் மொத்த இழப்பு ரூ. 6 டிரில்லியன் ஏற்படலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் பரவுவதை விரைவாகக் கட்டுப்படுத்தினாலும் தொழில்துறை மீண்டு

வருவதற்கு 9 மாதம் ஆகும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

ராபி பயிர்களின் அறுவடையும் பாதிக்கப்பட்டுள்ளதால் நான்காம் காலாண்டில் உணவு உற்பத்தி அதிகமாகும் என்ற நம்பிக்கையும் பொய்யாக உள்ளது. ஏற்கெனவே 45 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு வேலையின்மை 6.1%ஆக அதிகரித்த நிலையில், தற்போது வர்த்தகத்துறை,சுற்றுலாத்துறை, சேவைத்துறை எனப் பெரும்பாலானத் துறைகள் முடங்கியதால் பல கோடி மக்கள் வேலை இழக்கும் அபாயம் உள்ளது.சுற்றுலாத் துறையில் மட்டுமே 3.8 கோடி பேர் வேலையை இழக்க உள்ளனர்.

சிறு, குறு தொழில் நிறுவனங்களும், சிறு உற்பத்தியாளர்கள், சிறு வணிகர்கள் சுய தொழில் முனைவோர், விவசாயிகள் நிதிநெருக்கடியால் பாதிக்கும் அவலம் ஏற்பட்டுள்ளது.

பொருளாதார சரிவினாலும் கொரோனா அச்சுறுத்தலாலும் பெருமளவில் நிதிமூலதனம் நாட்டை விட்டு வெளியேறியுள்ளது. இதனால் கச்சா எண்ணெய் பீப்பாய்க்கு 25 டாலருக்கும் குறைவாக வீழ்ந்துள்ள காலகட்டத்திலும் கூட ரூபாயின் மதிப்பு அமெரிக்க டாலருக்கு 76 என்ற அளவுக்கு மேல் வீழ்ந்துள்ளது. கச்சா எண்ணெயின் விலை வீழ்ச்சியடைந்தாலும் இந்தியாவில் பெட்ரோல், டீசல் மீதான கலால் வரியை லிட்டருக்கு 3 ரூபாய் உயர்த்தியுள்ளது மத்திய அரசு. கலால் வரி வரம்பு பெட்ரோலுக்கு ரூ.18ஆகவும், டீசலுக்கு ரூ.12 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. பொருளாதர மந்த நிலையிலும், பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில் கச்சா எண்ணெய் விலைக் குறைவின் பலன் மக்களுக்குக் கிடைக்க விடவில்லை பாஜக அரசு. சுங்கவரியின் மூலமும் பெட்ரோல், டீசல் விற்பனையின் மூலமும் மக்களின் வரிப்பணத்தில் பல இலட்சம் கோடிகளை மத்திய அரசு அபகரித்துள்ளது. அதையெல்லாம் மக்களுக்கு துயர்தணிப்பு உதவி வழங்க பாஜக அரசுக்கு மனம் வருமா?. பெருமுதலாளிகளுக்கு வரித் தள்ளுபடி, கடன் தள்ளுபடி என பல இலட்சம் கோடிகளை சலுகைகளாக அள்ளி இரைத்தது பாஜக அரசு. அவர்களை வளம் உருவாக்குபவர்கள் எனப் போற்றியது. இப்பொழுது எங்கே அந்த வளம் உருவாக்குபவர்கள்? கொரோனா அச்சுறுத்தலிலிருந்து மக்களுக்கு துயர்தணிப்பு அளிப்போம் என்று அவர்கள் வாய் திறக்கவும் இல்லை. பொருளாதாரத்தை மந்த நிலையிலிருந்து மீட்டெடுக்கவும் முன்வரவில்லை. ஊரடங்கு அறிவித்த ஐந்து நாட்களுக்குப் பிறகே ஒருவர் பின் ஒருவராக சில கோடிகளை விட்டெறிந்து, வாழ்நாள் வள்ளல் பட்டத்தைப் பெற்று செல்கிறார்கள். ஆனால் வாழ்நாள் முழுவதும் அவர்கள் அடிப்பது என்னவோ பெருங்கொள்ளை மட்டும் தான். அவர்களைக் குற்ற நடவடிக்கைகளிலிருந்து காப்பதற்குத்தானே பாஜக அரசு உள்ளது! சமீபத்தில்

நிறுவனச் சட்டத்தில் பாஜக அரசு கொண்டுவந்துள்ள திருத்தமும் அதன் ஒரு பகுதி தானே! பெருமுதலாளிகள் அளித்த கோடிகளும் பெறுநிறுவன சமூகப் பொறுப்பு வரியின் ஒரு பகுதியாகவே உள்ளது என்பதால் அவர்கள் ஒரு பைசா கூட நன்கொடை வழங்கவில்லை என்பதையும் இங்கு அடிக்கோடிட்டுக் குறிப்பிடவேண்டும்.

கொரோனா வைரஸ் தொற்றைத் தடுப்பதற்கான செலவுகளுக்கு நிதி பெறுவதற்காக என்று மக்களிடமிருந்து மேலும் அபகரிக்க மோடி 'பிரதமர் கேர்ஸ்' என்ற புதிய நிதியத்தை உருவாக்கியுள்ளார். பேரிடர் துயர்தணிப்புக்காக பிரதமர் தேசியத் துயர்தணிப்பு நிதி என்று ஏற்கெனவே ஒன்று இருக்கும் போது தற்போது எதற்காக 'பிரதமர் கேர்ஸ்' என்ற புதிய அறக்கட்டளையை உருவாக்க வேண்டும் என எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கொரோனாவைக் கை கழுவதாகக் கூறி மக்களையும், பொருளாதாரத்தையும் கைகழுவிய பாஜக அரசுதான் சமூக விலகலைத் தீவிரமாகக் கடைப்பிடித்துள்ளது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

---

**நா, கதிர்வேல்**

## கொரோனாவும் சட்ட உரிமைகளும்:

கொரோனா எனும் தொற்று நோய் உலகெங்கிலும் மனிதர்கள் வழியாகப் பரவி அமெரிக்கா, ஸ்பெயின், பிரிட்டன், பிரான்சு உள்ளிட்ட வல்லரசுகளையே ஆட்டிப் படைக்கிறது. மனிதர்களைக் காவு கொள்கிறது. இறப்பு எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகுவதாக தமிழக ஊடகங்களிலும் ஏடுகளிலும் செய்திகள் வெளிவருகின்றன. இந்தியாவிலும் கொரோனா எனும் தொற்றுநோய் அனைத்து தேசிய இனங்களிடையிலும் (அனைத்து மாநிலங்களிலும்) பரவி வருகிறது. இதனால் 20.3.2020 ல் ஒன்றிய அரசு ஊடரங்கு அறிவிப்பு அறிவித்தது. மாநில அரசுகளும் அறிவித்தன. அதன் பின் மாநில அரசுகள் நடந்து கொள்ளும் விதம் வெறும் சமூக விலகல், ஊடரங்கு மூலம் மக்களை வீட்டிலிருக்க சொல்லியிருப்பதுதான். இதனால் ஏழை எளிய அன்றாடங்காய்ச்சிகள், அமைப்புசாராத் தொழிலாளர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், அலைகுடிகள், வீடற்ற நிலையில் சாலையோரம் வசிப்போர், பிச்சைக்காரர்கள் அனைத்து மக்களும் வாழ்வாதாரம் இழந்து தவிக்கிறார்கள் .

போதுமான துயர்தணிப்பு உதவிகள், பண உதவிகள், குடிநீர் , உணவின்றி பட்டினிச் சாவு பெருகி விடுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது .இயற்கை எழிலுடன் அமைந்துள்ள அழகர்கோவிலில் குரங்குகள் அதிகம். மனிதர்கள் செல்வது தடைப்பட்டதால் ஏராளமான குரங்குகள் உணவின்றி இறந்து போகின்றன. இயற்கை மட்டும் மனிதர்களின்றித் தற்காத்துக்கொண்டு புத்துயிர் பெற்று வருகிறது. ஆறுகள், ஏரிகள், அருவிகள், கடல், இயற்கைப் பேரருவிகள் தூய்மை அடைந்து வருகின்றன. புகையற்ற நஞ்சில்லாக் காற்றும் கிடைக்கிறது. விலங்குகள் சுதந்திரமாக உலகெங்கிலும் நகருக்குள் நடை போடுகின்றன.

இந்தியா பிரித்தானியக் காலனி ஆதிக்கத்தின் கீழிருந்த காலம், அதற்கு முன்னர் டச்சுக்காரர்கள் போர்ச்சுகீசியர்கள் படையெடுப்பின் காலம் முதற்கொண்டே தொற்று நோய்கள் மக்களையும், படையெடுத்து வந்தவர்களையும் பாதித்துள்ளன. ஏராளமான மாந்த உயிர்கள் பறிபோயுள்ளன. போர்ச்சுகீசியர்கள் 1510இல் நுழைந்து வணிகம் தொடங்கிய போதிருந்தே இந்தியாவில் தொற்றுநோய் இறப்புகள் அதிக எண்ணிக்கையில் நிகழ்ந்தன. காசநோய், மலேரியா, காலரா, பெரியம்மை, இன்புளுவென்சா, டைபாய்டு போன்ற நோய்கள் அதிகம் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இங்கிலாந்தில் இல்லாத நோய்கள் இந்தியாவில் ஆங்கிலேயருக்கு வந்து, அவர்கள் ஏராளமாய் இறந்து போனார்கள். இந்நாட்டில் 19ஆம் நூற்றாண்டில் பெரியம்மை, காலரா வெகுவாக மக்களை பாதித்தன. ஊட்டச்சத்து இல்லாமை, அறியாமை, மக்கள்தொகைப் பெருக்கம் இவற்றால் இறப்பு எண்ணிக்கை கூடியது . காலராவைப் பொறுத்த அளவில் நோய் பரவலானதற்கும் ஏழை எளிய மக்கள் மடிந்ததற்கும் பிரித்தானியக் காலனி அரசே காரணம். தானியங்களைக் கொள்ளையடித்துச் சென்றதால் இந்தியாவில் பஞ்சம் ஏற்பட்டது. அதன் காரணமாகவே நோயும் ஏற்பட்டது . மேலும் பிரித்தானியக் காலனி ஆதிக்கத்தில் இந்தியாவில் அதிகாரம் செய்ய வந்த பிரித்தானியருக்கும் காலரா முதலான நோய்கள் வந்தன.

தமிழகத்தை பொறுத்த வரை அம்மை நோய் மாரியம்மனின் கோபத்தால் வருவதாக இன்றளவும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள் .மாரியம்மன் கோவிலுக்கு நேர்ந்து கொண்டு மா விளக்கு ஏற்றுவது , மதுரை மாரியம்மன் கோவிலில் மட்டுமின்றி தமிழகம் முழுவதும் மாரியம்மன் கோவில்களில் நடைபெறுகிறது. காலனியாதிக்கக் காலத்திலும் சாதியப் பாகுபாடு

என்பது மதக் கொள்கையாக இருந்தது. இதனால் ஒடுக்குண்ட மக்கள் மற்றவர்களைக் காட்டிலும் தொற்றுநோய்களால் கூடுதலாகத் துயருற்றனர்.

பம்பாய் (இன்றய மும்பை) மாகாணத்தில் 19ஆம் நூற்றாண்டுக் கடைசியில் பபோனிக் பிளேக் எனும் தொற்றுநோய் பரவியது. இதன் காரணமாக 1897ஆம் ஆண்டு தொற்றுநோய்கள் சட்டம் (Epidemics Act, 1897) கொண்டுவரப்பட்டது. அச்சட்டத்தின்படி, தொற்றுநோய் பரவாமல் தடுப்பதற்காக மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இச்சட்டத்தை மதிக்காமல் நடப்பவர்கள் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 188இன் படி தண்டிக்கப்படுவார்கள். இந்தச் சட்டம் 123 ஆண்டு காலமாக இன்றைக்கும் நடைமுறையில் உள்ளது. காலனி ஆதிக்கக் காலத்தில் இயற்றப்பட்ட சட்டம் 123 ஆண்டுகளுக்குப் பின்னும் அப்படியே உள்ளது. திருத்தங்களோ புதிய சட்டமோ இயற்றப்படவில்லை அன்றைய கால கட்டத்தில் விடுதலைப் போராட்ட வீரர் பாலகங்காதர திலகர் தனது கேசரி பத்திரிகையில் இச்சட்டம் குறித்துக் கட்டுரை எழுதியதற்காக அன்றைய அரசால் கைது செய்யப்பட்டு 18 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார்

.பழமையான 1897 தொற்று நோய்கள் சட்டத்தைப் பயன்படுத்தித்தான் இப்போது இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் முழு அடைப்பை அறிவித்துள்ளன. அரசுக்கும் அதிகாரிகளுக்கும் கட்டற்ற அதிகாரங்கள் வழங்கும் இந்தச் சட்டத்தில் (1) மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதார பணியாளர்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்படவில்லை. அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிவகை ஏதுமில்லை; (2) நோயாளிகளின் உரிமைகளும் அங்கீகரிக்கப்படவில்லை. அவர்களுக்கான சிகிச்சை, மருந்து, உணவு, ஊட்டச்சத்து, பாதுகாப்பான தனிமை, சிகிச்சை முடிந்த பிறகான பேணுகை ஆகியவற்றுக்கான சட்ட வழிவகை ஏதுமில்லை. (3) தொற்று நோய் பரவாமல் தடுக்கும் நோக்குடன் நோயாளிகள் அல்லாதோரைத் தடுத்து வைக்கும் போது அவர்களின் உரிமைகளும் அங்கீகரிக்கப்படவில்லை, ஆக, இந்த மூன்று பிரிவினருக்குமான உரிமைகளை அங்கீகரிக்காமல் அரசுக்கு மட்டும் கட்டற்ற அதிகாரங்களை வழங்கும் இந்தச் சட்டம் சனநாயகத்துக்கும் மக்களின் நல்வாழ்வுக்கும் புறம்பானது. தொற்று நோய்க்கு எதிரான போராட்டத்துக்கு இது உதவாது.

எனவே, மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட நல்வாழ்வுப் பணியாளர்கள், நோயுற்றவர்கள், நோய்த்தடுப்பு நடவடிக்கைகளால் பாதிப்புற்றவர்கள் ஆகிய மூன்று தரப்பினரின்

உரிமைகளையும் அங்கீகரித்துக் காக்கும் வகையில் ஒரு புதிய "தொற்றுநோய்கள் சட்டம், 2020" இந்திய அரசும், மாநில அரசும் இயற்ற வேண்டும்.

மேலும், நல்வாழ்வுக்கான உரிமையை (Right to Health) அடிப்படை உரிமைகளில் ஒன்றாகச் சேர்க்கும் வகையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டிய தேவையும் உள்ளது. கல்வியுரிமைச் சட்டம் போல் நல்வாழ்வுரிமைச் சட்டமும் இயற்ற வேண்டும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!

நல்வாழ்வு என்பது நோய்வாய்ப்படும் போது மருந்து உட்கொள்வது அல்லது சிகிச்சை பெறுவது என்று மட்டும் புரிந்து கொள்ளப்படுமானால் அது முழுமையற்ற புரிதல் ஆகும். ஊட்டந்தரும் நல்ல உணவும் நல்ல நீரும் நல்ல காற்றும் மாசற்ற சூழலும் இல்லாமல் நல்வாழ்வு என்பது மெய்ப்படாது. இத்தகைய நல்வாழ்வை உறுதி செய்வது ஒவ்வொரு சேமநல அரசின் கடமையும் ஆகும். வேண்டும் கொரோனாவை ஒட்டி உலகெங்கும் இந்தப் புரிதல் வளர்ந்து வருகிறது.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

என்பது குறள்நெறி. நோய்த் தீர்ப்பதை விடவும் நோய்த் தடுப்பே மேல் (Prevention is better than cure) என்பது நல்வாழ்வின் முதற்கட்ட:ளை.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஏழாம் அட்டவணையின் படி நல்வாழ்வு என்பது மாநில அதிகாரமாகும். கொரோனாவைச் சாக்கிட்டு மாநில உரிமைகளில் குறுக்கிடுவதும், பிரதமர் பெயரால் தனியாக நிதி திரட்டுவதும் நமக்கு வரவிருக்கும் ஆபத்துகளின் முன்னறிவிப்பே ஆகும். ஜனநாயகமும் தன்னாட்சியும் இல்லையேல் நல்வாழ்வுரிமை என்பது ஏட்டுச்சுரைக்காய் ஆகி விடும். நீட் தேர்வு என்பது தமிழ்நாட்டின் ஒருங்கிணைந்த நல்வாழ்வுக் கட்டமைப்புக்கு ஏற்கெனவே வேட்டு வைத்துக் கொண்டிருப்பதையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

நீட் போலவே தேசிய மருத்துவ கவுன்சில் (NMC) சட்டமும் மாநில உரிமைக்கும் சமூக நீதிக்கும் எதிரான ஒன்று. இந்த சட்டத்தையும் நீக்கக் கோரி நாம் போராட வேண்டிய தேவை உள்ளது.

ஆக, தமிழக மக்களின் நல்வாழ்வுக்குக் கேடு செய்யும் ஏற்பாடுகளை எதிர்த்தும், புதிய தொற்றுநோய்கள் சட்டம், நல்வாழ்வுரிமைச் சட்டம் ஆகியவற்றுக்காகவும் போராட மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள், ஜனநாயக ஆற்றல்கள், தமிழ்த் தேசிய

ஆற்றல்கள், பிற மக்கள் நல இயக்கங்கள் ஒன்றுபடுவது காலத்தின் கட்டாயம்.

---

## செங்காட்டான் குறிப்புகள்

1, "பந்தலிலே பாகற்காய்"

இழவு வீட்டில் ஒப்பாரி பாடும் போதும் பந்தலிலே தொங்கும் பாகற்காயில் கண் வைத்த பெண்ணைப் பற்றிய கதை உங்களுக்குத் தெரிந்திருக்கும். இந்திய அரசும் அதே நிலையில்தான் உள்ளது என்பதற்கு இன்னுமொரு சான்றுதான் அது முன்மொழிந்திருக்கும் மின்சாரச் சட்டம், 2020. இது குறித்துக் கருத்துச் சொல்ல 21 நாள் தரப்பட்டுள்ளது. அதாவது அரசாங்கம் அறிவித்துள்ள ஊரடங்கு அல்லது முழு அடைப்பு முடிந்து ஒரு வாரம்தான், அந்த ஒரு வாரமும் கூட உறுதியில்லை. 2014, 2018 ஆண்டுகளில் இப்படிப்பட்ட சட்டம் கொண்டுவர முயன்றனர். மாநில அரசுகளும் மின்சாரத் தொழிலாளர் அமைப்புகளும் வன்மையாக எதிர்ப்புத் தெரிவித்து அந்த முயற்சியைத் தடுத்து நிறுத்தின. இந்தக் கொரோனா காலத்தைப் பயன்படுத்தி மோதி அரசு இந்த மோசமான சட்டத்தைக் கொண்டுவரப் பார்க்கிறது. ஏன் இது மோசமான சட்டம்? (1) இந்திய அரசமைப்புச் சட்டப்படி மின்சாரம் என்பது ஏழாம் அட்டவணைப்படி அதிகாரங்களின் பொதுப் பட்டியலில் உள்ளது. புதிய சட்டம் மாநிலங்களின் அதிகாரத்தை ஒப்புக்குச் சப்பாணி ஆக்கி விடும். ஒரு மைய ஆணையத்தின் கையில் எல்லா அதிகாரமும் குவிக்கப்படும் (2) மின்சாரம் முழுக்க முழுக்க வணிகப் பொருளாக்கப்படும் இலவய மின்சாரம், மானிய விலை மின்சாரம், குறைந்த கட்டண மின்சாரம் என்பதெல்லாம் பழங்கதையாகி விடும். (3) மின்னியற்றலும் மின்பகிர்வும் பொதுத்துறையிலிருந்து விடுவிக்கப்பட்டு தனியார் துறையின் கையில் ஒப்படைக்கப்படும். "பந்தலிலே பாகற்காய்" என்ற பாட்டுக்கு மற்றொருத்தி "போகும் போது பாத்துக்கலாம்" என்று எதிர்ப்பாட்டு பாடினாளாம். மோதி அரசு கொரோனாவுக்காகத்தான் காத்திருந்ததோ? பாகற்காய் கதை இன்னும் முடியவில்லை. வீட்டுக்கார அம்மா "விதைக்கல்லோ விட்டிருக்கேன்" என்று இறுதியாக முடித்து வைத்தாளாம். அந்த விழிப்பும் எச்சரிக்கையும் நமக்குத் தேவைப்படுகிறது.

2. "பழகிப் போச்சு"

கொரோனா ஊரடங்கு உலகுதழுவிய ஒன்றாகி விட்டது. அது பாலத்தீன மக்களையும் விட்டு வைக்கவில்லை. இது குறித்து ராம்சி பரூத் என்ற பாலத்தீன எழுத்தாளர் நமக்கெல்லாம் நம்பிக்கையூட்டும் விதத்தில் எழுதியுள்ளார்! "உங்கள் மீது ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது, ஆணையை மீறினால் சுடப்படுவீர்கள்" என்று நமக்கு யாராவது சொல்லக் கேட்டுள்ளோமா?

ஆனால் பாலத்தீனர்களை இப்படித்தான் இசுரேல் காலங்காலமாக மிரட்டிக் கொண்டிருக்கிறது. வெறும் மிரட்டல் இல்லை. அவ்வப்போது சுட்டுக் கொன்றும் வருகிறது. ஊரடங்கு நம்மை நெருங்கி வரச் செய்ய வேண்டும், நமது போராட்டத்தில் நம்மை உறுதிகொள்ளச் செய்ய வேண்டும், நம்மை ஒருவர் பால் ஒருவர் நேசம் கொள்ளச் செய்ய வேண்டும் என்கிறர் பருத். ”71 ஆண்டுகளாக இது எங்களுக்குப் பழகிப் போச்சு, இன்னும் எத்தனை ஆண்டுகளோ?” என்று சொல்லிச் சிரிக்கிறார். நம்மைக் காட்டிலும் காசுமீரத்து மக்களுக்கு இது எளிதில் விளங்கும் என நினைக்கிறேன்.

### 3. கொரோனா காலக் குடியாட்சியம்

பாலத்தீனர்களையும் அவர்களை அடக்கி ஒடுக்குவதையே பிறவிப் பயனாகக் கருதும் இசுரேலர்களையும் கொரோனா ஒருவகையில் ஒன்றுபடுத்தியுள்ளது. இசுரேலில் ஊழல் பிரதமர் நெட்டன்யாகு பதவி விலக வேண்டும் என்பதற்காக இசுரேலியர்கள் கொரோனா கட்டுப்பாடுகளுடன் ஆர்ப்பாட்டம் செய்துள்ளர்கள். சற்றொப்ப மூவாயிரம் பேர் திரண்ட போதும் அனைவரும் முகக்கவசம் அணிந்துள்ளனர். கறுப்புக் கொடி ஏந்தியுள்ளனர், முகக்கவசங்களின் மேல் “கிரைம் மினிஸ்டர்” என்று சிலர் எழுதியிருந்தது சிறப்பு. ஆர்ப்பாட்டத்தின் போது அனைவரும் சமூக விலகலைக் கடைப்பிடித்து சீரான இடைவெளி விட்டு விலகி நின்றது கண்கொள்ளாக் காட்சி. இரண்டு குறிப்புகள்: முதலாவதாக தாங்கள் துய்த்திடும் குடியாட்சியம் பாலத்தீனர்களுக்கும் தேவை என்பதை இந்த இசுரேலர்களுக்குச் சொல்ல வேண்டும். இரண்டாவதாக நமக்கும் நம் வருங்காலப் போராட்டங்களுக்கும் இது ஒரு கைகாட்டி.

### 4. கல்லா கட்ட உதவுமா?

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கொரோனாவின் கொலைத் தாண்டவத்தை புதுத்தாரளிய முதலியத்தின் தோல்வி என்று நோம் சோம்ஸ்கி விளக்குவதை அறிவோம். ஆனால் கொரோனாவை சீனத்தின் குமுகிய (சோசலிச) அமைப்பின் தோல்வியாகக் காட்ட முயன்று கொண்டிருந்த அமெரிக்கப் பெருங்குழும ஊடகங்கள் இப்போது என்ன சொல்கின்றன? நியூ யார்க் டைம்ஸ் மெதுவாகத் தடவிக் கொடுத்து எழுதுகிறது: “எளிதில் பயன்படுத்தும்படியான புது வகை மூச்சுக்கருவிகளை உருவாக்கும் முயற்சிகள் தடைபட்டுப் போயின. மக்கள் நல்வாழ்வுக்கு முகன்மையான விளைவுகள் கொண்ட திட்டப்பணிகளைத் தனியார் குழுமங்களிடம் விடுவதில் உள்ள ஆபத்துகளையே இது வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. தனியார் குழுமங்கள் அதிகபட்ச இலாபம் ஈட்டுவதிலேயே குறியாக இருப்பதால், எதிர்கால நெருக்கடிக்கு அணியமாக வேண்டும் என்ற அரசின் இலக்குக்கு எப்போதும் ஒத்துவர மாட்டா.” புரிகிறதா? உயிர்காக்கும் மூச்சுக்

கருவிகள் செய்வதால் கல்லா கட்ட முடியாதென்றால் உயிரே போனாலும் அதைச் செய்ய மாட்டார்கள் ஈட்டம் ஒன்றையே குறியாகக் கொண்ட முதலாளர்கள். அமெரிக்காவிலும் இந்தியாவிலும் கூட!

5. "நம் புரட்சி"

அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் முயற்சியில் பெர்னி சாண்டர்ஸ் மீண்டும் தோற்றுப் போய்விட்டார் என்பது சற்றே வருத்தமளிக்கிறது. தொடர்ந்து இரண்டாவது முறையாக அவர் தோற்றிருகிறார். சென்ற முறை ஹிலாரி கிளிண்டனிடம், இந்த முறை ஜோ பிடனிடம் தோற்றுப் போனார். அமெரிக்க ஆளும் நிறுவனத்தைப் பலவகையிலும் வெளிப்படையாக எதிர்த்துப் பேசி வந்தவர் தோற்றுப் போனார் என்பது வருத்தமளிக்கிறது. அவர் தன்னை "ஜனநாயக சோசலிஸ்டு" என்று சொல்லிக் கொண்டவர். நம் புரட்சி என்ற இயக்கமும் நடத்தி வந்தவர். கொரோனா நெருக்கடி அமெரிக்க வல்லரசை அம்மணமாக்கி நிறுத்தியிருக்கும் வரலாற்றுப் பகைப்புலத்தில் பெர்னி சண்டர்ஸ் முன்வைத்த நிலைப்பாடுகள் இப்போதும் முகன்மைப் பங்கு வகிக்கும் என்பது என் கணிப்பு. பொறுத்திருந்து பார்ப்போம்.

---

## ஆரியப் புலப்பெயர்வு விவாதத்தை மரபணுவியல் எப்படி முடித்து வைக்கிறது?

**_____டோனி ஜோசப்____**

**தமிழாக்கம்: நலங்கிள்ளி**

*(சென்ற இதழ்த்தொடர்ச்சி)*

### 3. புள்ளிகளை இணைத்தல்

இந்தச் சான்றுகள் அனைத்தையும் நோக்கும் போது கூடுதலாக இரு செய்திகளை மனத்தில் நிறுத்த வேண்டும். முதலாவது, பல்வேறு துறைகளில் நடைபெற்ற பற்பல ஆய்வுகளும் இந்திய வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகக் குறிப்பிட்ட ஒரு காலத்தையே வந்தடைந்தன - கிமு 2000. எப்படி? பிரியா மூர்ஜனியும் அவர் குழுவினரும் நடத்திய ஆய்வின்படி அப்போதுதான் மக்களினக் கலப்பு பேரளவில் நடைபெறத் தொடங்கியது. எந்தளவுக்கு என்றால், துணைக்கண்டத்தில் எங்குமே மிகச் சில மக்களினக் குழுவினர்தான் விட்டு வைக்கப்பட்டனர். அந்தளவுக்குக் கொந்தளிப்புகள் சூழ்ந்திருந்த அந்தக் காலக்கட்டத்தில் அந்தமான் நிக்கோபார்

தீவுகளில் வாழ்ந்த ஒங்கே மக்களினத்தவர் மட்டுமே நாம் அறிந்த வரையில் கலப்பினால் கிஞ்சிற்றும் தாக்குறாதோர் ஆவர். மேலும், டேவிட் போஸ்னிக்கும் அவரது குழுவினரும் ஒய்-குரோமோசோம் பற்றி நடத்திய 2016 ஆய்வைப் பொறுத்த வரை, கிமு 2000 என்ற அந்தக் காலத்தில்தான் இந்தியாவில் மேலோங்கி நின்ற R1 ஒற்றைக்குழுவின் துணைக்கிளையாகிய Z93 ஆனது "பளீரென" பிரியத் தொடங்கியது. இது "துரித வளர்ச்சியையும் விரிவாக்கத்தையும்" உணர்த்துகிறது. கடைசியாக, நெடுங்காலமாய் நிறுவப்பட்டு விட்ட தொல்லாய்வுகளின் அடிப்படையில் நமக்குக் கிமு 2000 என்ற அந்தக் காலக்கட்டத்தின் போதுதான் சிந்துச் சமவெளி நாகரிகம் அழியத் தொடங்கிய செய்தியும் நமக்குத் தெரியும். எவரும் இந்தத் தரவுகள் அனைத்தையும் புறஞ்சார் முறையில் நோக்குவாரானால், இந்திய வரலாற்றுப் புதிர் ஆட்டத்தில் தொலைந்து போன வெட்டுப் படங்கள் இப்போது முழுப் படமாகிக் கொண்டிருப்பதைக் கட்டாயம் உணர்வர்.

இரண்டாவது, இங்கு குறிப்பிடப்படும் பல ஆய்வுகளைப் பொறுத்த வரை, அவை எடுத்துக் கொண்ட சிக்கல்கள் என்ற வகையிலும், சோதனைக்கு எடுத்துக் கொண்ட பதங்கள் (samples), ஆராய்ச்சி வழிமுறை என்ற வகையிலும், உலகளாவியவை. காட்டாக, R1a-Z93 மரபுவழி பிரிவுற்ற காலம் 4,000-4,500 ஆண்டெனக் குறித்த போஸ்னிக் ஆய்வானது ஒய்-டிஎன்ஏவின் பெரும் விரிவாக்கங்கள் பற்றி இந்தியாவில் மட்டுமல்லாது மற்ற நான்கு கண்டத்து மக்களினங்களிடத்தும் கவனம் செலுத்தியது. வட, தென் அமெரிக்காவில் Q1a-M3 ஒற்றைக்குழுவின் விரிவாக்கம் 15,000 ஆண்டு முன்பு நடைபெற்றதாக மெய்ப்பித்தது. இது புறத்திருந்து அக்கண்டங்களுக்குள் நடைபெற்ற தொடக்கக் காலக் குடியேற்றங்கள் குறித்துப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட காலத்துடன் ஒத்துப் போகிறது. எனவே வெட்டுப் படங்கள் முழுப்படமாகிற நிகழ்வு இந்தியாவில் மட்டுமல்லாது உலகெங்கும் நடைபெறுகிறது. உலகப் புலப்பெயர்வுப் படம் முழு அளவில் நிரப்புற நிரப்புற, உலகில் மக்கள் தொகை எவ்வாறு அமையலாயிற்று என்பது பற்றி உருவாகிக் கொண்டிருக்கும் பொதுக் கருத்தைக் குடை சாய்ப்பது மென்மேலும் கடினமாகி விடும்.

இப்போது நடந்து கொண்டிருப்பது என்ன என்பதற்கு ரைக்கை விட சிறப்பாக யாரும் விளக்கமளிக்கவில்லை. அவர் சொல்கிறார்: "கடந்த ஐந்தாண்டுகளில் மிகத் துரிதமாகவும் விறுவிறுப்பாகவும் வலுவாகவும் நடைபெற்றுக் கொண்டிருப்பது என்ன என்றால், புதுமக்கால

மற்றும் பழங்கால டிஎன்ஏவின் அடிப்படையில் மாந்தக் குல வரலாறு பற்றி நடத்தப் பெற்ற முழு டிஎன்ஏ ஆய்வுகளின் பேரெழுச்சி ஆகும். இதனைச் செய்து முடிப்பதற்கு மரபணுவியல் தொழில்நுட்பமும் பழங்கால டிஎன்ஏ பற்றிய தொழில்நுட்பமும் உதவின. அடிப்படையில், இன்று நடப்பது ஒரு தங்க வேட்டை. இது ஒரு புதிய தொழில்நுட்பம். அந்தத் தொழில்நுட்பம் நம்மால் இயன்ற இடத்தில் எல்லாம் பயன்படுத்தப்படுகிறது. தாழத் தொங்கிக் கொண்டிருக்கும் பெரும் எண்ணிக்கையிலான பழங்கள் துரிதமாகப் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன, தரை எங்கும் சிதறிக் கிடக்கும் தங்கக் கட்டிகள் துரிதமாக அள்ளப்படுகின்றன."

இந்தோ-ஐரோப்பிய மொழி பேசுவோரின் புலப்பெயர்வுகளே பெரிய வாதுரைகளுக்கும் தர்க்கங்களுக்கும் உள்ளான வரலாற்று நிகழ்வு என்பதால்தான் நாம் இது வரையிலும் அது பற்றி மட்டுமே பார்த்துள்ளோம். இருந்தாலும் இன்னும் பெரிய படத்தை நாம் பார்க்கத் தவறி விடக் கூடாது. அதாவது R1a மரபுவழிகளில் இந்திய ஆண் மரபுவழியில் சுமார் 17.5 விழுக்காட்டினரும், இந்தியப் பெண் மரபுவழியில் இன்னுங்கூட சிறு விழுக்காட்டினரும் மட்டுமே அடங்குகின்றனர். இந்தியர்களில் மிகப் பெரும்பான்மையினரின் மூதாதையர் பெருமளவுக்கு மற்றப் புலப்பெயர்வுகளிலிருந்து வந்தோரே ஆவர். இவற்றில் 55,000 முதல் 65,000 ஆண்டு முன்பு ஆப்பிரிக்காவிலிருந்து முதன்முதலில் நடைபெற்ற ஆதிப் புலப்பெயர்வுகள் அடங்கும். தொடர்ந்து கிமு 10,000க்குப் பிறகு மேற்காசியாவிலிருந்து அலைஅலையாக நடைபெற்றதாகக் கருதப்படும் வேளாண் தொடர்பான புலப்பெயர்வுகள் அடங்கும். அடுத்ததாக, கிழக்கு ஆசியாவிலிருந்து முண்டா போன்ற ஆஸ்ட்ரோ-ஆசியாடிக் மொழி பேசுவோரால் இன்றளவும் கணிக்கவியலாமல் இருக்கும் ஒரு காலக் கட்டத்தில் நடைபெற்ற புலப்பெயர்வுகள் அடங்கும். அடுத்ததாக, மீண்டும் கிழக்கு ஆசியாவிலிருந்து திபெத்தோ-பர்மிய மொழி பேசுவோரால் இன்றளவும் கணிக்கவியலாமல் இருக்கும் ஒரு காலக் கட்டத்தில் நடைபெற்ற புலப்பெயர்வுகள் அடங்கும்.

தெள்ளத் தெளிவாகத் தெரிவது என்னவென்றால், இந்தியர்கள் அனைவருமே பல தோற்றுவாய்களைக் கொண்ட ஒரு பல்மூல நாகரிகத்தைச் சேர்ந்தவர்கள், ஒற்றைமூல நாகரிகத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை. அந்தப் பல்மூல நாகரிகம் என்பது அதன் உந்துவிசைகளை, அதன் பாரம்பரியத்தை, அதன் பழக்கவழக்கங்களைப் பற்பல மரபுவழிகளிலிருந்தும் புலப்பெயர்வு வரலாறுகளிலிருந்தும் எடுத்துக் கொண்டு வளர்ந்த ஒரு

நாகரிகம் ஆகும். பெருந்துணிச்சலும் தேடல் வேட்கையும் கொண்ட முன்னோடிப் பயணிகளாகிய ஆப்பிரிக்க வந்தேறிகளே இந்த இந்திய மண்ணில் முதன்முதலில் கால்பதித்த ஆதிக் குடிகள் ஆவர். இன்றளவும் அவர்களின் மரபுவழிகளே இந்திய மக்களினத்தின் அடித்தளமாகத் திகழ்கின்றன. அடுத்த வருகை புரிந்தோர் வேளாண் தொழில்நுட்பங்களுடன் இந்தியாவில் கால் பதித்தனர். அவர்களே சிந்து சமவெளி நாகரிகத்தைக் கட்டி எழுப்பியவர்கள். அவர்களின் பண்பாட்டுச் சிந்தனைகளும் பழக்கவழக்கங்களுமே இன்றைய நமது பாரம்பரியங்களின் வளம் பெருக்குகிறது எனலாம். கிழக்கு ஆசியாவிலிருந்து வந்து சேர்ந்தவர்களே அரிசி பயிரிடும் முறையை கொண்டு வந்திருக்க வேண்டும். அதன் பலனை நாம் அறிவோம். பிற்பாடு வந்தவர்கள் சமஸ்கிருதம் என்கிற மொழியையும் அது தொடர்பான நம்பிக்கைகளையும் வழக்கங்களையும் கூடவே கொண்டு வந்தார்கள். இந்தியச் சமுதாயத்தை அடிப்படை வழிகளில் மாற்றியமைத்தார்கள். அதற்கும் பிறகு வணிகத்துக்காக வந்தவர்களும் சரி, ஆள வந்தவர்களும் சரி, ஆள வந்து இங்கேயே தங்கி விட்டவர்களும் சரி, அனைவருமே இங்கு கூடிக் கலந்து இந்திய நாகரிகம் என நாம் இன்று அழைக்கும் இந்த நாகரிகத்துக்குப் பங்களிப்புச் செய்துள்ளார்கள். ஆக, நாம் அனைவரும் வந்தேறிகளே.

(கட்டுரையாளர் டோனி ஜோசஃப் எழுத்தாளரும் பிசினஸ் வேல்டு இதழின் முன்னாள் ஆசிரியரும் ஆவார்.)

**கட்டுரையாளர் குறிப்பு:**

உலகப் புலப்பெயர்வுகள் பற்றிய என் புரிதல்

• முதல் குழு - கிழக்கு மற்றும் தென் ஆப்பிரிக்கா - L0 - மைட்டோகாண்ட்ரியாவின் முதல் மரபுவழி - 1,44,000 ஆண்டு முன்பு.

L1, L2, L3 ஆகிய ஒற்றைக்குழுக்கள் ஆப்பிரிகாவுக்குள் அடங்கி விடுகின்றன.

• அடுத்து L3இன் M, N மரபுவழிகள் - முதல் ஆப்பிரிக்கப் புலப்பெயர்வு - செங்கடலைக் கடந்து செல்லுதல்.

• L3 ஒற்றைக்குழுவின் அகவை 84,000 ஆண்டுகள், M, N ஆகியவற்றின் அகவை 63,000 ஆண்டுகள். எனவே செங்கடலைக் கடந்து சென்ற நிகழ்வு 63,000 ஆண்டுகளுக்கு மேல் முற்பட்டது.

• L3 மரபுவழிகள் மட்டுமே ஆப்பிரிக்காவுக்கு வெளியே காணப்படுகிறது.

• M, N மரபுவழிகள் ஆப்பிரிக்காவில் மிகக் குறைந்த அளவில் காணப்படுகின்றன.

• M, N ஆகியவை செங்கடலையும் மத்திய தரைக் கடலையும் கடந்த பிறகு M ஆனது தென் கடற்கரை வழியில் செல்லத் தொடங்குகிறது. இது தெற்குக் கடற்கரைப் புலப்பெயர்வு என்று அழைக்கப்படுகிறது. N ஐரோப்பாவுக்கு புலம்பெயர்கிறது.

• M ஆனது செங்கடலைக் கடந்து அரேபியாவுக்கும் பெர்சியாவுக்கும் செல்கிறது.

• M ஒன்றைக்குழு பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் ஏராளமாய்க் காணக் கிடைக்கிறது.

• இந்தியாவின் 60% மக்கள் M ஆவர்.

• அந்தமான் மக்கள் M மட்டுமே.

• தெற்குக் கடற்கரைப் புலப்பெயர்வுப் பாதை இந்தியாவிலிருந்து தாய்லாந்து, இந்தோனேசியா வரை நீண்டு, அப்படியே பபுவா புது கினியா, ஆஸ்திரேலியா சென்று முடிகிறது.

• M ஒற்றைக்குழுவின் தகவு அராபியா, இந்தியாவிலிருந்து கிழக்கு நோக்கி நகர நகர அதிகரித்துச் செல்கிறது.

• கிழக்கு இந்தியாவில் M, N தகவு 3:1.

• இந்த N பெரும்பாலும் அதன் R துணைக்கிளையின் வழித்தோன்றல்களின் வடிவமாக உள்ளது.

• N ஆனது ஆஸ்திரேலிய ஆதிக் குடிகளிடம் மேலதிகமாய் உள்ளது.

• M ஆனது R1a ஒற்றைக்குழுவாகக் கிளை விடுகிறது. அதன் துணைக்குழு R1a-Z93 ஆனது 4000 ஆண்டு முன்பு இந்தியத் துணைக் கண்டத்துக்குப் புலம்பெயர்ந்தது. அவர்கள் இந்தோ-ஐரோப்பிய மொழி பேசுபவர்கள், ஆரியர்கள் என அழைக்கப்படுபவர்கள். கூடுதல் துணைக்குழுவாகிய R1a-Z282 ஆனது ஐரோப்பாவுக்குப் புலம்பெயர்ந்தது.

• இந்தியாவின் 17.5% மக்கள் R1a குழுவைச் சேர்ந்தவர்கள்.

மனிதனின் கால்வழி (Descent of Man) என்பது டார்வின் எழுதிய நூல் இந்நூலில் அவர் மாந்தர்கள் மனிதக் குரங்குகளின் வழி வந்தததாக ஊகித்தார். அந்த மனிதக் குரங்குகளுக்கு அப்போதுங்கூட சிறு மூளையே இருந்தாலும், நிமிர்ந்து நடந்தன. இதனால் கைக்குரிய வேலையிலிருந்து விடுபட்ட நிகழ்வு அறிவு வளர்ச்சிக்குத் துணைசெய்தது. இந்த மனிதக் குரங்குகள் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவை என டார்வின் கருதினார்:

உலகின் பெரும் வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் வாழும் பாலூட்டிகள் அவ்வட்டாரத்தின் அழிந்துபோன உயிரினங்களுக்கு மிகவும் நெருக்கமாக இருந்தன. இதுபோலவே கொரில்லா, சிம்பன்சி ஆகிய இனங்களுக்கு மிகவும் நெருக்கமான அந்த அழிந்து போன குரங்குகளின் இருப்பிடமாக ஆப்பிரிக்கா இருந்திருக்கக் கூடும். இந்த இரு இனங்களும் இன்று மனிதனின் மிக நெருக்கமான கூட்டாளிகள் என்பதால், நமது முந்தைய மூதாதையர்கள் வேறெந்த இடத்தை விடவும் ஆப்பிரிக்காவில் வாழ்ந்திருப்பதற்கே மிகுந்த வாய்ப்புள்ளது. இந்தப் பொருள் பற்றி ஊகிப்பது பயனற்றது, ஏனென்றால் மனிதன் அளவுக்குப் பெரிய ஒரு குரங்கு, அதாவது லார்டட்டைச் சேர்ந்த ட்ரையோ பிதிகஸ் ஆனது ஹைலோபேட்ஸ் பேரினத்தைச் சேர்ந்த மனிதத் தோற்றம் கொண்ட பெரிய குரங்கு, அதாவது லார்டெட்டைச் சேர்ந்த ட்ரையோ பிதிகஸ் என்ற இனம் அப்பர் மையோசின் ஊழியின் போது ஐரோப்பாவில் இருந்தது. அந்தப் பழங்காலம் தொடங்கி புவியில் பலப் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே பேரளவில் புலப்பெயர்வுகள் நடந்திருப்பதற்கு வெகுவான காலம் இருந்துள்ளது.

- சார்லஸ் டார்வின் எழுதிய மனிதனின் கால்வழி (Descent of Man)

# முதலாளித்துவம் தொற்றுநோய்களின் அடைகாப்பகம், சோசலிசமே தீர்வு:

*---- மருத்துவர் மைக்கேல் பாப்பாஸ் ----*

**தமிழாக்கம்:சமந்தா**

கொரோனா வைரஸின் பரவல் முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் அனைத்தையும் அம்பலப்படுத்துகிறது. சோசலிசம் ஏன் உடனடித் தேவை என்பதையும் இது காட்டுகிறது. இது இன்னும் மோசமாகத்தான் போக இருக்கிறது. வைரஸின் பரவலை நிறுத்த இயலாது --- உயிரியல் காரணங்களை விட சமூகக் காரணங்களால்தான் இந்நிலை ஏற்பட்டுள்ளது. வைரஸ் பரவுவதற்கான வாய்ப்பைக் குறைப்பதற்காக மக்கள் நோய்வாய்ப்பட்டிருக்கும் போது அவர்கள் வீட்டிலேயே இருக்க வேண்டும் என்று மருத்துவர்கள் பரிந்துரைக்கும் அதே நேரத்தில், இருமல் வந்தவுடன் வீட்டிலேயே தங்கியிருக்கும் வசதி தொழிலாள வர்க்க மக்களுக்கு இல்லை,

கோவிட்-19 உள்ளவர்கள் “வேலைக்கும் செல்ல வேண்டும்” என்ற டொனால்ட் டிரம்பின் சமீபத்திய பரிந்துரைகளுக்கு மாறாக, வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்று நோய்க் கட்டுப்பாட்டு மையம் (CDC) பரிந்துரைக்கிறது. இது முதலாளித்துவத்தின் கீழ் அறிவிக்காமல் விடுப்பு எடுக்க முடியாத தொழிலாள வர்க்க உறுப்பினர்களுக்கு ஒரு சிக்கலை ஏற்படுத்துகிறது. நியூயார்க் நகர மேயர் பில் டி பிளேசியோ சமீபத்தில் நெரிசலான சுரங்கப் பாதைகளில் கார்களைத் தவிர்க்கவும் முடிந்தால் வீட்டிலிருந்து வேலை செய்யவும் பரிந்துரைத்தார், ஆனால் பலர் பொதுப் போக்குவரத்தை நம்பியுள்ளனர். அரசாங்கத் தலைவர்களின் பரிந்துரைகள் தொழிலாள வர்க்கத்துடன் அவர்கள் தொடர்பற்று இருப்பதையேக் காட்டுகின்றன. 58% அமெரிக்கர்கள் தங்கள் சேமிப்பில் 1,000 டாலருக்கும் குறைவாகவே வைத்துள்ளனர், மேலும் 40% அமெரிக்கர்களால் எதிர்பாராத 400 டாலர் பில்களைக் கட்ட இயலாது. எனவே, வீட்டிலேயே இருக்கவோ பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தாமல் இருக்கவோ பலருக்கு வாய்ப்பே இல்லை.

நோய்வாய்ப்பட்டால் நம்மில் இன்னும் அதிகமானோர் மருத்துவரைத் தவிர்க்கிறனர். காப்பீடு இருந்தாலும் இல்லா விட்டாலும் மருத்துவமனைக்கு ஒரு முறை செல்வது என்பதே மருத்துவத்துக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை ஏற்றி விடுகிறது. 25% அமெரிக்கர்கள் தங்களுக்கான அல்லது தங்கள் குடும்பத்தினருக்கான பராமரிப்புச் செலவுகள் காரணமாக

மருத்துவ சிகிச்சையைத் தாமதப்படுத்துகிறோம் எனக் கூறியதாக “தி கார்டியன்” தெரிவித்துள்ளது. மே 2019இல், அமெரிக்கப் புற்று நோய் அமைப்பு (American cancer society) 56% பெரியவர்களில் குறைந்தது ஒருவரேனும் மருத்துவ நிதி நெருக்கடியில் இருப்பதாகக் கூறுகிறது. திவால்நிலைக்கு மருத்துவக் கடன்தான் நாட்டில் முதல் காரணமாக உள்ளது. நிதி திரட்டும் தளமான “GoFundMe” என்பதன் மொத்த நன்கொடைகளில் மூன்றில் ஒரு பங்கு உடல்நலப் பராமரிப்பு செலவுகளை ஈடுகட்டவே செல்கிறது. இதுதான் உலகின் பணக்கார நாட்டின் சுகாதார அமைப்பு: ‘GoFundMe.’

இது மிகவும் ஆபத்தான சூழல் என்று தெளிவாகத் தெரிகிறது. ஏற்கெனவே, கொரோனா வைரஸுக்கான சோதனைகளை நாடினால் மக்கள் பெருமளவிலான கட்டணச் சுமைகளால் பாதிக்கப்படுகிறார்கள். சீனாவுக்கு ஒரு வேலையாகப் பயணம் சென்று வந்த பிறகு ‘ஃப்ளூ’ போன்ற அறிகுறிகளுக்காக மருத்துவமனைக்குச் சென்ற ஒஸ்மல் மார்டினெஸ் அஸ்குவைப் பற்றிய கதையை ‘மியாமி ஹெரால்ட்’ வெளியிட்டுள்ளது. நல்ல வேளையாக அவருக்கு ‘ஃப்ளூ’ இருப்பது கண்டறியப்பட்டது, மருத்துவமனை சென்றதால் 3,270 டாலர் செலவு என்று அவரது காப்பீட்டு நிறுவனத்தின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ‘பிஸினஸ் இன்சைடர்’ கோவிட்-19 க்காக மருத்துவமனைக்குச் செல்வதால் ஏற்படும் செலவுகளின் விளக்கப் படத்தை வெளியிட்டுள்ளது.

நிச்சயமாக, இந்தச் செலவுகளால் ஒருசிலருக்கு எந்த பிரச்சனையும் இருக்காது. மூன்று பணக்கார அமெரிக்கர்கள் 50% அமெரிக்கர்களை விட அதிகச் செல்வம் வைத்திருக்கிறார்கள். குறைந்ததிலும் குறைந்த எண்ணிக்கையிலான முதலாளிகளின் கைகளில் செல்வம் குவிப்பது முதலாளித்துவத்தின் டி.என்.ஏவில் ஒரு பகுதியாகும். ஆனால் கேட் பிக்கெட் மற்றும் ரிச்சர்ட் வில்க்சன் ஆகியோர் எழுதிய ‘த ஸ்பிரிட் லெவல்:’ என்ற புத்தகம் எவ்வாறு உயர்ந்த சமத்துவம் சமூகங்களை வலுவாக்குகிறது என்பதை எடுத்துரைக்கிறது. அதிக சமத்துவமுள்ள சமூகங்களில் உள்ளவர்கள் ஆரோக்கியமானவர்களாக உள்ளனர்; அவர்கள் நீண்ட காலம் வாழ்கிறார்கள்; குழந்தை இறப்பும் குறைவாக உள்ளது; மேலும் அவர்கள் உடல்நலம் குறித்து உயர்வான சுயமதிப்பீடுகளைக் கொண்டுள்ளனர்; சமத்துவமின்மை மோசமான உடல்நலத்திற்கே வழிவகுக்கிறது என்பதையெல்லாம் இந்நூல் விரிவாக எடுத்துரைக்கிறது.

இது எவ்வாறு கோவிட்-19 உடன் தொடர்புடையது? என்று பார்த்தால், ஒரு சமூகத்தில் செல்வம் மற்றும் அதிகாரத்தின் சமத்துவமின்மை நாள்பட்ட மன அழுத்தத்திற்கு வழிவகுக்கிறது என்பது இந்த முடிவுகளுக்கான முக்கியக் கோட்பாடாகும். இது இதயம், இரத்த ஓட்ட மண்டலம், மற்றும் நோயெதிர்ப்பு மண்டலம் போன்ற உடல் உறுப்பு மண்டலங்களில் பேரழிவை ஏற்படுத்துகிறது, இதனால் தனிநபர்கள் உடல்நலப் பிரச்சினைகளுக்கு எளிதில் இலக்காகக் நேரிடும். அதாவது, சமூகங்கள் மென்மேலும் சமமற்றவையாக மாறும் போது, தனிநபர்கள் மென்மேலும் தொற்றுநோயால் பாதிக்கப்படுவார்கள். கோவிட்-19 பரவுவது, முதலாளித்துவத்தின் சமத்துவமின்மையால் நம் அனைவரையும் அதிக ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது.

## சோசலிசத்தில் கொரோனா:

கொரோனா வைரஸ் (கோவிட்-19) போன்ற தொற்றுநோய்களை எதிர்கொள்ள சோசலிசம் தேவை என்பது தெளிவாகிறது. சோசலிசம் என்றால், அனைவருக்கும் மருத்துவப் பராமரிப்பு அல்லது புதிய தாராளமய ஒப்பந்தம் என்று அர்த்தமில்லை. கொரோனா வைரஸ் போன்ற தொற்றுநோய்களை எதிர்கொள்ள அனைவருக்கும் மருத்துவப் பராமரிப்பு மட்டும் போதாது. மனிதத் தேவைகளின் அடிப்படையில் உற்பத்தியை நிர்வகிக்கும் ஒரு சமூகத்தையே சோஷலிசம் என்கிறோம். இலாபத்திற்கான உந்துதல் அல்ல. அது முதலாளிகள் இல்லாத சமூகம், அங்கு உற்பத்தி மற்றும் மறுவுற்பத்தி என்பது தொழிலாள வர்க்கத்தாலும், ஒடுக்கப்பட்டவர்களாலும், ஜனநாயக வழியில் திட்டமிடப்படுகிறது. இந்த வகையான சமுதாயத்தில், முதலாளித்துவத்தை விட மிகச் சிறந்த முறையில் கோவிட்-19ஐ எதிர் கொள்ள முடியும்.

நோய் வெடித்துப் பரவுவதைத் தடுக்கும் முறைகள் என்றாலும் சரி,, நோயை எதிர்கொள்ளும் முறைகள் என்றாலும் சரி, இரண்டுமே ஒரு சோசலிச சமுதாயத்தில் பெரிதும் மாறுபடும். கைகளுக்கான சோப்பு, கை சுத்திகரிப்பான், மேற்பரப்பைச் சுத்திகரிக்கும் துடைப்பான்கள் அல்லது தெளிப்பான்கள் போன்ற பொருட்கள் இந்த நேரத்தில் மிக அதிக அளவில் தேவைப்படுகின்றன. உலகெங்கிலும் முக்கியப் பொருட்களின் விநியோகத்திலான பற்றாக்குறையை நாம் ஏற்கெனவே காண்கிறோம். முதலாளித்துவத்தின் கீழ் இலாபப் பெருக்கம் வேண்டும் என்பதால் இப்பொருட்களுக்கான தேவை அதிகமுள்ள இந்த நேரத்திலும் நிறுவனங்கள் இவற்றின் விலையைக் கடுமையாக உயர்த்தவே செய்கின்றன. எடுத்துக்காட்டாக, பியூரல் ஹேண்ட் சானிட்டைசர் போன்ற பொருட்களின் விலை கடுமையாக அதிகரித்திருப்பதாக

'வாஷிங்டன் போஸ்ட்' தெரிவித்துள்ளது. முதலாளித்துவத்தின் கீழ், பற்றாக்குறை அதிக லாபத்திற்கே வழிவகுக்கிறது.

முதலாளித்துவத்தின் உலகமயமாக்கப்பட்ட உற்பத்தி முறை உலகின் வேறுபட்ட முனைகளில் உள்ள தொழிற்சாலைகள் ஒன்றையொன்று உண்மையாகவே சார்ந்து செயல்பட வழிவகுத்துள்ளது. அமெரிக்காவில் (யு.எஸ்.ஏ.) ஒரு ஆப்பிள் நிறுவன வாடிக்கையாளரால் கவனிக்கப்படாதவாறு சீனாவில் ஐபோன்கள் உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலையில் ஒரு தொழிலாளியை முதலாளித்துவம் சுரண்டுவதற்கு இது வழிசெய்கிறது. தொழிலாளர்களுக்கு அதிகப் பாதுகாப்புகள் தராத உலகின் ஒரு பகுதியில் நிறுவனங்கள் செலவுகளைக் குறைத்துக் கொள்ள இடமளிக்கிறது. இது முதலாளிகளுக்கு நன்மை பயக்கும் அதே வேளையில், கோவிட்-19 போன்ற நோய்களின் பரவல் இந்த அமைப்பின் பலவீனங்களை தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. புதிய மருந்துகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் அடிப்படைப் பொருட்களின் பெரும் பகுதி சீனாவிலிருந்து வருகிறது. வைரஸ் பரவலால் தொழிற்சாலைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதால், பொருட்களின் உற்பத்தி வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது யு.எஸ். போன்ற பிற நாடுகளில் நோயை விரைவாக எதிர்கொள்ளும் திறனைத் தாமதப்படுத்துகிறது.

சோசலிசத்தின் மைய அம்சம் ஜனநாயக முறையில் இயங்கும் திட்டமிட்ட பொருளாதாரம்: பணம் செலுத்தும் திறனின் அடிப்படையில் இல்லாமல் தேவைக்கேற்ப அனைத்து வளங்களும் ஒதுக்கப்படும் ஒரு பொருளாதாரம். தேவை என்பது தயாரிப்பாளர்கள், நுகர்வோர் ஆகிய இருதரப்பாலும் ஜனநாயக முறையில் தீர்மானிக்கப்படுகிறது. தொழிலாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உற்பத்திச் சக்திகள் இருப்பதால், அவசர காலத்தில் இந்த பொருட்களின் உற்பத்தியை விரைவாக அதிகமாக்க முடியும்

மேலும் மூளை மற்றும் உடல் உழைப்புக்கு இடையிலான தடைகளை நீக்குவதன் மூலம், பெருமளவிலான தொழிலாளர்கள் முழு உற்பத்திச் செயல்முறையையும் நன்கு அறிந்திருப்பார்கள், தேவையான துறைகளில் வேலைசெய்யவும் தயாராக இருப்பார்கள். அர்ஜென்டினாவில் மேடி கிராஃப், ஸ்பெயினில் மொன்ட்ராகன் போன்ற முதலாளித்துவத்திற்குள்ளான தொழிலாளர் கூட்டுறவு நிறுவனங்களில், தொழிலாளர்கள்

ஏற்கெனவே உற்பத்தியின் அனைத்து அம்சங்களையும் கற்றுக்கொண்டுள்ளார்கள். இது கூடுதல் முயற்சி தேவைப்படும் துறைகளுக்கு தொழிலாளர்களை மாற்ற இடமளிக்கிறது.

ஒரு நாட்டில் மட்டுமே சோசலிசம் இருக்க முடியாது, எனவே உலகளாவிய திட்டமிட்ட பொருளாதாரம் இந்த நேரங்களில் மிகவும் அவசியம். ஒரு நாடு பற்றாக்குறையை சந்தித்தால், மற்ற நாடுகள் அதை ஈடுசெய்ய வேண்டும். கொரோனா வைரஸ் போன்ற உலகளாவிய தொற்றுநோய்களின் போது ஆட்சி செய்ய இது முக்கியமானது: நாம் அதை எல்லா இடங்களிலும் தடுப்பதால் மட்டுமே நோய் தடுக்கப்படும். உலகளாவிய திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தில், இது மிகவும் எளிதான பணியாக இருக்கும்.

**வீட்டில் தங்குவது:**

ஒருவர் நோய்வாய்ப்பட்டால், விடுப்பு எடுத்துக்கொள்வதன் மூலம் தன்னையும் மற்றவர்களையும் பாதுகாக்க முடிவு எடுத்தால், வேலை இழப்பது பற்றியோ, வாடகை செலுத்துவது பற்றியோ, உணவு பற்றியோ அல்லது தங்கள் குழந்தைகளின் பராமரிப்பு பற்றியோ சோசலிசத்தில் ஒருபோதும் கவலைப்பட வேண்டியதில்லை. முதலாளித்துவத்தின் கீழ் வீட்டுவசதி, சுகாதாரம் போன்ற சேவைகள் சரக்குகளாகக் குறுக்கப்பட்டுள்ளன. நோய்வாய்ப்பட்டிருக்கும் போதும்; பிறருக்குத் தொற்ற வைக்கும் அபாயத்துடன் வேலை செய்யுங்கள் அல்லது உங்கள் வேலையை இழக்க நேரிடும் அபாயத்தோடு வீட்டிலேயே இருங்கள் என்ற இறுதி எச்சரிக்கையையே பெரும்பாலும் முதலாளித்துவம் மக்களுக்கு முன்வைக்கிறது.

சோசலிசத்தின் கீழ், உற்பத்தி அதிகளவில் இயந்திரமயமாக்கப்படுவதாலும் மற்றும் தேவையற்ற வேலைகள் நீக்கப்படுவதாலும் - விளம்பரத் தொழிலே விடைகொடு! உடல்நலக் காப்பீட்டுத் தொழிலே விடைகொடு! - நாம் வேலைசெய்ய வேண்டிய நேரத்தின் அளவு வெகுவாகக் குறையும். நாளின் பெரும்பகுதியை நாம் கலையாக்கத்திலோ அல்லது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடனோ களித்திருப்போம்.

நோய்ப் பரவலின் போது, சளிக்கான முதல் அறிகுறி வரும்போதே வீட்டிலேயே இருக்க முடிவதுடன் உடனடியாகப் பரிசோதிக்கப்படவும் முடியும், ஒரு திட்டமிட்ட பொருளாதாரத்தில், வளங்களை அவை மிகவும் தேவைப்படும் இடங்களுக்கு நம்மால் ஒதுக்க முடியும், மேலும் நோய் காரணமாகத் தொழிலாளர் எண்ணிக்கை குறைவதையும் கவனத்தில் கொள்ள முடியும்.

**கொரோனா வைரஸ் சிகிச்சைகள் எங்கே?**

தற்போது, பல இலாப நோக்குடைய நிறுவனங்கள் கோவிட்-19 க்கு சிகிச்சையளிக்க முடியுமா அல்லது தடுக்க முடியுமா என்பதை அறிய (சில நேரம் புதிய, சில நேரம் முன்பு நிராகரிக்கப்பட்டு இப்போது மறுசுழற்சி செய்யப்பட்ட) சிகிச்சை முறைகளை சோதிக்க முயற்சி செய்கின்றன. ஒரு கோவிட்-19 தடுப்பூசியைத் தயாரிப்பதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும் போது, இந்தத் தடுப்பூசியை சில மாதங்களுக்கு மனிதர்களிடம் சோதனை செய்ய முடியாது என்று உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தின் (FDA) உயிரியல் மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் பீட்டர் மார்க்ஸ் கூறுகிறார். கடந்த வாரம் கூட, சுகாதார மற்றும் மனித சேவைகள் செயலாளர் அலெக்ஸ் அசார் புதிதாக உருவாக்கப்பட்ட கொரோனா வைரஸ் தடுப்பூசி அனைவருக்கும் மலிவு விலையில் கிடைக்கும் என்று உத்தரவாதம் அளிக்க மறுத்து விட்டார், "அந்த விலையை எங்களால் கட்டுப்படுத்த முடியாது, ஏனெனில் எங்களுக்குத் தனியார் துறை முதலீடு வேண்டும்." என்று தெரிவித்துள்ளார். எலி லில்லிக்கு , நிறுவனத்தின் மருந்துகளின் விலைகள் கணிசமாக உயர்ந்த நேரத்தில் பணியாற்றிய முன்னாள் உயர்மட்டப் பரப்புரையாளரிடமிருந்து இந்த அறிக்கை வருவதைக் குறைந்தபட்சமாக முரண் என்றே சொல்ல வேண்டும்.

கிலீட் சயின்சஸ், மாடர்னா தெரபியூட்டிக்ஸ் மற்றும் கிளாக்சோஸ்மித்க்லைன் போன்ற நிறுவனங்கள் அனைத்திலும் பல்வேறு சிகிச்சைகள் வளர்ச்சி நிலையில் உள்ளன. ஒவ்வொரு நிறுவனமும் தங்களது குறிப்பிட்ட கோவிட்-19 சிகிச்சையை வைத்து இலாபங்களை அதிகப்படுத்துவதில் கொண்டுள்ள ஆர்வம், தங்களின் வளங்களையும், தரவுகளையும் ஒருங்கிணைத்து மிக விரைவாக சிகிச்சையளிப்பதற்கான வாய்ப்பை தடுக்கிறது. கோவிட்-19இன் ஆராய்ச்சி நிலை முதலாளித்துவம் “புதிய கண்டுபிடுப்புகளை ஊக்குவிக்கிறது” என்ற பொய்களை அம்பலப்படுத்துகிறது.

வரி செலுத்துவோரின் பணத்தில் நடக்கும் அரசு ஆய்வு இல்லாமல் "கார்ப்பரேட் கண்டுபிடுப்பு" என்று கருதப்படும் மருந்து வளர்ச்சியில் பெரும்பகுதி சாத்தியமேயில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். பேஹ்-டோல் சட்டம் போன்ற மசோதாக்கள், பொது சுகாதார நிறுவனங்களான தேசிய சுகாதார நிறுவனம் (NIH) போன்றவற்றில் உருவாக்கப்பட்டுள்ள

மூலக்கூறுகள் அல்லது பொருட்களின் காப்புரிமையை நிறுவனங்கள் வாங்குவதற்கும் பின்னர் லாபத்தை அதிகரிக்க விலைகளை உயர்த்திக் கொள்ளவும் அனுமதிக்கின்றன. அறிவியல் மற்றும் தொழில்துறை ஒருங்கிணைப்பு மையம் (CISI) நடத்திய ஆய்வு 2010க்கும் 2016 க்கும் இடையில் அரசாங்க நிதியுதவியில் நடந்த ஆராய்ச்சிகளுக்கும், உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தின் (FDA) ஒப்புதல் பெற்ற ஒவ்வொரு புதிய மருந்துக்கும் இடையிலான உறவைப் பகுப்பாய்வு செய்தது. இதில் ஆய்வாளர்கள் "சந்தைக்கு அங்கீகரிக்கப்பட்ட 210 மருந்துகள் ஒவ்வொன்றும் தேசிய சுகாதார மையத்தின் (NIH) ஆதரவு பெற்ற ஆய்வுகளிலிருந்து வெளிவந்தவை" என்பதைக் கண்டறிந்துள்ளனர்.

முதலாளிகளைக் கையகப்படுத்துவது என்பதன் பொருள் பொதுமக்கள் இனி தனியார் நிறுவன இலாபங்களுக்கு மானியம் வழங்க வேண்டியதில்லை என்பதே. மருந்துத் துறையின் தேசியமயமாக்கினால், ஒருசிலருக்கு மட்டுமே பயனளிக்கும் அதிரடி மருந்துகளில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, உலகின் சவால்களைச் சமாளிக்க அறிவுசார் மற்றும் நிதி மூலங்களைத் திரட்ட வழிபிறக்கும். கோவிட்-19 வரும் சமயத்தில், உலகின் மிகச் சிறந்த மூளைகள், வளங்களைச் சேகரிப்பதற்கும் விரைவான சிகிச்சை முறைகளை உருவாக்குவதற்கும், ஒரு பெரிய அணிதிரட்டலையும், ஒருங்கிணைப்பையும் உருவாக்குவதைக் காண்போம். உண்மையில், இந்தத் துறைகளைப் படிக்க விரும்புவோர் இனி அடைக்க முடியாத கடனை எதிர்கொள்ள வேண்டியதில்லை என்பதால் அதிகமான மருத்துவர்களும் விஞ்ஞானிகளும் கிடைக்கக் கூடும்.

## சோசலிசத்தில் உடல்நலப் பராமரிப்பு:

சோசலிசத்தின் கீழ், அனைத்து உடல்நலப் பராமரிப்பு மையங்களும் மருத்துவர்கள், செவிலியர்கள், ஊழியர்கள் மற்றும் நோயாளிகளால் ஜனநாயக முறையில் நடத்தப்படும். மருத்துவமனைகள், மருந்து நிறுவனங்கள், சாதன உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள் ("மருத்துவத் தொழில்துறை வளாகத்தை" உருவாக்கும் முக்கிய ஆட்கள்) ஆகியவற்றில் பணக்கார முதலாளிகள் முக்கிய முடிவுகளை எடுக்கும் தற்போதைய அமைப்பிலிருந்து இது மிகவும் வேறுபட்டதாக இருக்கும். கோவிட்-19 ஏற்பட்டால், உடல்நலப் பாதுகாப்பு என்பது ஒரு மனித உரிமையாக இருக்கும், பணம் சம்பாதிப்பதற்கான வழிமுறையாக இருக்காது. இது பாதிக்கப்பட்ட ஒவ்வொரு நபரும் பொருளாதார அழிவுக்கு அஞ்சாமல் சோதனை

மற்றும் சிகிச்சையைப் பெற அனுமதிக்கும். மருத்துவமனையில் அனுமதிக்கவோ அல்லது தனிமைப்படுத்தவோ தேவைப்பட்டால், நோயாளி மற்றும் குடும்பத்தினர் மருத்துவக் கட்டணங்கள் பொருளாதார ரீதியாக அவர்களை அழிக்குமா என்று கவலைப்படுவதற்குப் பதிலாக அவர்களின் உடல்நலத்திற்கு எது சிறந்தது என்பதில் கவனம் செலுத்த முடியும்.

"உடல்நலப் பாதுகாப்பு" என்று கருதப்படுவதன் வரம்பும் விரிவாக்கப்பட வேண்டும். ஒரு நபரின் ஒட்டுமொத்த வாழ்நிலையும் சமூகச் சூழலுமே அவரின் உடல்நலத்தைத் தீர்மானிப்பதில் முக்கியத்துவம் பெறுகிறது. இதன் பொருள் என்னவென்றால் சோசலிசத்தின் கீழ் சுகாதார அமைப்பு என்பது தீர்வுபெறாமல் உள்ள காலநிலை நெருக்கடி போன்ற பிரச்சினைகளையும் கவனத்தில் கொள்ளும். கோவிட்-19க்கும் காலநிலை மாற்றத்திற்கும் இடையிலான தொடர்பு இன்னும் நிறுவப்படவில்லை என்றாலும், அதிகரித்து வரும் உலகளாவிய வெப்பநிலை --- பெரும்பாலும் 100 பெரிய நிறுவனங்கள் மற்றும் இராணுவ-தொழில்துறை வளாகங்களால் அதிகரித்துள்ளது இந்த வெப்பநிலை --- எதிர்காலத்தில் புதிய நோய்க் காரணிகள் தோன்றுவதை அதிகரிக்கும். குறுகிய குளிர்காலம், நீர்ச் சுழற்சிகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் மனிதர்களுக்கு நெருக்கமாக வனவிலங்குகளின் இடம்பெயர்தல் அனைத்தும் புதிய நோய் வெளிப்படும் அபாயத்தை அதிகரிக்கும்.

முதலாளித்துவம் தொற்றுநோய்க்கான நிலைமைகளை உருவாக்கியுள்ளது. முதலாளித்துவத் "தீர்வுகள்" போதுமானவையாக இல்லை மேலும் அவை நெருக்கடியை அதிகரிக்கின்றன, அதாவது அதிக நோய் மற்றும் அதிக மரணங்களை ஏற்படுத்துகின்றன. கொரோனா வைரஸின் தொடர்ச்சியான பரவலுக்கு முதலாளித்துவம் ஒரு காப்பகமாக இருந்து வருகிறது. இந்த அமைப்பின் கீழான உடல்நலப் பாதுகாப்பு எப்போதுமே தொற்றுநோய்களை சரியாக்குவதற்குப் போதுமானதாக இருக்காது. உடல்நலம் மற்றும் நல்வாழ்வைப் பற்றிய ஒரு சமூகப் பகுப்பாய்வை நாம் செய்ய வேண்டும் என்ற உண்மையை கொரோனா வைரஸ் சுட்டிக்காட்டுகிறது. நாம் அனைவரும் ஒருவருக்கொருவர், இயற்கையோடும், நம்மைச் சுற்றியுள்ள சூழலுடனும் இணைக்கப்பட்டுள்ளோம். சோசலிசம் அந்த உறவுகளின் அடிப்படையில் சமூகத்தை மறுசீரமைக்கும்.

அதே நேரத்தில், சோசலிசம் ஒரு கற்பனாவாதம் அல்ல. சோசலிசத்திலும் தொற்றுநோய்கள் அல்லது கொள்ளைநோய்கள் இருக்கலாம். எவ்வாறாயினும், ஒரு சோசலிச சமுதாயம் - தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் திட்டமிட்ட பொருளாதாரத்தில் அனைத்து உற்பத்தியும் ஒழுங்கமைக்கப்பட்ட ஒன்று. அதில் வளங்களை மிகச் சிறப்பாக ஒதுக்கவும், மேலும் மக்களின் படைப்பு மற்றும் விஞ்ஞான ஆற்றலை உகந்த பணிக்குச் செலுத்தவும் முடியும்.

மூலம்: https://www.counterpunch.org/

---

மகிழன்

## கொரோனாவும் அன்றாடங்காய்ச்சிகளின் நிலையும்:

இந்திய அரசு அமைப்புசாராத் தொழில்கள் என்று 60 வகையான தொழில்களை வரையறை செய்துள்ளது. அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியத்தையும் அமைத்துள்ளது. ஆனால் அந்த அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியம் என்பது முழுக்க முழுக்க மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இருக்கக் கூடிய ஒன்றாக இருக்கிறது. தற்போது தொழில்துறை அமைச்சராக இருப்பவர் நிலோபர் கபில் ,இவரின் அமைச்சகத்தின் கீழ்தான் இந்த அமைப்புசாராத் தொழிலாளர் நலத்துறை வருகிறது. இதில் என்னென்ன துறைகள் வரும் என்று பார்க்கலாம்.

1.விவசாயத் தொழிலாளர் நல வாரியம்

2. மீனவர் நல வாரியம்

3. கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம்

4. சீர்மரபினர் நல வாரியம்

5. பழங்குடியினர் நல வாரியம்

6. ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம்

7. பனைமரத் தொழிலாளர் நல வாரியம்

8. காலணித் தொழிலாளர் நல வாரியம்

9. மாற்றுத்திறனாளிகள் நல வாரியம்

10. திருநங்கைகள் நல வாரியம்

11. முடிதிருத்துவோர் நல வாரியம்

12. தையல் தொழிலாளர் நல வாரியம்

13. ஓவியர் நலவாரியம்

14 கைத்தறி மற்றும் கைத்தறி நெசவுத் தொழிலாளர் நல வாரியம்

15. தூய்மைப் பணியாளர் நல வாரியம்

16. நரிக்குறவர் நலவாரியம்

17. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்

18. கிராமக் கோவில் பூசாரிகள் நல வாரியம்

19. நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்

20. அருந்ததியர் நல வாரியம்

21. கட்டிடத் தொழிலாளர் நல வாரியம்

22. புத்தகப் பதிப்பாளர், விற்பனையாளர் மற்றும் பணியாளர் நல வாரியம்

23. அச்சகத் தொழிலாளர் நலவாரியம்

24. கேபிள் டிவி ஆபரேட்டர் நலவாரியம்

25. தமிழ்நாடு வணிகர்கள் நல வாரியம்

26. தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியம்

27. பொற்கொல்லர் நல வாரியம்

28. தொழிலாளர் நல வாரியம்

அமைப்புசாராத் தொழிலாளர்களாகப் பதிவு செய்வதற்கான தகுதிகள் அல்லது வரையறைகள் என்று அரசு சில வரையறைகளைத் தந்திருக்கிறது. அவையாவன:

1.18 முதல் 60 வயது வரை இருக்க வேண்டும்

2. வாக்காளர் அடையாள அட்டை

3. குடும்ப அடையாள அட்டை (ரேஷன் கார்டு)

4. அரசு மருத்துவரிடம் பிறப்பு தொடர்பான கையொப்பமிட்ட சான்றிதழ் 5. தேசியமயமாக்கப்பட்ட வங்கிக் கணக்கு

6. தொழில் வகைச் சான்று (தொழில் வழங்குபவரிடமிருந்து கையொப்பம்)

இவ்வாறு பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் இதனை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை

புதுப்பிக்க வேண்டும். இவர்கள் அரசின் ஊழியர்களாகவோ அல்லது வேறு ஏதாவது அரசின் உதவி திட்டத்தில் சேர்ந்தவராகவோ இருக்க கூடாது.

60 வயதிற்கு மேற்பட்ட ஒருவர் தனது தேவைகளுக்காகத் தொழிலில் ஈடுபடுவராக அல்லது பணி செய்பவராக இருந்தால் அவர் இந்தத் திட்டத்தில் பதிவு பெறத் தகுதி பெற்றவர் அல்லர். இத்தகையவர்களுக்கு ஓய்வூதியத் திட்டமாக ரூபாய் 200 முதல் 500 வரை வழங்கப்படும். இந்தத் தொகையை வைத்துக் கொண்டு ஒருவர் எவ்வாறு தன் தேவைகளை நிறைவு செய்து கொள்ள முடியும்? இந்தத் தொகையைப் பெறுவதற்கு தேசிமயமாக்கப்பட்ட வங்கியில் கணக்கு வைத்திருக்க வேண்டும். ஆனால் வங்கிக் கணக்கில் குறைந்தபட்ச வைப்புத் தொகையாக 500 முதல்1000 ரூபாய் இருக்க வேண்டும். இது எந்த வகையில் சாத்தியம் என்பதற்கு அரசுதான் விடை சொல்ல வேண்டும். மேலும் இசுலாமிய உலமாக்களுக்கும் கோவில் பூசாரிகளுக்கும் இடமளிக்கும் இந்தத் திட்டத்தில் கிறித்தவ மற்றும் பிற மதப் பரப்புரை பணியாளர்களுக்கு இடமளிக்காதது அப்பட்டமான மதப்பாகுபாடே ஆகும்.

30 11 2019 அன்று தமிழகத் தொழில்துறை அமைச்சர் நிலோபர் கபில் பிரதம மந்திரி தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் குறித்து பேட்டி அளித்திருந்தார், அந்தப் பேட்டியில் இந்த ஓய்வூதியத் திட்டத்தில் இதுவரை 53 ஆயிரத்து 549 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார். மேலும் சிறு வணிகர்கள் சில்லறை வணிகர்கள் ஓய்வூதியத் திட்டத்தில் 213 பேர் இணைந்துள்ளதாக்க் கூறினார். தமிழ்நாடு முழுவதும் 213 பேர் மட்டுமே சிறு வணிகர்களாக குறு தொழில் செய்பவர்களாக இருக்கிறார்களா? என்ற கேள்வி எழுகிறது. அப்படி என்றால் இப்படிப் பதிவு செய்யப்படாதவர்களுடைய எண்ணிக்கை மிக மிக அதிகம் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. அதுபோல இதுவரையில் அமைப்புசாராத் தொழிலாளர்களாகப் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 31/10/2019 வரை 74,66129 பேர். இதில் பயனடைந்தோர் 71,11,397 பேர் என்று கூறினார். பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கும் பயனடைந்த தொழிலாளர்களுக்கும் இடையில் 3 1/2 லட்சம் பேர் பயனடையாமல் இருக்கிறார்கள் என்பதை அமைச்சரே ஒப்புக் கொள்கிறார். அப்படி என்றால் பதிவு செய்யப்படாதவர்கள் எண்ணிக்கையை நாம் கணக்கிட்டுக் கொள்ளலாம். தமிழகத்தின் மக்கள் தொகை 8 கோடியாக வைத்துக்கொண்டால், பணிக்குச் செல்லாத பெண்கள், குழந்தைகள், மாணவர்கள், வயோதிகர்கள், மாற்றுத்திறனாளிகள், நோயுற்றவர்கள், சரிபாதி

இருக்கிறார்கள் என்று எடுத்துக்கொண்டால் கூட, மீதம் 4 கோடிப் பேர். அந்த 4 கோடிப் பேரில் அரசு ஊழியர்கள் பதிவு செய்யப்பட்ட அமைப்புகளில் பணிபுரிவோர் நான்கில் ஒரு பங்குதான் இருப்பார்கள். அதாவது ஒரு கோடிப் பேர் இந்த வகை என்று எடுத்துக்கொண்டால் மீதம் இருக்கிற 3 கோடிப் பேர் அமைப்புசாராத் தொழிலாளர்கள். ஆனால் இங்கே பதிவு செய்யப்பட்டுள்ள எண்ணிக்கை வெறும் 74 இலட்சம் மட்டுமே. அப்படி என்றால் மீதம் இருக்கிற 3 கோடி மக்கள் அரசின் திட்டத்தில் சேராதவர்கள். ஆனால் அரசு இந்த அமைப்பு சாராத் தொழிலாளர் நலவாரியத்தில் இணைந்துள்ள தொழிலாளர்களுக்கு மட்டும் ஆயிரம் ரூபாய் என்ற அறிவிப்பைச் செய்திருக்கிறது. அப்படி என்றால் இந்தத் திட்டத்தில் இணையாதவர்களின் நிலைமை என்ன? அவர்களுக்கு எப்படி இந்த ஆயிரம் ரூபாயைக் கொண்டுசேர்ப்பது? என்ற கேள்வி எழுகிறது. இல்லை, அவர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு இறந்து போகட்டும் என்று அரசு நினைக்கிறதா? என்ற ஐயமும் எழுகிறது.

அதற்கு நாம் என்ன சொல்கிறோம் என்றால், இது துயர் தணிப்பு (நிவாரண) நிதி அல்ல. துயர்தணிப்பு நிதி வழங்கும் போது புள்ளிவிவரங்களைக் கணக்கில் கொண்டு துறைவாரியாகப் பட்டியல் தயாரித்து இழப்பீட்டுத் தொகை வழங்கலாம். ஆனால் இப்போதுள்ள சூழலில் அடிப்படைத் தேவைகளுக்கே ஆதாரமில்லாத ஒரு நிலையில் மக்கள் இருக்கிறார்கள். இந்த நிலையில் நாம் பதிவு செய்தவர்கள், பதிவு செய்யாதவர்கள், அமைப்பு சார்ந்தவர்கள், அமைப்பு சாராதவர்கள் என்ற கணக்கையும் அதற்கான புள்ளிவிவரங்களையும் தேடிச் செல்வது அநியாயமானது. அல்லது அப்படி நீங்கள் அமைப்புசார் தொழிலாளர்களாகப் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு நிதி வழங்குகிறீர்கள் என்றால் இந்த அமைப்பில் அல்லது திட்டத்தில் சேராத தொழிலாளர்களுக்கு என்ன செய்வது? அவர்கள் இந்தத் தொகையை எப்படி பெற்றுக் கொள்வது? என்ற திட்டத்தையும் சேர்த்து அறிவிக்க வேண்டும்.

**ஓட்டுநர்கள்**

உதாரணமாக நான் நான்கு ஆண்டுகளாய் ஓட்டுநராகப் பணிபுரிந்து கொண்டிருக்கிறேன். ஆனால் நான் எந்த ஓட்டுநர் சங்கத்திலும் அல்லது அரசின் திட்டத்திலும் இதுவரையில் இணையவில்லை. நான் மட்டுமல்ல தமிழகத்தில் அமைப்புசாராத் தொழிலாளர்களாகத் தங்களைப் பதிவு செய்து கொண்ட ஓட்டுநர்களின் எண்ணிக்கை 83 ஆயிரம். ஆனால்

சென்னையில் மட்டுமே ஒரு 2 லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட வாகன ஓட்டுநர்கள் இருக்கிறார்கள். ஓட்டுநர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ளவர்கள் 72,500 பேர். ஆட்டோ ஓட்டுநர்கள் 2,85,000 பேர். மேலும் இது சார்ந்த தொழிலில் ஈடுபடுவோர் 6,00,000 பேர். ஓட்டுநர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ளவர்கள் 45,000 பேர். மொத்தமாக 15,00,000 பேர் தமிழ்நாடு முழுவதும் ஓட்டுநராகப் பணிபுரிகின்றனர்.

குறிப்பாகக் கடந்த சில ஆண்டுகளாக இந்தியப் பொருளாதாரச் சரிவு பற்றி மக்களிடையேயும் சட்டமன்ற, நாடாளுமன்றத்திலும் விவாதங்கள் நடந்து வருகின்றன. மத்திய நிதியமைச்சராகப் பொறுப்பேற்ற நிர்மலா சீதாராமன் அவர்கள் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும் போது, வாகனங்கள் விற்பனைக் குறைவுக்குக் காரணம் ஓலா, உபேர் போன்ற நிறுவனங்களின் வருகை என்று பதில் கூறினார். தற்போது மக்கள் அனைவரும் ஓலா, உபேர் போன்ற சேவைகளை பயன்படுத்தத் தொடங்கி விட்டதால் வாகன விற்பனை வெகுவாகக் குறைந்திருக்கிறது என்று கூறினார். ஆனால் உண்மையில் (commercial vehicle) தொழில்முறை வாகனங்கள் வாங்கும் எண்ணிக்கையும் பெருமளவில் குறைந்திருக்கிறது. அதற்குக் காரணம் கடந்த 3 ஆண்டுகளாக இந்தியப் பொருளாதார வீழ்ச்சியை விட இந்த வாகன சேவைத்துறை அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கிறது. அப்படி இருக்க இப்படி ஒரு கூற்றை நாடாளுமன்றத்திலேயே நிதியமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்த ஓலா,உபேர் போன்ற நிறுவனங்களில் பணிபுரியும் ஓட்டுநர்கள் கூட இந்த நலவாரியங்களில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் அல்ல, அதற்கு நானே ஒரு சான்று. நான்கு வருடங்களாக உபேரில் பணிபிரிந்து வருகிற நான் எந்த நலவாரியத்திலும் பதிவு செய்யவில்லை. ஆகவே பதிவுசெய்யப்பட்ட ஓட்டுநர்களுக்கு மட்டும் ஆயிரம் ரூபாய் என்று அறிவிக்கின்ற செயலை ஏற்றுக் கொள்ளவே முடியாது. அதற்கு பதிலாக பேட்ஜ் லைசென்ஸ் உள்ள ஓட்டுநர்களுக்கு இந்தத் தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கலாம். அதற்கு ஒரு toll-free (கட்டணமில்லாத) எண் கொடுத்து அதன் மூலம் இந்த நிதியைப் பெறுவதற்கு வகை செய்யலாம். ஆயிரம் ரூபாய் என்பது அற்பத் தொகை, அது எந்த வகையிலும் பயன்தராது என்பதையும் அரசுக்குத் தெரிவிக்கிறோம். ஒவ்வொரு துறையிலும் அவர்களுடைய தொழில் முறை சான்றுகளை பயன்படுத்தி, சான்று இல்லாதவர்களுக்கு அரசே உடனடியாக சான்றிதழ் வழங்கி அவர்களுக்கான உதவிகளை செய்ய முன்வர வேண்டும்.

தற்போது அரசு ஒரு குடும்பத்திற்கு 1000 ரூபாய் என்ற அறிவிப்பை அறிவித்திருக்கிறது. அதாவது குடும்ப அட்டைதாரர்களுக்கு ஆயிரம் ரூபாய் என்ற அறிவிப்பு! குடும்ப அட்டை இல்லாத பல குடும்பங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்டவர்களுக்கு இந்த உதவித் தொகையை எவ்வாறு கொண்டுசேர்ப்பது என்ற ஏற்பாடுகளையும் செய்ய முன்வர வேண்டும். குடும்பத்திற்கு 1000 ரூபாய் என்ற திட்டம் உண்மையில் பயன் தரக் கூடியது அல்ல. ஒரு குடும்பத்தில் 3 பேர் இருக்கலாம் ஒரு குடும்பத்தில் 7 பேர் இருக்கலாம் மூன்று பேருக்கு 1,000 ரூபாய் போதும் என்றால் ஏழு பேருக்கு அந்தத் தொகை எவ்வாறு போதுமானதாக இருக்கும்? ஆகவே குடும்பஅட்டையில் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் இந்தத் தொகையை நிர்ணயிக்க வேண்டும். அல்லது ஆதார் அட்டையைக் கணக்கில் கொள்ளலாம்.

கொரோனா பரவாமல் தடுக்க தமிழ்நாட்டிலுள்ள அனைவரையுமே வீட்டில் இருக்க அரசு பணிக்கிறது. அமைப்புசாராத் தொழிலாளர்கள், அமைப்புசார்ந்த தொழிலாளர்கள், பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்கள், பதிவு செய்யப்படாத தொழிலாளர்கள், வேறு மாநிலத்தவர், வேறு மாநிலத்திலிருந்து பயிலும் மாணவர்கள், வேறு மாநிலத்திலிருந்து இங்கே பணி செய்கிற பணியாளர்கள்... என்று அனைவரையும் வீட்டிலிருக்க அரசு பணிக்கிறது. அப்படி இருக்க பதிவு செய்யப்பட்டவர்களுக்கு மட்டும் உதவித் தொகை அறிவிப்பது மோசமான நடவடிக்கை. அரசு தன் திட்டத்திற்கும் தன் அறிவிப்புக்கும் எதிரான வேலையை செய்கிறது. இதனைப் புரிந்துகொண்டு அனைவருக்கும் உதவித்தொகை தருகின்ற வகையில் அரசுகள் திட்டமிட வேண்டும். மேலும் உதவித் தொகைகளை அரசு நேரடியாக வீட்டில் சேர்ப்பிக்க வேண்டும். ரேஷன் கடைகள் மூலமாக அல்லது அரசு அலுவலகங்களில் சென்று மக்கள் இந்த உதவித் தொகைகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் இருப்பது மக்கள் வெளிவருவதற்கான வாய்ப்பு வழிகளை அரசே திறந்து விடுவது போல் இருக்கிறது.

பொது சமையல் கூடங்களை ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் பொழுது உணவுப் பொருட்களுக்கு மக்கள் வெளியில் வருகின்ற எண்ணிக்கை பெருமளவில் குறைக்கப்படும். பொதுச் சமையல் கூடங்களை ஆங்காங்கே முடிந்த அளவில் அமைத்து, உரிய நேரத்தில் உணவினை நேரடியாக அவரவர் வீடுகளுக்கு அரசே நேரடியாகக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும். அதற்கு குறிப்பிட்ட நபர்களை, தன்னார்வலர்களை பயிற்சி

கொடுத்து உரிய பாதுகாப்போடு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதுபோன்ற நடவடிக்கைகள்தான் மக்கள் வெளியில் வராமல் இருப்பதற்கான சூழலை உருவாக்கும் என்பதை புரிந்துகொண்டு அரசு துரிதகதியில் இதனைச் செய்ய வேண்டும்.

தற்போது உணவுப் பொருட்கள் கொண்டுசெல்லும் வாகனங்கள் போக்கு வரத்திற்கும் அவற்றின் விற்பனைக்கும் அரசு அனுமதி அளித்துள்ளது. மருத்துவ உதவிகளுக்காகவும் வாகனங்களைப் பயன்படுத்தலாம், வேறுபல அவசர உதவிக்காகவும் வாகனங்கள் செல்ல அனுமதிக்கிறது. அதற்காக அரசு உரிய அனுமதிச் சீட்டையும் வழங்குகிறது. இது வரவேற்கத் தக்கது. இதுபோன்ற பல்வேறு அத்தியாவசியத் தேவைகள் மக்களுக்கு இருப்பதைப் புரிந்து கொண்டு இவ்வாறான துறைகளை இனங்கண்டு அவை சார்ந்த தொழில்களில் ஈடுபடுவோரையும் அனுமதிக்க வேண்டும். இதுவே பெருந்திரளான மக்கள் தொடர்ந்து வீட்டில் இருப்பதற்கு அடிகோலும். ஆனால் அனைத்து தரப்பினருக்கும் உரிய பாதுகாப்புக் கருவிகளை 100 விழுக்காடு உறுதி செய்ய வேண்டும்.

**<u>சிறு குறு தொழில்கள்</u>**

இந்தியப் பொருளாதாரத்தில் (GDP) விவசாயத்திற்கு அடுத்தபடியாக பெரும் பங்கு வகிப்பவை சிறு குறு தொழில்கள். ஒன்றரைக் கோடி அளவில் விற்றுமுதல் (turnover) காணும் தொழில்களை சிறு குறு தொழில்கள் என நிர்ணயம் செய்கிறார்கள். இந்த தொழிலில் ஈடுபடுவோர் பெருபாலும் அமைப்புசாராத் தொழிலாளர்களாக இருக்கின்றனர். நகர்ப்புறங்களில் இருக்கும் வெகு சிலர் மட்டுமே சங்கமாகவோ அல்லது இது போன்ற திட்டங்களிலோ இணைந்துள்ளனர். இவர்களுக்கு எந்த ஏற்பாட்டையும் அரசு முன்னெடுக்கவில்லை. இவர்கள் வாங்கும் ஊதியத்திற்கு முறையான வங்கிக்கணக்கோ நிலையான ஊதியமோ கிடைப்பதில்லை. எனவே வருமான அடிப்படையில் வங்கிகள் இவர்களுக்கு கடன் வழங்கவும் முன்வருவதில்லை. இந்தச் சூழலில் கெந்துவட்டிக்குக் கடன்வாங்கும் நிலை உருவாகியிருக்கிறது. ஆனால் அதையும் எவ்வாறு திருப்பி செலுத்துவது என்ற மன உளைச்சல் ஏற்படுகிறது. சிலர் பயந்து கொண்டு வயிற்றைக் கட்டிக்கொண்டு வீட்டில் இருக்கின்றனர்.சிறு குறு தொழிலில் முதலீடு செய்துள்ள தொழில்முனைவோரின் நிலை இன்னும் மோசமான நிலையில் உள்ளது. பெருநிறுவனங்கள் போலப் பெருநிதியைக் கையிருப்பு வைத்துக்கொண்டு தொழில் செய்வதில்லை. இவர்கள். தங்களை நம்பியுள்ள ஊழியர்களுக்கும்

ஊதியம் கொடுக்க வேண்டியுள்ளது, கடை வாடகை, மின்கட்டனம் GST வரி உள்ளிட்ட தங்களின் தேவையையும் நிறைவு செய்ய வேண்டியுள்ளது. ஊழியர்களுக்கு ஊதியத்தை வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தும் அரசு அந்தத் தேவையை எவ்வாறு நிறைவு செய்வது என்பதற்கு எந்த உத்தரவாதமும் தரவில்லை. கடன் தவணை மற்றும் GST க்கு மூன்று மாத ஒத்திவைப்பு என்று அறிவித்திருந்தாலும் வங்கிகள் கணினிமயமாகி விட்டதால் auto credit முறையில் தவணைகள் எடுத்துக் கொள்கின்றன. வங்கியில் பணம் இல்லாதவர்களுக்கு தண்டத் தொகையோடு தவணை செலுத்தும் படி குறுஞ்செய்தி வருகிறது. ஒவ்வொரு வங்கியும் ஒவ்வொரு விதமாக மக்களுக்கும் வாடிக்கையாளருக்கும் வழிமுறை சொல்லி அறிவுறுத்துகிறது. இது மக்களுக்குப் பெரும் குழப்பம் ஏற்படுத்துகிறது. மேலும் மூன்று மாதம் தாமதமாகத் தவணை செலுத்தினால் அந்த மூன்று மாதத்தை தவணைக் காலத்தில் நீட்டித்து அதற்கும் சேர்த்து வட்டி வசூலிக்கப்படும் அபாயம் உள்ளது. ஆகவே மக்களுக்குப் பயன்படும் வகையில் முறையான அறிவிப்பை RBI அறிவிப்பதோடு வங்கிகள் அதனை நடைமுறைப்படுத்தவும் அரசாணை பிறப்பிக்க வேண்டும்.

**ஒப்பந்தத் தொழிலாளர்கள்**

ஒவ்வொரு தொழிலிலும் ஒவ்வொரு நிறுவனத்திலும் சில குறிப்பிட்ட வேலைகளுக்கு கணிசமான எண்ணிக்கையில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் பயன்படுத்தப்படுகிகிறார்கள். இவர்கள் ஊழியர்களாகக் கருதப்படமாட்டார்கள் ஆகவே ஊழியர்களுக்கு வழங்கப்படும் உரிமைகள் சலுகைகள் எதுவும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. அரசுத் துறைகளிலேயே ஒப்பந்த தொழிலாளர்கள் பெருமளவில் ஈடுபடுத்தப்படுத்துகிறார்கள். மின்வாரியம் போன்றவற்றில் ஒப்பந்தமே இல்லாத ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலைவாங்கப்படுகின்றார்கள். இவர்களுக்கு உரிய வழிவகைகளை அரசு அறிவிக்க வேண்டும். குறிப்பாக BSNL ஒப்பந்த ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை ரூ.20,000 கோடி இன்னமும் வழங்காமல் இருப்பது வேதனை. இந்தத் தொகையினை விடுவிப்பது இந்த நெருக்கடிச் சூழலில் அவர்களுக்கு உதவும். உடனே இதைச் செய்ய வேண்டும். மேலும் விவசாயத் தொழிலாளர்கள், தினக்கூலித் தொழிலாளர்கள் தாங்கள் சார்ந்த துறையில் வேலை இல்லாத போது வேறு தொழில்களில் ஈடுபடுவார்கள் இவர்கள் ஏற்கெனவே ஒரு தொழிலில் பதிவு செய்திருப்பதால் இன்னொரு தொழிலில் தொழிலாளராகப் பதிவு செய்ய முடியாது. இது போன்று பல சிக்கல்கள் உள்ளதால் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு மட்டும் பணம் வழங்குவதை நம்மால் ஏற்க இயலாது.

அனைவருக்கும் உதவி செய்வதே சரி!

கொரோனா நோய்த்தொற்று ஏழை பணக்காரர் வேறுபாடு பார்க்காமல் வருவது போலவே அதனால் ஏற்படும் பொருளியல் பாதிப்பும் வேறுபாடு பார்ப்பதில்லை. அன்றாடங்காய்ச்சிகள் மட்டுமல்லாது பெருமளவில் நிலையான ஊதியம் பெறும் தொழிலாளர்களும் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகும் அபாயம் உள்ளது. குறிப்பாக சேவைத் துறை (service sector) மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் (IT) பணியில் ஊழியர்களின் வாழ்வு ஆபத்தான நிலையில் உள்ளதாகக் கூறுகின்றனர். நாம் வீட்டில் பாதுகாப்பாக இருப்பதற்கும் வெளிவராமல் இருப்பதற்கும் சேவைத் துறை பெருமளவில் உதவுகிறது. தொலைத்தொடர்பு ஊடகங்கள், இணையத்தள வசதிகள் பெருகிவிட்ட இந்த வாழ்வியலில் தகவல் தொழில்நுட்பத் துறையின் பங்கு பெரிது. கொரோனா பற்றிய விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள், அரசின் திட்டங்கள் எனப் பலவற்றையும் மக்களுக்குக் கொண்டுசெல்லும் பணியை இந்த நிறுவனங்கள் செய்கின்றன. ஆனால் இவர்களை வீட்டிலிருந்தே பணி செய்ய அரசு பணித்திருப்பதால் இவர்களின் பணிச்சுமை அதிகரித்திருக்கிறது. தொழில்நுட்ப சாதன வசதிக் குறைபாடு, இணைய இணைப்புச் சிக்கல், வீட்டின் சூழல் ஆகியவற்றால் இவர்களின் வேலையில் பல இடையூறுகள் தோன்றுகின்றன. மேலும் நிறுவனங்கள் நிதிச்சுமையைக் காரணங்காட்டி ஊழியர்களைக் குறைக்கும் முடிவை எடுக்க நேரிட்டால், அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள் வேலை இழக்கும் ஆபத்தும் உள்ளது. ஆகவே மக்களின் தேவைகளை நிறைவு செய்ய முன்னுக்கு நின்று பணிபுரியும் தொழில்களை கண்டறிந்து கணிசமான அளவில் அத்தொழில்களில் ஈடுபடத் துணை செய்ய வேண்டும். இதுவே மக்கள் தொடர்ந்து வீட்டில் இருக்கவும், கொரோனா அச்சமின்றி சமூகம் இயங்கவும் வழிசெய்யும்.

---

சிலம்புச்செல்வன்

## கொரோனா எதிர்ப்புப் போரின் முன்கள வீரர்களைக் காப்போம்!

புது வகை கொரோனா அல்லது கோவிட் - 19 என்னும் கொள்ளை நோயின் தாக்கம் இன்று உலகை உலுக்கிக் கொண்டுள்ளது. இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் நேரத்தில் உலகில் 26,37,314 பேர் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். 1,83,559 பேர் மரணமுற்றுள்ளனர். இந்தியத் துணைக்கண்டத்தில் 16, 689 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 686 பேர் இறந்துள்ளனர்.

இது உலகப்போர்; ஆனால் மறைமுகமான, அறிவிக்கப்படாத போர். கண்ணுக்குத் தெரியாத பகை கட்டுக்கடங்காத களத்தில் நிற்கிறது. "நம்முடைய நுரையீரல்களைக் கவ்விக் கொள்ளக் காத்திருக்கின்ற, கண்ணுக்குப் புலப்படாத, செத்துப் போகாத, ஆனால் உயிரும் இல்லாத சின்னஞ்சிறிய உறிஞ்சு குமிழ்கள்" கொண்ட நுண்ணுயிரி என்று வர்ணிக்கிறார் எழுத்தாளர் அருந்ததி ராய்.

மேற்குலக ஊடகங்கள் நோய்த் தொற்றுக்கு எதிரான போராட்டத்தை போரின் முன் களப்பகுதி (Frontline Zone) என்றே வர்ணிக்கின்றன. உயிர்காப்புப் பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோரை முன்கள வீரர்கள் (Frontline Warriors) என்றே அழைக்கின்றன.

கொரோனா எதிர்ப்புப் போரில் மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்களின் பங்கு அளப்பரியது. தங்களின் உயிரைத் துச்சமென மதித்து மக்களைக் காக்கப் போராடிக் கொண்டுள்ளனர். அதில் எண்ணற்ற மருத்துவர்கள் நோய்த் தொற்றில் பாதிக்கப்பட்டுள்ளனர். பல மருத்துவர்கள் தங்கள் விலைமதிப்பில்லா உயிரை ஈகம் செய்துள்ளனர். உலகம் முழுவதும் இதுதான் நிலை இத்தாலியில் 6,200 பேர் ஸ்பெயினில் 6,500 பேர் சீனாவில் 3,300 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரிட்டனில் சில இடங்களில் பணியில் ஈடுபட்டுள்ள சுகாதாரப் பணியாளர்களில் 50% பேருக்கு நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளது.

கோவிட் - 19 நோய்த் தொற்றால் உலகம் முழுவதும் சுகாதாரப் பணியாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். 52 நாடுகளில் 22,073 சுகாதாரப் பணியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று உலக நல்வாழ்வு அமைப்பு (WHO) கூறியுள்ளது (Business Standard, Apr -12).

உலகம் முழுவதும் நடைபெறும் கொரோனா எதிர்ப்புப் போராட்டத்தை இரண்டு வகையாக பிரித்து விடலாம். பொது சுகாதாரக் கட்டமைப்பினை வலுவாக வைத்துள்ள மக்கள் சீனம், கியூபா மற்றும் சில ஐரோப்பிய மக்கள்நல அரசுகள் (Welfare States) ஒரு வகையாகவும் மருத்துவத்துறை முற்றிலும் தனியார்மயமாக்கப்பட்ட அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி போன்ற நாடுகள் மற்றொரு வகையாகவும் போராடி வருகின்றன.

பொது சுகாதாரத் துறையை வலுவாக வைத்துள்ள நாடுகள் கொரோனா எதிர்ப்புப் போரில் அதிக

சேதம் இல்லாமல் மீண்டு விட்டன. அதேநேரம் மருத்துவத்தைத் தனியார்மயம் ஆக்கியுள்ள நாடுகள் அதிக உயிர்ச் சேதத்தைச் சந்தித்துள்ளன. அமெரிக்காவில் மட்டும் நோய்த் தொற்றில் பாதிக்கப்பட்டவர்கள் 8,00,926, இதில் இறந்தவர்கள் எண்ணிக்கை 40,073. இது ஒரு எடுத்துக்காட்டு மட்டுமே இங்கிலாந்து, ஸ்பெயின், இத்தாலி போன்ற நாடுகளிலும் நோய் தொற்றும் உயிர்ப் பலியும் மிகுந்துள்ளன.

மருத்துவத் துறையைத் தனியார்மயம் ஆக்கிய நாடுகளிலும் கூட ஜெர்மனி, தென் கொரியா, சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகள் நோய்த் தொற்றுத் தடுப்புப் பணியைத் திறம்படக் கையாண்டு வருகின்றன. அதற்கு அந்த நாடுகளின் நிர்வாகத் திறன் என்பதையும் தாண்டி அவை மக்கள் நலன் மீது காட்டிய அக்கறையும் அதற்கு இணக்கமான முறையில் அந்த அரசுகளிடம் நிலவிவரும் மக்கள் நலன் குறித்த கொள்கைகளுமே எனத்தகும்.

பொது சுகாதாரத் துறையை தனியார்மயம் ஆக்கிய நாடுகள் தற்போது அதில் இரு முனைகளில் திணறி வருகின்றன. ஒன்று மக்களை நோய்த் தொற்றிலிருந்து காப்பது; இரண்டு நோய்த்தொற்றை எதிர்த்துப் போரிடும் சுகாதாரப் பணியாளர்களை நோயிலிருந்தும் பிற சிக்கல்களிலிருந்தும் பாதுகாப்பது. இவை இரண்டிலுமே இந்த நாடுகள் கடும் தோல்வியையும் பின்னடைவையும் சந்தித்துள்ளன. இதன் விளைவாகப் பெருமளவிலான மக்களை இழந்தது மட்டுமின்றி போரின் முன்களப் படைவீரர்களான திறன் வாய்ந்த மருத்துவர்களையும் அவை பலிகொடுத்து வருகின்றன. தற்போது இந்த படிப்பினையிலிருந்து கற்றுக் கொண்டதன் விளைவாக ஸ்பெயின் நாடு மருத்துவத்தைப் பொதுத்துறையாக மாற்றியுள்ளது. அயர்லாந்து கொரோனா தடுப்புக் காலம் முழுவதும் தனியார் மருத்துவமனைகள் இலவச மருத்துவம் பார்க்க வேண்டும் என்று முடிவு செய்துள்ளது.

இந்தப் பின்புலத்தில்தான் இந்திய மற்றும் தமிழகச் சூழல்களை பார்க்க வேண்டியுள்ளது. இந்தியத் துணைக்கண்டத்தில் கொரோனா பெருந்தொற்றானது அதிகாரபூர்வமாக இரண்டாம் நிலையில் உள்ளது, அது எந்த நேரத்திலும் சமூகப் பரவல் நிலையை அடையலாம் என மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

கெடுவாய்ப்பாக இந்த நேரத்தில் இந்திய தலைமையமைச்சராக இந்துத்துவ கொடுநெறி வெறி

பிடித்த நரேந்திர மோதி பதவியில் உள்ளார். இது சூழலை மேலும் சிக்கலாக்கியுள்ளது. மதவெறி, பதவிவெறி, தன்முனைப்பு ஆகியவற்றின் ஆளுருவமாக இருப்பதால் இந்தப் பெருஞ்சிக்கலையும் கூட அவர் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று கையாளுகிறார்.

இந்தியா முழுமையும் எந்தவிதத் திட்டமிடலும் இன்றி ஊரடங்கு அறிவித்துள்ளார். இதன் காரணமாகப் பல இலட்சக்கணக்கான உள்நாட்டு புலம்பெயர் தொழிலாளர்கள், ஏழை எளிய அடித்தட்டு மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பெருந்தொற்றையும் கூட முதலாளிகளின் கொள்ளை இலாப நலனுக்குத் திருப்பி விடப் பார்க்கிறார். கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றத் 'தலைமையமைச்சர் நலம்' (PM CARES) என்ற புது உத்தியைக் கடைபிடிக்கிறார். மாநிலங்களுக்கு மிகக்குறைந்த நிதி ஒதுக்கி மாநிலங்களின் வயிற்றில் அடிக்கிறார். இவை எல்லாவற்றையும் விட எரிகிற வீட்டில் பிடுங்கி எடுத்து செல்வது போல மாநிலங்களுக்கிருந்த சுகாதார உரிமைகளைப் பறித்து வருகிறார். நா.உ.(MP)க்களின் நிதியை ஜனநாயக விரோதமாக அவர்களின் அனுமதி இன்றியே பறித்துள்ளார். இதன்மூலம் மக்கட்பகராளிகளின் உரிமையில் தலையிடுகிறார். ஊரடங்கு அறிவிக்கப்பட்டு 30 நாட்களுக்கு மேலான பிறகும் சொல்வித்தைகளில் மட்டுமே கவனம் செலுத்துகிறார். இதை தட்டிக்கேட்க வக்கற்ற நிலையில்தான் தமிழக முதல்வர் எடப்பாடி போன்றோர் உள்ளனர்.

சுகாதாரக் கட்டமைப்பிலும் கூட இந்தியா முழுமையிலும் ஒரே நிலையில் இல்லை.பீகாரிலும், குஜராத்திலும், தமிழ்நாட்டிலும் அவை நேர்கோட்டில் அமையவில்லை. பீகார் போன்ற பகுதிகள் பொதுசுகாதார கட்டமைப்பில் பின்தங்கியிருக்கும் போது தமிழகம் ஒப்பீட்டளவில் இந்தியாவின் முன்னேறிய மாநிலமாக அமைந்துள்ளது. அதற்குத் தமிழகத்தின் சமூகநீதி அடித்தளம் ஒரு காரணமாகும். நோய்ப் பரவலிலும் கூட பல்வேறு மாநிலங்களும் பல்வேறு தன்மையில் இருக்கின்றன. மகாராஷ்டிரா, குஜராத், மத்தியப் பிரதேசம் போன்றவை மிக மோசமான பாதிப்பை எட்டியுள்ளன. எனவே நோய் தீர்க்கும் தன்மை கூட இந்தியா முழுமையும் ஒரே முறையில் அமையப் போவதில்லை.

தமிழகப் பொதுச் சுகாதாரக் கட்டமைப்பு மூன்று படிநிலைகளை கொண்டது. பொது சுகாதாரத்துறையில் மருத்துவம், ஊரகப் பணிகள் நலத்துறை, மருத்துவக் கல்வித் துறை இவை

மூன்றும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றன கொரோனா தடுப்புப் பணியில் பொது சுகாதாரத் துறையின் பங்கு முதன்மை வாய்ந்தது. பொது சுகாதாரத் துறையில் உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதார பணியாளர்கள் இணைந்து இந்தப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழகப் பொது சுகாதாரத் துறை பலமாக இருப்பினும் அதை செயல்படுத்த வேண்டிய பொறுப்பில் அரசுதான் உள்ளது. ஆனால், நிர்வாகத் திறனற்ற, மக்கள்நலனில் கிஞ்சித்தும் அக்கறையற்ற அரசாக எடப்பாடி அரசு இருப்பதால் மக்களின் உயிர்காப்புப் போரில் சிக்கல் எழுந்துள்ளது.

போர்க் களத்தில் ஒரு வீரனுக்குப் படைக்கலன் எவ்வளவு அவசியமோ அதே அளவு மருத்துவருக்குப் பாதுகாப்பு உபகரணங்கள் அவசியம். கொரோனா தடுப்புப் பணியில் பணி புரியும் மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு (PPE KITS) பாதுகாப்பு உடைகள், N95 முககவசம், மூன்றடக்கு முகக்கவசம் சுகாதாரமான உணவு, தங்குவதற்கு இருப்பிடம் ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இது தவிர பணிநேரம் முடிந்த பின்பு அவர் தனித்திருக்கத் தேவையான பாதுகாப்பு வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தமிழக முதல்வர், சுகாதார அமைச்சர், சுகாதாரத்துறை செயலர் மூவரும் இந்தப் பணிகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு பதிலாக தொடர் பொய்யுரைப்பதிலேயே கவனம் செலுத்துகின்றனர். பாதுகாப்பு உபகரணங்கள் போதுமான அளவு கையிருப்பு வைத்துள்ளதாகவும் இவை தவிர புதிதாக வாங்க ஆணை பிறப்பித்துள்ளதாகவும் கூறி வருகின்றனர். பிபிஇ மட்டுமே 2 லட்சம் எண்ணிக்கையில் கையிருப்பு உள்ளதாக சுகாதாரத்துறை செயலர் கூறுகிறார். அவ்வாறாயின் தமிழகம் முழுவதும் தங்குதடையின்றி மருத்துவப் பணியாளர்களுக்கு அவை வழங்கப்பட்டிருக்க வேண்டும் அல்லவா?

ஆனால் ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையிலும் ஸ்டான்லி அரசு மருத்துவமனையிலும் போதிய உபகரணங்கள் வழங்கவில்லை என்று மருத்துவர்கள் குற்றஞ்சாட்டினர். எழும்பூர் மருத்துவமனையில் மருத்துவர்கள் தாமே முகக்கவசம் வாங்கிகொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதன் எதிரொலியாக ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனை மருத்துவர்கள் வேலைநிறுத்த அறிவிப்பை வெளியிடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

உலக நல்வாழ்வு அமைப்பு வகுத்துக் கொடுத்துள்ள நெறிமுறைகளுக்கு மாறாக ஆறு மணி நேரத்திற்கு பதில் 12 மணி நேரம் வரை மிகக் கடுமையாக வேலை செய்ய மருத்துவப் பணியாளர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இவ்வாறு பணி செய்யும் போது அவர்களுக்குத் தேவையான சுகாதாரமான உணவு, தங்குமிட வசதிகள் ஆகியவற்றை அரசு வழங்க மறுக்கிறது. இவற்றைக் கண்டித்து கோவை மருத்துவமனையிலும் சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையிலும் மருத்துவர்கள் போராட்டக் குரல் எழுப்பினர். இப்படி இவர்கள் குரலெழுப்பும் போதெல்லாம் தனது கையாலாகாத்தனத்தை மூடிமறைக்க பழனிச்சாமி அரசு பொய் சொல்வது, அதில் அம்பலப்படும் போது அம்பலப்படுத்துபவர்களை மிரட்டி அச்சுறுத்துவது, பழிவாங்குவது என்று கீழ்த்தரமான வழிமுறைகளைக் கையாள்கிறது. மருத்துவர்களும், சுகாதாரப் பணியாளர்களும் இவற்றுக்குப் பணிய மறுத்தால் சில சில்லறை அறிவிப்புகளை வெளியிடுவது என்ற அணுகுமுறைகளைக் கடைப்பிடித்து வருகிறது.

தமிழக அரசின் பொறுப்பற்ற அலட்சியத்தால் தமிழகத்தில் இதுவரை 21 சுகாதாரப் பணியாளர்கள் நோய்த்தொற்றுக்கு ஆளாகி உள்ளனர். இவர்களில் 19 பேர் மருத்துவர்கள். தடுப்புப் பணிகளில் ஈடுபடும் மருத்துவர்களிலேயே ஒரு பிரிவினருக்கு வேறு ஒரு சிக்கல் எழுந்துள்ளது. ஒரு வார்டில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு அரசு நேரடியாக பாதுகாப்பு உடை வழங்குவதை ஏற்றுக்கொள்கிறது அதேநேரம் வட்டார மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு பாதுகாப்பு உடைகள் எதுவும் வழங்கப்படவில்லை. இதில் சிக்கல் என்னவெனில் ஒரு நாட்டில் உள்ள மருத்துவர்களுக்கு இணையான பணி இவர்களுக்கும் உள்ளது. இன்னும் குறிப்பாகக் கூறுவதானால் நோயாளிகளை கண்டறிவதில் இவர்களுக்கு ஒரு முகாமையான பங்கு உள்ளது எனினும் கூட இவர்களின் பாதிப்புகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. இவ்வாறு தமிழக அரசின் பொறுப்பற்ற அலட்சியத்தால் தமிழகத்தில் 29 சுகாதாரப் பணியாளர்கள் நோய்த் தொற்றுக்கு ஆளாகி உள்ளனர் இவர்களில் 19 பேர் மருத்துவர்கள்.

இதுதவிர மருத்துவர்கள் சந்திக்கின்ற மிக முக்கியமான சிக்கல்களில் ஒன்று ஆள் பற்றாக்குறை. குறைந்த ஆட்களைக் கொண்டு அதிகப் பணிகள் செய்வதால் மிகையான பணிச்சுமை ஏற்படுகிறது. இது மருத்துவ, சுகாதாரப் பணியாளர்களுக்கு மன அழுத்தமும் உடல்நலக்

குறைவும் ஏற்படச் செய்கிறது. தற்போது கூடுதலாக மருத்துவர்களும் சுகாதாரப் பணியாளர்களும் பணியமர்த்துவதாகத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

இந்த கொரோனா நோய்த்தொற்றுக் காலத்தில் மருத்துவர்களுடன் ஓரளவு இணக்கமாக அரசு நடந்து கொண்டாலும் கூட இதற்கு முன்பு மருத்துவர்களும் செவிலியர்களும் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்ட போது, மிக மோசமான ஒரு கொடுங்கோலரசு போல் நடந்து கொண்டு போராட்டத்தை அடக்கியது. இதன் தொடர்ச்சியாகவே மருத்துவர் சங்கத் தலைவர் நரசிம்மன் இறந்து போனதாக மருத்துவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர், தொழிற்சாலைகளில் உற்பத்தி நடைபெற வேண்டுமானால் பணிச்சூழல் சுமுகமாக இருப்பது அவசியம். இதனால்தான் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக வேலைநிறுத்தம் செய்யும் போது அமைதியான பணிச் சூழலை ஏற்படுத்த தொழிற்சாலை நிர்வாகம் தொழிலாளர்களுடனும் மூன்றாம் தரப்பாக அரசுடனும் அமர்ந்து முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்துகிறது தொழிலாளர் நல வாரியம் மூலம் இதை மேற்கொள்கிறது.

ஆனால் மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் விஷயத்தில் அரசு தானே ஒரு முதலாளியாக மாறி பணிச் சூழலைக் கெடுத்து விடுகிறது மருத்துவப் பணியாளர்கள் இந்த நேரத்தில் தங்கள் பணியைச் செயலூக்கத்துடன் செய்ய வேண்டுமெனில அவர்கள் மீதுள்ள சுமைகள் அகற்றப்பட வேண்டும். குறிப்பாகக் கடந்த காலத்தில் அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பழிவாங்குதல் நடவடிக்கைகள் அனைத்தும் திரும்பப் பெறப்பட வேண்டும். அரசு மருத்துவர்கள் போராட்டத்தை ஒட்டிப் பழிவாங்கும் நடவடிக்கையாக 118 மருத்துவர்கள் இட மாறுதல் செய்யப்பட்டதைக் கைவிட வேண்டும்.

இதுவரை அரசு அப்படி ஒரு கண்ணியமான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றே காட்டி வருகிறது. பல்வேறு இன்னல்களுக்கு இடையிலும் மருத்துவர்கள், சுகாதாரப் பணியாளர்கள் கடமையாற்றி வருகின்றனர். இவர்களில் ஒருசிலர் இப்போது மரணமடைந்தும் விட்டனர். அவர்கள் இறுதி நிகழ்வு கண்ணியமான முறையில் நடைபெறவும் அரசு போதிய அக்கறை செலுத்தவில்லை இதன் விளைவாக மருத்துவர்களின் இறந்த உடல்களைப் பல மணி நேரம் நல்லடக்கம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. அது மட்டுமின்றி இந்த மருத்துவர்களின்

இறுதிச் சடங்கு நிகழ்ச்சியைத் தவறாகப் புரிந்து கொண்ட பொதுமக்கள் அதனைத் தடுத்து நிறுத்தியதுடன், மருத்துவர்களின் உறவினர்களும் தாக்கப்பட்டுள்ளனர். இதற்கு அரசே முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டும்.

உலகு தழுவிய அளவிலும் சரி, தமிழகத்திலும் சரி, கொரோனா எதிர்ப்புப் போரில் தளபதிகளாக, போர்வீரர்களாக மருத்துவர்கள், செவிலியர்கள் சுகாதாரப் பணியாளர்கள் உள்ளனர். எனவே அவர்களைப் பாதுகாப்பது இந்த போரைப் வெற்றிகரமாக நடத்த அவசியமானது. ஒருவேளை அவர்களில் ஒருவரை நாம் இழக்க நேரிட்டால் அந்த இடத்தில் வேறொருவரைப் பணியமர்த்த முடியாது இந்த அடிப்படை உண்மையை அரசும் மக்களும் புரிந்து கொள்ள வேண்டும். மக்களுக்குப் புரிந்து கொள்வதில் ஏற்படும் சிக்கல்களை அரசு களைய முன்வர வேண்டும். அவ்வாறு இல்லாமல் அலட்சியத்துடனும் பொறுப்பற்ற தன்மையுடனும் நடந்து கொண்டால் தமிழ்ச் சமூகமும், ஏன், மொத்த மனித குலமும் பேரழிவை சந்திக்கும்.

---

**சமந்தா**

## நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (6)

### ஆசிரியர்:பிரபாத் பட்நாயக்

ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பொருளியல் பேராசிரியரான பிரபாத் பட்நாயக் இந்தியாவின் தலைசிறந்த மார்க்சியப் பொருளியல் அறிஞர். கேரள மாநிலத் திட்டக் குழுவின் துணைத்தலைவராக 2006 ஜூன் முதல் 2011 மே வரை பணியாற்றியவர். உலக நிதி அமைப்புக்கான சீர்திருத்த நடவடிக்கைகளைப் பரிந்துரைத்த ஐக்கிய நாடுகள் சபையின் (யு.என்) உயர்-சக்தி பணிக் குழுவின் நான்கு உறுப்பினர்களில் ஒருவர். பொருளியல் அறிஞர் உத்சா பட்நாயக் அவர்களின் துணைவர்.

## தலைப்பு: தீவிரவாதத் தேசியத்தின் அடிப்படை:

மேற்கத்திய உலகின் கலந்துரையாடல்களில் “தேசியவாதம்” என்ற சொல் பெரும்பாலும் ஒரேதன்மை கொண்ட ஓர் ஒற்றைமயக் கருத்தாக்கமாகப் பயன்படுத்தப்படுகிறது. தேசியவாதம் என்றாலே ஒரு குறுகிய மனப்பான்மையாக, சர்வதேசியத்திலிருந்து தவறாகப் பின்னோக்கிச் செல்வதாகக் கருதும் போக்கும் காணப்படுகிறது. ஐரோப்பாவின் தேசியவாதம், காலனி எதிர்ப்பு

தேசியத்திற்கு மாறானது. காலனியாதிக்கத்தால் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களுக்கு அடிப்படையான ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியவாதம் என்பது அவர்களை ஒடுக்கிய ஐரோப்பியர்களின் தேசியவாதத்திலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டும்: காந்தியின் தேசியவாதம் அல்லது ஹோ-சி-மினின் தேசியவாதம் சர்ச்சிலின் தேசியவாதத்திலிருந்து வேறுபட்டது.





பதினேழாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் வெஸ்ட்பாலியாவில் முன்ஸ்டர், ஓஸ்னெபெர்க் நகரங்களில் கையெழுத்திடப்பட்ட வெஸ்ட்ஃபாலியன் அமைதி ஒப்பந்தத்தின் அடிப்படையில் தேசியம் என்ற கருத்தாக்கம் உருவானது. இந்த அமைதி ஒப்பந்தத்தின் மூலம் இரண்டு நீண்ட போர்கள் (ஐரோப்பாவின் மத அடிப்படையிலான 30 ஆண்டுப் போரும், ஸ்பெயினுக்கும் டச்சுக்கும் இடையேயான 80 ஆண்டுப் போரும்) 1648இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன. வெஸ்ட்பாலிய அமைதி உடன்படிக்கையின் அடிப்படையில் ஐரோப்பாவில் வளர்ந்த “தேசியவாதம்” என்ற கருத்தாக்கம், நாடுபிடிக்கும் தன்மை கொண்ட அகண்ட தேசியவாதமாகும். இந்த அகண்ட தேசியம் அனைத்து மக்களையும் உள்ளிணைத்ததாக இல்லை, தேசம் தனக்குள் ஒரு எதிரியைக் கொண்டிருந்தது. தேசத்தின் பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை எதிரியாகக் கருதும் நிலை இருந்தது. வட ஐரோப்பாவில் கத்தோலிக்க மதத்தினரும், தென் ஐரோப்பாவில் புரட்டஸ்டண்ட் மதத்தவரும் எதிரியாகக் கருதப்பட்டனர். ஒவ்வொரு ஐரோப்பிய "தேசமும்" வெளிநாட்டு பிராந்தியங்களுக்காக மற்ற ஐரோப்பிய "நாடுகளுடன்" போட்டியிடும் ஏகாதிபத்திய தேசியமாக இருந்தது. இவ்வகையில் ”தேசத்தின்" நலன்கள் மக்களின்

வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுடன் இனங்காணப்படவில்லை. தேசத்தை மக்களுக்கு மேலே உயர்த்தி வைப்பதன் மூலம் தேசத்திற்காக மக்கள் தியாகங்கள் செய்ய வேண்டும் என்று கோரப்பட்டது. வெஸ்ட்பாலியன் ஒப்பந்தத்தின் பின் முதல் காலனியாக அயர்லாந்து உருவானது. ஒவ்வொரு ஐரோப்பிய நாட்டிலும் வளர்ந்து வரும் முதலாளித்துவமும் மார்க்ஸ் குறிப்பிடும் "மூலதனத்தின் ஆதித் திரட்டலில்" மும்முரமாக ஈடுபட்ட சகாப்தத்தில் இந்த தேசியவாதம் உருவானது. இவ்வாறு ஏகாதிபத்திய அடிப்படையில் வணிக முதலாளித்துவத்தின் வளர்ச்சிநிலையிலே தேசியவாதம் என்ற கருத்தாக்கம் உருவானது.

இந்த முதலாளித்துவத் தேசியவாதத்தின் பண்புகள் காலப்போக்கில் மாறாமல் இருந்தாலும் கூட அதை நீடிக்க வைத்த வர்க்கங்களின் உள்ளடக்கம் தொடர்ந்து மாறிக்கொண்டே இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவில் வளர்ந்த ஐரோப்பிய சக்திகளிடையே ஏகாதிபத்திய உடைமைகளுக்கான (அல்லது லெனின் குறிப்பிடுவது போல் “உலகை மறுபங்கீடு செய்வதற்கான”) கடும் போட்டியை ஏற்படுத்திய நிதி மூலதனங்கள் இத்தகைய அகண்ட தேசியவாதத்தையே ஊக்குவித்தன”. ருடால்ப் ஹில்ஃபெர்டிங் "தேசியவாதக் கருத்தை போற்றுவதை" நிதி மூலதனத்தின் சித்தாந்தமாக அடையாளம் காண்கிறார்.

பதினேழாம் நூற்றாண்டில் ஸ்பானிய தங்கம் ஐரோப்பாவிற்குள் நுழைந்த காலகட்டத்தில் முதலாளித்துவம் தொடங்கியதாக மார்க்சிய எதிர்ப்பாளராகிய கீனஸ் குறிப்பிடுகிறார். இது இலத்தீன் அமெரிக்காவில் ஸ்பானியர்களால் கொள்ளையடிக்கப்பட்ட தங்கம். இதை மூலதனத்தின் ஆதித் திரட்டலுக்கு எடுத்துக்காட்டாக மார்க்ஸ் குறிப்பிட்டுள்ளார். வணிகமுதலாளித்துவம் கொள்ளையை நியாயப்படுத்தியது. உலகெங்கிலும் காலனிகளைப் பிடிக்கப் போட்டி ஏற்பட்டது. இந்த தீவிரமான ஏகாதிபத்தியப் போட்டி இறுதியில் முதல் உலகப் போரில் உச்சக்கட்டத்தை அடைந்தது. யுத்தத்திற்கு ஆதரவு திரட்ட தேசத்தைக் காப்பதற்கான போர்க் குரல் எழுப்பப்பட்டது. "தேசியவாதம்" யுத்த முயற்சிகளுக்கான கூக்குரலாக பயன்படுத்தப்பட்டது.

அப்பொழுது இடதுசாரிகள் முன்வைத்த கருத்து உங்கள் தோட்டாக்களை உங்கள் உள்நாட்டு அமைப்பிற்கு எதிராகத் திருப்புங்கள் என்பதே. அகண்ட "தேசியவாதம்" என்ற கருத்தாக்கத்திற்கு

எதிரான பெருத்த முதல் அடியாக போல்சுவிக் புரட்சி அமைந்தது; போல்சுவிக் புரட்சிக்குப் பின் ஒரு புதிய தேசியவாதம் தோன்றியது. ஆனால் ஐரோப்பாவின் பிற இடங்களில் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் தோல்வி, அதற்குப் பின்னர் ஏற்பட்ட பெரும் மந்தநிலை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவை இந்த அகண்ட "தேசியவாதத்தை" வலுப்படுத்தவும் பல நேரங்களில் பாசிசம் பயங்கர வடிவெடுக்கவும் காரணமாக அமைந்தன. பாசிசத்தின் தோல்வியால், ஐரோப்பாவில் அத்தகைய "தேசியவாதத்திலிருந்து" ஒரு பொதுவான பின்வாங்கல் ஏற்பட்டது (ஐரோப்பிய ஒன்றியத்தின் தோற்றம் அதன் ஒரு அறிகுறியாக இருந்தது), சமீபத்தில் ஐரோப்பிய இடதுசாரிகளுக்குள் மிகுந்த கவலையை ஏற்படுத்தும் வகையில் அகண்ட தேசியவாதம் மீண்டும் வருவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

இருபதாம் நூற்றாண்டில் மூன்றாம் உலகின் பெரும்பகுதியில் உருவாகிய தேசியவாதமும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களும் இத்தகைய அகண்ட தேசியவாதத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. ஒவ்வொரு நாட்டிலும் ஒரு வலிமையான ஏகாதிபத்திய சக்தியை எதிர்கொண்டதால் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியவாதம் அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளிணைத்தது. ஆகவே, எந்தவொரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவரோ அல்லது இனக்குழுவினரோ தேசத்திற்குள் "உள் எதிரி" என்று கருதப்படவில்லை, இருப்பினும் ஏகாதிபத்திய சக்திகள் தங்களுக்கு எதிரான போராட்டத்தை பலவீனப்படுத்த மக்களிடையே இன மற்றும் வகுப்புவாத பிரிவினைகளை ஊக்குவிக்க தங்களால் முடிந்த அனைத்தையும் செய்தன. இரண்டாவதாக, இந்தத் தேசியவாதம் அதன் பெரும் சக்திவாய்ந்த எதிரிக்கு எதிரான போராட்டத்தை வலுப்படுத்த மற்ற ஒடுக்கப்பட்ட மக்களுடன் இணைப்புகளை ஏற்படுத்தியது. இறுதியாக, அது "தேசிய நலனை" மக்களின் நலன்களுடன், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன் இனங்கண்டது.

இப்பொழுது ஒரு கேள்வி எழுப்பப்படலாம்:, ஏன் இந்தியா போன்ற நாடுகளில், சுதந்திரத்திற்கு முன்பே கணிசமாக வளர்ந்திருந்த ஏகபோக மூலதனம், ஐரோப்பாவில் உருவாக்கப்பட்டதைப் போல ஒரு அகண்ட தேசியவாதத்தை ஊக்குவிக்கவில்லை? ஏன் அது வேறுபட்ட தேசியவாதத்தின் கருத்தோடு சென்றது?

இதன் பதில் இரு கூறுகளைக் கொண்டுள்ளது: முதலாவதாக, சுதந்திரத்திற்கு முந்தைய இந்தியாவில் ஏகபோக மூலதனம் கூட காலனியாதிக்க ஆட்சியால் கட்டுப்படுத்தப்பட்டது. ஐரோப்பாவில் போல இங்கு தேசிய முதலாளி வர்க்கம் நேரடியாக ஆட்சி செய்யும் அதிகாரத்தைப் பெற முடியாமல் தவித்தது; அதனால்தான் இங்குள்ள தேசிய முதலாளிகள் காலனியாதிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் சேர வேண்டியிருந்தது. இரண்டாவதாக, காலனியாதிக்க எதிர்ப்புப் போராட்டம் பல வர்க்கப் போராட்டமாக இருந்தது, அதன் மீது ஏகபோக முதலாளித்துவம் ஒரு முன்னணி நிலையில் இருந்தபோதும், பிரத்தியேக கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை.

ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தின் போது திட்டமிடப்பட்ட பார்வைக்கு ஏற்ப ஒரு "தேசத்தை" உருவாக்குவது என்பது புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளுக்கு ஒரு புதுமையான மற்றும் கடினமான பணியாகும். இந்தியாவில் இந்தப் பார்வை 1931 இல் கராச்சி காங்கிரஸ் தீர்மானத்தில் வெளிப்படுத்தப்பட்டது, அதில் சுதந்திர இந்தியா எப்படி இருக்கும் என்பதற்கான கருத்துச் சித்திரம் முதல் முறையாக பெறப்பட்டது.அனைவருக்கும் வாக்குரிமை, சட்டத்தின் முன் அனைவரும் சமம், இலவச அடிப்படை கட்டாயக் கல்வி, மரண தண்டனை நீக்கம் (இதற்கு முன்னரே பகத்சிங் தூக்கிலிடப்பட்டார்). ஆனைத்து மதங்களையும் ஒரே மாதிரி கருதும் மதச்சார்பற்ற அரசு ஆகிய அடிப்படை ஜனநாயகக் கூறுகளை அது கொண்டிருந்தது.

ஒரு துருவத்தில் செல்வத்தையும் மறு துருவத்தில் வறுமையையும் உருவாக்கும் முதலாளித்துவத்தின் போக்கினால், இவற்றை முழுமையாக செயல்படுத்தமுடியாது எனக் கருதப்பட்டாலும் முதலாளித்துவத்தை அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தால், ஒரு கலப்பு பொருளியலின் பரந்த கட்டமைப்பிற்குள், பொதுத்துறைகளுக்கு " முன்னுரிமை அளிக்கும் போது அது பயனுள்ளதாகவே இருக்கும் என சுதந்திரத்தின் போது நாட்டின் தலைமையால் உணரப்பட்டது. அதன்படி, சுதந்திரத்திற்குப் பிறகு பொது மற்றும் தனியார் துறைகளை ஒன்றிணைக்கும் ஒரு தனித்துவமான ஆட்சிமுறை பொருளியலில் உருவாக்கப்பட்டது, அதே சமயம், அரசியலமைப்புச் சட்டத்தின் படி, வாக்குரிமையின் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, நிர்வாக அதிகாரங்களைப் பெற்று அனைவருக்கும் அடிப்படை உரிமைகளை உறுதிபடுத்தும் விதத்தில் அமைக்கப்பட்டது. பொருளியலில் வெளிப்படையான

தோல்விகள் இருந்தபோதிலும், ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியவாதத்தை அடிக்கடி மீறும் வகையில் அரசின் பல நடவடிக்கைகள் கேள்விக்குரியதாக இருந்தபோதிலும், இந்த நாட்டின் அடிப்படைக் கருத்தியல் கட்டமைப்பான மதச்சார்பின்மை, ஜனநாயகம் மற்றும் சமூகநீதி மிக நீண்ட காலமாக நிராகரிக்கப்படாமல் நீடித்து வந்தது.

இவை அனைத்தும் இப்போது மாறி விட்டன. இப்போது ஊக்குவிக்கப்படும்"தேசியவாதம்" என்பது அகண்ட ஐரோப்பிய வகை தேசியவாதத்தைப் போன்றது. இது முஸ்லிம்களையும், ஜனநாயகத்தில் நம்பிக்கைக் கொண்ட அறிவுஜீவிகளையும் "எதிரிகளாய்" அடையாளப்படுத்துகிறது. இது "மக்களுக்கு மேலான ஒரு தேசம்" என்ற கற்பனாவாதத்தை முன்வைக்கிறது. "தேசிய நலன்" மக்களின் வாழ்க்கைத்தரம், பொருளியல் முன்னேற்றம் சார்ந்ததாகக் கருதப்படவில்லை. இது மேலாதிக்கத்தினால் நாட்டின் பிராந்தியங்களில் உள்-காலனியாதிக்கத்தை ஏற்படுத்தி அவற்றை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. நமது கூட்டாட்சிக் கட்டமைப்பிற்கு ஒரு குறிப்பிட்ட நெகிழ்வுத்தன்மையை வழங்குவதன் மூலம் இந்திய ஒன்றியத்திற்குள் பல்வேறு பகுதிகள் அவற்றின் தனித்தன்மையுடன் நீடிக்க இணைக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தின் 370 மற்றும் 371ஆம் பிரிவுகள் வெறும் நாடாளுமன்றத் தீர்மானத்தின் மூலம் ஒருதலைப்பட்சமாக நிராகரிக்கப்பட்டன.

இப்போழுது ஒரு கேள்வி எழுகிறது: "தேசியவாதம்" என்ற ஒரு கருத்தாக்கத்திலிருந்து அதற்கு முற்றிலும் எதிரான இன்னொரு கருத்தாக்கத்திற்கு இந்தியா எவ்வாறு நகர்ந்தது, இந்த இயக்கத்தின் செயல்முறை மற்றும் அதன் வர்க்க அடிப்படை என்ன?

இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட, குறிப்பாக 1991 க்குப் பிறகு நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளியல் "தாராளமயம்" இந்த மாற்றத்தின் முதல் படியாக அமைந்தது. ஒரு புதிய தாராளமய ஆட்சிக்கு மாறுவது என்பது பொருளியல் கொள்கைகளில் மட்டும் மாற்றத்தைக் குறிக்கவில்லை. இது நாட்டில் வர்க்க உள்ளமைவில் மாற்றத்தைக் கொண்டுவந்தது. இது இந்தியாவை சர்வதேச நிதி மூலதனத்தின் மேலாதிக்கத்திற்குட்படுத்தியது.

1970 களில் இருந்து, மூலதனப் பாய்வுகளின் உலகமயமாக்கத்தால், உலகம் தனித்தனிக் கோளங்களாக ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட நாட்டின் நிதி மூலதனத்தால் ஆதிக்கம்

செலுத்தும் வகையில் பிரிக்கப்படுவதற்குப் பதிலாக, சர்வதேச நிதி மூலதனம் என்ற ஒரு புதிய நிறுவனத்தின் கட்டுப்பாடற்ற இயக்கத்திற்கு வழிவகுத்தது.அரசு ஒரு தேசிய அரசாக இருந்ததால், எந்தவொரு நாடும் நாடு கடந்த மூலதன பாய்ச்சல்கலுக்கு திறந்திருப்பதால் , இந்த சர்வதேச நிதி மூலதனத்தின் கோரிக்கைகளுக்கு ஏற்ப அரசு செயல்பட வேண்டும் என்ற கட்டுப்படுத்தப்படுகிறது அவ்வாறு செயல்படாவிட்டால் நிதி மூலதனம் நாட்டை விட்டு வெளியேறி நிதி நெருக்கடியை உருவாக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. சர்வதேச நிதி மூலதனத்தின் நம்பிக்கையைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்பதே தேசிய அரசுகளின் பிரதான கவலையாக மாறியுள்ளது. இதன் பொருள் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்துடன் தொடர்புடைய அனைத்து வர்க்கங்களின் நலன்களையும் பாதுகாப்பதாக முன்னர் கூறிய அரசு, முதலாளித்துவம் வளர்ந்தபோதும் இந்தக்கூற்று ஒட்டுமொத்தமாக நியாயப்படுத்தப்படாமல் இல்லை, இப்போது முழுக்க முழுக்க சர்வதேச நிதி மூலதனம் மற்றும் அதனுடன் ஒருங்கிணைந்த உள்நாட்டு முதலாளித்துவத்தின் (விவசாயத்திலிருந்து பன்முகப்படுத்தப்படுவதன் மூலம் கிராமப்புறத்தில் தங்கள் நிலையைத் தக்க வைத்துக் கொள்ள முடிந்த பணக்கார நிலவுடைமையாளர்களையும் சேர்த்து) நலன்களுக்காகவே செயல்படுகிறது.

அதனால் இப்போது முதலாளித்துவத்தின் பிரிவினை தீவிரமாகியுள்ளது. சர்வதேச நிதி மூலதனத்துடன் ஒருங்கிணைந்த முதலாளிகள் மற்றும் நிலவுடைமையாளர்கள் ஒரு பக்கத்தில் உள்ளனர்: கோடிக்கணக்கான விவசாயிகள், சிறுஉற்பத்தியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மறுபக்கத்தில் உள்ளனர். இப்போது அனைத்து வர்க்கங்களின் நலன்களையும் பாதுகாப்பதாக அரசின் கொள்கையை வகுக்கிறோம் என்ற பாசாங்கு இல்லை. (நாட்டின் வள ஆக்கத்தில் பல்வேறு காரணிகள் பங்கேற்பதாகக் கூறும் நிலையில், முதலாளிகளை மட்டும் வளம் ஆக்குபவர்களாகப் பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடியின் இந்தக் கருத்தை இந்தியாவின் முந்தைய பிரதமர்கள் யாரும் கனவில் கூட கண்டிருக்க மாட்டார்கள் என்பது இந்த மாற்றத்தின் அறிகுறியாகும்). 1930களில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் காலனியெதிர்ப்பு போராட்டத்தில் இணைந்தனர், சுதந்திரத்திற்குப் பின் விவசாயிகள் ஓரளவிற்குப் பாதுகாக்கப்பட்டனர். ஆனால் தற்போது அரசு சிறு உற்பத்தித் துறைக்குத் தந்த ஆதரவையும், பாதுகாப்பையும் திரும்பப் பெற்றதால், பெருநிறுவனங்களால் அவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் பழைய "தேசத்தில்" முறிவு ஏற்பட்டது.

இந்த "முறிவின்" பொருளியல் விளைவுகள் வெளிப்படையானவை. விவசாயிகளின் தற்கொலைகள் (இருபத்தைந்து ஆண்டுகளில் மூன்று இலட்சத்திற்கும் அதிகமானவை); கிராமப்புறங்கள் பெருந்துன்பத்திற்குள்ளாகியுள்ளன; கைவினைஞர்கள், மீனவர்கள், பாரம்பரியத் தொழில் முனைவோர் மற்றும் சிறு முதலாளிகளைக் கூட பாதிக்கும் சிறு உற்பத்தித் துறையின் நெருக்கடி; புதிய தாராளமய ஆட்சியின் கீழ் 'ஜிடிபி'மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பு அதிகரித்த போதும் வேலைவாய்ப்பு உருவாக்கும் விகிதம் முந்தைய காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது வெகுவாகக் குறைந்ததால் கிராமப்புறங்களிலிருந்து வேலை தேடி நகரங்களுக்கு செல்லும் உழைக்கும் மக்களின் இடப்பெயர்வு, அதே நேரத்தில் மேம்பட்ட முதலாளித்துவ நாடுகள் சேவைத் துறை வேலைகளை இங்கே ஏற்றுமதி செய்வதால் நடுத்தர வர்க்கத்தில் ஒரு பிரிவினர் பலனடைந்துள்ளனர்.

புதிய தாராளமயம் பெருமளவிலான மக்களை வறுமைக்குத் தள்ளியுள்ளது: கிராமப்புறங்களில் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 2,200 கலோரிகளைப் பெற முடியாத வறுமைக் கோட்டில் உள்ள மக்களின் சதவீதம் 1993-4 மற்றும் 2011-2 க்கு இடையில் 58%இலிருந்து 68% ஆக உயர்ந்துள்ளது ; நகர்ப்புறத்தில் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 2,100 கலோரிகளைப் பெறமுடியாத வறுமைக்கோட்டில் உள்ள நகர்ப்புற மக்களின் சதவீதம் இதே காலகட்டத்தில் 57%ளிருந்து 65% ஆக உயர்ந்துள்ளது. அதேசமயம், முதல் 1 சதவீதத்தினரின் மொத்த வருமானம் 2013-14 ஆம் ஆண்டில் 22 சதவீதம் உயர்ந்துள்ளது, 1922 ஆம் ஆண்டிலிருந்து வருமான வரித் தரவுகளின் மூலம் செய்யப்பட்ட இந்தக் கணக்கீடுகளின் படி; மொத்த செல்வத்தில் அவர்களின் பங்கு, 2016 ஆம் ஆண்டின் இறுதியில் 58 சதவீதமாகியது. செல்வத்தையும், வருமானத்தையும் முதல் 1 சதவீதத்தினரின் கைகளில் குவிக்கும் அதே வேளையில், புதிய தாராளமய ஆட்சி நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தின் ஒரு பிரிவின் நிலைமைகளை மேம்படுத்தியுள்ளது.

புதிய தாராளமயம் ஆட்சியில் தன்னைத் தக்க வைத்துக் கொள்ள ஒரு கருத்தியல் முட்டுக்கொடுப்பு தேவைப்படுகிறது. இது பழைய உள்ளிணைக்கும் "தேசியவாதத்தின்" அடிப்படையில் தொடர்ந்து இயங்க முடியாது. முன்னர் வளர்ச்சியும், வளமும்,மேலிருந்து கீழாக அனைத்து வகுப்புகளுக்கும் பரவுவதாக நம்பவைக்கப்பட்டது. இதுவும் நம்பகத்தன்மையை இழந்தபோது, ஜிடிபி'யை-மொத்த உள்நாட்டு உற்பத்தியை உயர்த்துவதற்கு எந்தவொரு தடையும்

வரக்கூடாது என்பதற்காக ‘ஜிடிபி’ மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உயர்வால் மட்டுமே பின்தங்கிய பிரிவினருக்கு ஆதரவாக வளங்களை மறுபங்கீடு செய்யும் சாத்தியப்பாட்டைப் பிற்காலத்தில் உருவாக்க முடியும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. புதிய-தாராளமயப் பொருளியலில், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியில் முதலாளிகளின் முதலீடு முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதால், தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் போன்ற பெரும்பான்மையினரின் நலனை காவுகொடுத்து, முதலாளிகளின் நலன்களை மட்டுமே அரசு ஊக்குவித்தது. இந்த ஆட்சியின் கீழ் "தேசம்" என்ற பழைய கருத்து முறிந்துவிட்டதால், புதிய தாராளமய ஆட்சிக்கான ஒரு கருத்தியல் முட்டுக்கொடுப்பாக இந்த ‘ஜிடிபி’ மாய்மாலம் இடைக்காலப் பங்கு வகித்தது.

ஆனால் இது நீண்ட காலம் நீடிக்க முடியாது. எவ்வாறாயினும், உழைக்கும் மக்களுக்கு வளர்ச்சியை மறுபங்கீடு செய்யாமலே ஜிடிபி-மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி தொடர்ந்தால், அனைவருக்கும் அது நன்மையையே விளைவிக்கும் என்ற கட்டுக்கதை அம்பலமாகி விடும். மேலும் புதிய-தாராளமய முதலாளித்துவத்தின் கீழ் உலகப் பொருளியல் பெரும் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தியா போன்ற நாடுகளுக்கும் இது பரவியதால், உழைக்கும் மக்கள் மீது இன்னும் பெரிய சுமைகளைச் சுமத்துகிறது. புதிய தாராளமய முதலாளித்துவத்தின் ஆட்சியில் இருந்து வெளியேறுமாறு உழைக்கும் மக்கள் கோருவதைத் தடுக்க இந்தப் புதிய சூழ்நிலையில் ஒரு வலுவான கருத்தியல் முட்டுக் கொடுப்பு தேவைப்படுகிறது. இங்குதான் அகண்ட தேசியவாதத்தை ஏற்றுக்கொள்வது பயனுடையதாக உள்ளது.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்காத இந்துத்துவப் படைகள் நீண்ட காலமாக அகண்ட "இந்து தேசியவாதத்தின்" ஆதரவாளர்களாக இருந்துவருகிறார்கள். அவர்களது உறுப்பினர்கள் சிலர் மகாத்மா காந்தியைப் படுகொலை செய்ய சதித்திட்டம் போட்டவர்கள் (இதை ஒரு சாதனையாக அவர்களின் தற்போதைய ஆதரவாளர்கள் வெட்கமின்றிக் கொண்டாடுகிறார்கள்). ஆளும்-கார்ப்பரேட் வர்க்கம் இப்போது இந்துத்துவ சக்திகளுடன் ஒரு கூட்டணியில் இணைந்து இந்த அகண்ட"தேசியவாதத்தை"ப் பரப்புகிறது. இன்றைய "தீவிர-தேசியவாதத்திற்கான" ஆதரவு ஆளும்-கார்ப்பரேட் வர்க்கத்திடமிருந்தே

வருகிறது. சுதந்திரத்திற்குப் பிறகு தலித்துகள் மற்றும் "பிற பின்தங்கிய வர்க்கங்கள்" சமூக மற்றும் பொருளியல் ரீதியாக சமத்துவம் பெறும் கருத்தை எப்போதுமே பணக்கார நிலவுடைமையாளர்கள் எதிர்த்து வருகிறார்கள். புதிய தாராளமய ஆட்சியால் பலனடைந்த நடுத்தர வர்க்கங்களின் மேல் பிரிவு அதிலிருந்து வெளியேறுவதற்கான எந்தவொரு நகர்வையும் கண்டு அஞ்சுகிறது.

இந்த "தீவிர-தேசியவாதம்" என்பது என்னவென்றால், நாட்டின் தகுநிலையை ஒரு வல்லரசாக்குவதற்கு அதிக முன்னுரிமை அளிப்பதும், 'ஜிடிபி'-மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியை அதனுடன் இணைப்பதும் ஆகும். வேறுவிதமாகக் கூறினால் 'ஜிடிபி'-மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி இப்போது அனைவருக்கும் நலன் பயக்கும் என்ற அடிப்படையில் வாதிடப்படவில்லை; இது இந்தியாவை வல்லரசாக்கும் என்ற அடிப்படையில் வாதிடப்படுகிறது. 'ஜிடிபி'மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி குறைந்து போனால், இது மக்களின் தியாகங்களைக் கோருவதற்கும் முக்கியக் காரணியாகிறது: இதற்கு உதாரணங்களாக "தொழிலாளர் சட்டச் சீர்திருத்தம்" (முதலாளிகளின் கட்டுப்பாடற்ற சுதந்திரத்திற்கானது), மற்றும் பல்வேறு திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்துவதை எளிதாக்கக் கோருதல் (நிலத்தரகின் கூறுகளைக் கொண்டுள்ளது).மாநிலங்களுக்குப் பாதுகாப்பு குறித்து முடிவெடுக்கும் உரிமை தராத போதும் மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகையிலிருந்து பாதுகாப்புத் துறைக்கு நிதி ஒதுக்கத் திட்டம். (தற்போதைய 15ஆவது நிதி ஆணையத்தின் ஒரு திட்டம்).

அடிப்படை மனித உரிமைகளைக் கட்டுப்படுத்துவதும் இந்தத் "தீவிர தேசியவாதத்தை"த் தூண்டுவதன் மூலம் நியாயப்படுத்தப்படுகிறது. மனித உரிமை மீறல் குறித்த எந்தவொரு விமர்சனத்தையும் நாட்டின் "எதிரிகளால்" முன்வைக்கப்படலாம் என்பதால், இதுபோன்ற விமர்சனங்களையே அடக்க வேண்டும். திறந்த விவாதம் இருந்தால் ஐக்கிய நாடுகள் சபை "தலையிட" முடியும் என்பதால் ஜம்மு-காஷ்மீரில் அடக்குமுறை செய்யும் போது, அத்தகைய விவாதம் அனுமதிக்கப்படக் கூடாது.வேறு வார்த்தைகளில் கூறுவதானால், எந்தவொரு சர்வாதிகார நடவடிக்கையையும் அது எவ்வளவு கொடூரமாக இருந்தாலும், விமர்சிப்பது, என்பது ஒரு தேசிய விரோதச் செயலாகக் கருதப்படும்; அதேபோல், "செல்வத்தை உருவாக்குபவர்கள்" (முதலாளிகள்) என்று அழைக்கப்படுபவர்களுக்கு எந்தவொரு எதிர்ப்பும்,

வளர்ச்சியின் செயல்பாட்டில் ஒரு தடையாக மாறும், அதனால் "தேசிய நலனின்" அடிப்படையில் நாடு ஒரு வல்லரசாக உருவாக இவை கட்டுப்படுத்தப்பட வேண்டும்,

இந்து ராஷ்டிராவை நிறுவ ஆர்வமாக உள்ள இந்துத்துவ சக்திகளின் நலன்கள்; நவீனத்துவம், ஜனநாயகம், சமத்துவம் நோக்கிய இந்தியாவின் நெடும்பயணத்திற்கு எதிரான எதிர்ப் புரட்சியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

உழைக்கும் மக்களை ஒடுக்க விரும்பும் கார்ப்பரேட்-ஆளும் வர்க்கமும், இந்துத்துவ சக்திகளும் ஒன்று சேர்ந்துள்ளன. கார்ப்பரேட்-இந்துத்துவக் கூட்டணியை வலுப்படுத்துவதற்கும், ஒரு சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதற்கான கருத்தியல் வெடிபொருட்களை வழங்குவதற்கும் "தீவிர-தேசியவாதம்" வழிவகை செய்கிறது. இந்த இந்துத்துவ-கார்ப்பரேட் கூட்டணியின் காரணமாகவே, தேர்தல் பத்திரத் திட்டத்தின் மிகப்பெரிய பயனாளியாக பாஜக இருந்து வருகிறது. ஊடக ஆய்வுகள் மையத்தின் கருத்துப்படி, 2019 தேர்தல்களில் ரூ .27,000 கோடியை அது செலவழிக்க முடிந்தது என்ற உண்மையை, அத்தகைய கூட்டணியின் அடிப்படையில் மட்டுமே விளக்க முடியும், இது ஏராளமான கார்ப்பரேட் பணத்தை பாஜகவின் கருவூலத்திற்கு வழங்கியது. அப்போது பாஜக அரசாங்கம் இரண்டாவது முறையாக மீண்டும் பதவிக்கு வரும் என்பது தெளிவாகத் தெரிந்த போது பங்குச் சந்தை ஒரு பெரிய எழுச்சியைக் கண்டதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இன்றைய “தீவிர தேசியவாதம்” இந்தியத் தேசியத்தின் தோற்றத்தை அடிக்கோடிட்டுக் காட்டும் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியவாதம் என்பதற்கு வேறுபட்டு; அதற்கு நேர்மாறாக இருந்த போதும் அதன் பிரபலத்தைப் பயன்படுத்த முற்படுகிறது. சர்வாதிகாரப் போக்குடைய ”தீவிரதேசியவாதமானது” ஜனநாயகம், மதச்சார்பின்மை, சோசலிசம் மற்றும் கூட்டாட்சி ஆகியவற்றை ஆதரிக்கும் அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பிற்கு எதிரானது.

மத்திய அரசின் மையத்துவப் போக்கு 1991க்குப் பிறகு நவீன தாராளமயம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு அதிகரித்தது. வளங்கள் மட்டும் மையப்படுத்தப்படவில்லை, முடிவெடுக்கும் அதிகாரமும் மையப்படுத்தப்பட்டது. நடுவண் அரசு மாநிலங்களுக்குத் தரும் உதவித்தொகைகளுக்கான வட்டியை அதிகப்படுத்தியது. 1991இலிருந்து மாநிலங்களிடமிருந்து அதிக வருவாய்

பெறப்பட்டது.அதன் வளர்ச்சி விகிதத்தை விட வட்டி விகிதத்தை அதிகரித்து கடன் வலையில் மாநிலங்களைச் சிக்க வைத்தது. கடன் நிவாரணம் வேண்டுமென்றால் புதிய தாராளமயக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் என மாநிலங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டன. நிதிப் பற்றாக்குறையை நிதிமூலதனம் வெறுத்ததால் ஒவ்வொரு மாநிலமும் நிதிப் பொறுப்பு மற்றும் நிதிநிலை மேலாண்மைச் சட்டத்தை நடைமுறைப்படுத்த நிர்பந்திக்கப்பட்டது. சமூக நலத்திட்டங்களுக்காக எந்தச் சட்டமும் உருவாக்கப்படவில்லை. ஆனால் நிதிப்பற்றாக்குறைக்கு மட்டும் சட்டம் உருவாக்க வலியுறுத்தப்பட்டது. மக்களை மையப்படுத்தும் திட்டங்களுக்கு மாநிலங்களே நிதி ஒதுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டன. மத்திய அரசு மாநில அரசுகளின் ஊதியத் தொகையை நிர்ணயித்தது. "தீவிர தேசியவாதம்" என்பது மாநிலங்களின் உரிமைகளைத் துடைப்பதற்கான, அதிகாரத்தை மையப்படுத்துவதற்கான ஒரு கருவியாகும். மாநில மக்களுடன் எந்த ஆலோசனையும் இல்லாமல் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தைப் பிளவுபடுத்தி ஒவ்வொரு பகுதியையும் யூனியன் பிரதேசமாக மாற்றியது இதற்கு ஒரு சிறந்தஎடுத்துக்காட்டு. இது நம் அரசியலமைப்புக் கொள்கையின் மதச்சார்பற்ற தன்மையைத் தகர்த்தெறிவதற்கான ஒரு வழிமுறையாகும் (இதற்கு ஒரு தெளிவான எடுத்துக்காட்டு முஸ்லிம்களுக்கு எதிராக வெளிப்படையாகப் பாகுபாடு காட்டும் குடியுரிமை திருத்த மசோதா).

இந்தத் தீவிர தேசியவாதத்தை வெல்வதற்கு நாம் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியவாதத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்குத் திரும்ப வேண்டும்; ஆனால் வெறுமனே திரும்பிச் செல்ல முடியாது, கராச்சி காங்கிரஸ் தீர்மானத்தின் நிகழ்ச்சிநிரலை முன்னெடுத்துச் செல்ல வேண்டும், அதில் புதிய அம்சங்களாக அடிப்படை அரசியல் உரிமைகளையும், பொருளியல் உரிமைகளையும் இணைக்க வேண்டும். எல்லாப் பொருளியல் உரிமைகளும், அரசுக் கொள்கையை வழிநடத்தும் கோட்பாடுகளில் (DPSP = Directive Principles of State Policy) வருவதால் அவற்றை அரசு நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயமில்லை என்ற நிலை உள்ளது. தற்பொழுது உலகளாவிய அடிப்படை ஊதியம் சிலரால் பரிந்துரைக்கப்படுகிறது. அது அரசுக் கருணையின் அடிப்படையில் மக்களுக்கு வழங்குவதாக அமைவதால் அடிப்படையில் அது ஒரு தவறான கருத்தாக்கம். இந்தியாவின் மொத்த ஜிடிபியில் 10% (15-16 இலட்சம் கோடி) ஒதுக்கினால் போதும் அதன் மூலம் அனைவருக்கும் உணவுரிமை, கல்வியுரிமை, வேலை மற்றும் மருத்துவசேவை பெறுவதற்கான உரிமை, ஓய்வூதிய உரிமை ஆகியவற்றை உறுதி செய்ய முடியும். நாட்டின் 57% செல்வத்தைக்

கொண்டுள்ள முதல் ஒரு சதவீதத்தினரிடமிருந்து 2% செல்வ வரியை விதிப்பதன் மூலம் இதற்கான நிதியைப் பெறமுடியும்.இந்தியாவின் சமூகப் புரட்சியை மீண்டும் தொடங்குவதற்கு கராச்சி காங்கிரஸின் நிகழ்ச்சி நிரலை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

---

## கியூபாவின் புரட்சிப் பெண்கள் (2)

### ஹைடி சண்டமரியா:

**புரட்சிக்கு முன்:**



ஹைடி சண்டமரியா குவாட்ராடோ, 1923 டிசம்பர் 30அன்று கியூபாவின் பழைய லாஸ் வில்லாஸ் மாகாணத்தில், இன்றைய என்க்ருசிஜாடாவில் பிறந்தார். அவரது தாயின் பெயர் ஜோவாகினா குவாட்ராடோ அலோன்சோ. ஹைடியின் தந்தை பெனிக்னோ சண்டமரியா பெரெஸ் சர்க்கரை ஆலையில் மேற்பார்வையாளராகவும், தச்சராகவும் பணியாற்றினார். ஹைடியின் பெற்றோர்கள் இருவரும் ஸ்பெயினின் கலீசியாவிலிருந்து கியூபாவின் லாஸ் வில்லாஸிற்கு குடியேறியவர்கள். அவர்களுக்கு ஹைடியுடன் சேர்த்து ஐடா, ஏபெல், ஆல்டோ மற்றும் அடா என மொத்தம் 5 பிள்ளைகள். அதில் ஹைடியே மூத்தவர். ஹைடி ஆறாம் வகுப்பு வரை படித்திருந்தார், மிகச் சிறிய வயதிலிருந்தே தன்னைச் சுற்றியுள்ள சமூகப் பிரச்சினைகளை அவர் உணர்ந்திருந்தார். ஒரு செவிலியராக வேலை செய்ய முயற்சித்தார் பிறகு ஆசிரியராகக் குறுகிய காலம் பணியாற்றினார்.

**புரட்சியில்:**

1950களின் முற்பகுதியில் ஹைடி கிராமப்புறத்திலிருந்து ஹவானாவுக்குக் குடிபெயர்ந்து, அவரது தம்பி ஏபெலுடன் வாழ்ந்தார். அவர்கள் இருவருமே அநீதியை வெறுக்கவும், தாயகத்தையும் ஒடுக்கப்பட்டவர்களையும் பாதுகாக்கவும் உறுதியேற்றனர். ஆர்த்தடாக்ஸ் கட்சியின் இளைஞர் அணியில் இணைந்து பாடிஸ்டாவின் சர்வாதிகாரத்தை அகற்றுவதற்கான போராட்டங்களில் கலந்து கொண்டனர். 1952 மார்ச் 10இல் நடந்த ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு, அவரது சகோதரர் ஏபெல் சண்டமரியா மற்றும் பிற புரட்சியாளர்களுடன் சேர்ந்து, "அவர்கள் ஒரே

மாதிரியானவர்கள்" மற்றும் "குற்றம் சாட்டுபவர்" என்ற இரகசிய செய்தித்தாள்களை வெளியிட்டுத் தீவிரமான போராட்டத்தில் ஈடுபட்டார்.

**மன்கடா தாக்குதல்:**

ஹைடியும், ஏபெலும் தங்கியிருந்த 25 y O குடியிருப்பு புரட்சி இயக்கத்தின் மையமாக மாறியது. ஆரம்பத்தில் அங்குதான் பிடல் காஸ்ட்ரோ தலைமையில் புரட்சிக்குத் திட்டமிடப்பட்டது. ஃபிடல் காஸ்ட்ரோ, ஏபெலை இயக்கத்தின் ஆன்மாவாக கருதினார். மன்கடா தாக்குதலுக்குத் தயாரான பிடல் தான் இறந்தால் தனதுப் பொறுப்பை ஏபெல் ஏற்க வேண்டும் அதனால் ஏபெலை உயிருடன் பாதுகாக்க வேண்டும் எனக் கருதியே சாட்டர்னினோ லோரா மருத்துவமனையைக் கைப்பற்றும் பணியை ஏபெலுக்கு அளித்தார், ஏபெல் ஆரம்பத்தில் அதை மறுத்தார். தானும் ஆயுதப் படைகளுடன் சண்டையிட விரும்புவதாகக் கூறினார்.

ஜூலை 26, 1953 அன்று ஹைடி சண்டமரியா, மெல்பா ஃபெர்னாண்டஸ் ஆகிய இரு பெண்களும் ஃபிடல் காஸ்ட்ரோ, ஏபெல் உள்ளிட்ட 160 போராளிகளோடு மன்கடா மற்றும் பேயாமோவில் பாடிஸ்டாவின் இராணுவ முகாம்களுக்கு எதிரான ஆயுதப்படைத் தாக்குதல்களில் ஈடுபட்டனர். ஹைடி சண்டமரியா, மெல்பா ஃபெர்னாண்டஸ் ஆகியோருடன், ஏபெல் சண்டமரியா தலைமையிலான போராளிகள் படை சாட்டர்னினோ லோ மருத்துவமனையைக் கைப்பற்றப் போராடினர். ஆனால் இறுதியில் அவர்களது திட்டம் தோல்வியடைந்தது. தாக்குதலில் ஐந்து போராளிகள் கொல்லப்பட்டனர், பின்னர் 56 போராளிகளை பாத்திஸ்டா படையினர் தூக்கிலிட்டனர், இது புரட்சியாளர்களுக்கு ஏற்பட்ட தோல்வி என்றாலும், அதுவே கியூபப் புரட்சியின் வெற்றிக்கு உந்துசக்தி அளித்தது.

ஹைடி, மெல்பா, ஃபிடல் உட்பட மற்றப் போராளிகள் சிறைப்படுத்தப்பட்டனர். இயக்கம் குறித்தத் தகவல்களைத் தெரிவிக்குமாறு காவல்படையால் அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர். ஹைடியின் கண் முன்னே அவரது சகோதரர் ஏபெலை சித்திரவதை செய்தனர். ஏபெலின் ஒரு கண்ணைப் பிடுங்கி ஹைடியிடம் காட்டி “இது உன் சகோதரனுடையது. அவன் சொல்ல மறுத்ததை நீ கூறா விட்டால், இன்னொரு கண்ணையும் பிடுங்கி விடுவோம். ” என்று அச்சுறுத்தினர். யாவற்றுக்கும் மேலாகத் தன் வீரமிக்க சகோதரனை நேசித்த ஹைடி: "நீங்கள்

ஒரு கண்ணைப் பிடுங்கியும், அவர் பேசவில்லை என்றால், நான் அதை விடக் குறைவாகவேப் பேசுவேன் என்று பதிலளித்தார். ஹைடியின் கண் முன்னே 25 வயதேயான அவர் தம்பி ஏபெலைத் துன்புறுத்திக் கொன்றனர். சிகரெட்டுகளால் ஹைடி, மெல்பாவின் கைகளைச் சுட்டனர். ஹைடியை நாற்காலியில் கட்டிவைத்தவாறு ஹைடியின் காதலர் போரிஸ் லூயிஸ் சாண்டா கொலோமாவையும் அவர் கண் முன்னே துன்புறுத்திக் கொன்றுவிட்டு: "உனக்கு இனிமேல் துணைவனே கிடையாது, நாங்கள் அவனையும் கொன்றுவிட்டோம்." என்று காழ்ப்புடன் ஹைடியிடம் கூறினர். ஆனால் அதற்கும் கலங்காத ஹைடி: "அவர் இறக்கவில்லை, ஏனென்றால் ஒருவர் நாட்டிற்காக இறப்பது என்பது என்றென்றும் வாழ்வதே." என்று பதிலளித்து கியூபப் பெண்ணின் பெயரையும், வீரத்தையும் உச்சத்தில் பொறித்தார்.



ஹைடி 1953ஆம் ஆண்டில் குவானாஜய் சிறையிலிருந்து தன் அம்மாவுக்குப் பின்வருமாறு கடிதம் எழுதியுள்ளார்: "ஏபெலுக்கு ஒரு போதும் குறையில்லை. அம்மா, கியூபா இருப்பதை நினைத்துப் பாருங்கள், ஏபேல் விரும்பிய கியூபாவை உருவாக்க ஃபிடல் உயிருடன் இருக்கிறார்."

சிறையில் ஃபிடல் காஸ்ட்ரோ விசாரணையின் போது தான் ஆற்றிய “வரலாறு என்னை விடுதலை செய்யும்” என்ற புகழ்மிக்க உரையைக் கடித வரிகளுக்கிடையே கண்ணுக்குத் தெரியாதவாறு எலுமிச்சைச் சாற்றால் எழுதினார். ஏழு மாதச் சிறைவாசத்திற்குப் பின் ஹைடியும், மெல்பாவும் விடுதலை செய்யப்பட்டனர். பத்திரிக்கையாளர் ஒருவர் ”இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?” எனக் கேட்டார். அதற்கு அவர்கள் "மீண்டும் தொடங்குவோம், இறந்த எங்கள் சகோதர சகோதரிகளுக்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்," என்று பதிலளித்தனர்.

தான் தாக்குதலிலிருந்து தப்ப முடியாது, ஹைடி போராட்டத்தைத் தொடரவேண்டும் என்றும் அடுத்து வரவிருக்கும் போராட்டங்களுக்கு ஹைடி தன்னை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் ஏபெல் தன்னிடம் வலியுறுத்தியதை ஹைடி பிற்காலத்தில் நினைவுகூர்கிறார். விடுதலைக்குப் பின் ஹைடியும் மெல்பாவும் செய்த முதல் செயல் கியூபத் தலைவர் எட்வர்டோ சிபஸின் கல்லறைக்கு மலரஞ்சலி செலுத்தியதுதான்.

ஹைடி சண்டமரியா, மெல்பா ஃபெர்னாண்டஸுடன் சேர்ந்து ஃபிடல் காஸ்ட்ரோவின் உரையைத் தொகுத்து, பகுதி பகுதியாகக் கடத்தி அதை அறிக்கையாக மாற்றி, அதை அச்சிடுவதற்கு நிதி திரட்டி 10,000 படிகளுக்கு மேல் அச்சிட்டு கியூபா நடாலியா ரெவெல்டா மற்றும் லிடியா காஸ்ட்ரோ ஆகியோரின் உதவியுடன் கியூபா முழுவதும் பரப்பினர். "பாதிக்கப்பட்ட கியூபாவுக்கு" என்ற அறிக்கையையும் அச்சிட்டு விநியோகத்தனர். அதில் ஃபிடல் மற்றும் சக கைதிகள் பாடிஸ்டாவின் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தைத் தொடர வேண்டிய முடிவை உறுதிபட வெளிப்படுத்தியிருந்தனர்.

பிடலும் மற்ற போராளிகளும் சிறையில் இருந்து விடுவிக்கப்படும் வரை ஹைடியும், மெல்பாவும் மற்ற போராளிகளுடன் இணைந்து போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்தனர். ஜூலை 26 இயக்கத்தின் அமைப்பாக்கத்தில் ஹைடி முக்கியப் பங்கு வகித்தார். ஜூலை 26 இயக்கத்தின் தேசிய இயக்குநரகத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்றார். நகர்ப்புறத்தில் தலைமறைவு இயக்க வேலைகளிலும் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார், ஆயுதப் போராட்டத்திற்கான புரட்சிகர சக்திகளை மீண்டும் ஒருங்கிணைப்பதில் அவர் ஒரு தீர்க்கமான பங்கைக் கொண்டிருந்தார்.

சிறிய கிரன்மா கப்பலில் பயணித்த எண்பத்திரண்டு கெரில்லாப் போராளிகளின் கியூப வருகையிலிருந்து அதிகாரிகளின் கவனத்தைத் திசைதிருப்பும் நோக்கில் பிராங்க் பயஸ் மற்றும் சிலியா சஞ்செஸ் ஆகியோருடன் இணைந்து ஹைடி 1956 நவம்பர் 30 அன்று சாண்டியாகோவில் நகர்ப்புற எழுச்சியை ஏற்படுத்துவதில் முக்கியப் பங்காற்றினார்.

பின்னர் சியரா மேஸ்ட்ரா மலைகளில் கெரில்லாப் படைகளுடன் இணைந்து பணியாற்றினார். நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையாளர் ஹெர்பர்ட் மேத்யூஸை, ஃபிடல் காஸ்ட்ரோவுடனான நேர்காணலுக்காக சியரா மேஸ்ட்ராவில் ஃபிடலின் இருப்பிடத்திற்கு வழிகாட்டி அழைத்துச் சென்றார். அந்த நேர்காணலின் வெளியீட்டால் ஃபிடல் இறந்துவிட்டார் என்ற பாத்திஸ்டா பொய்ப்பிரசாரம் அம்பலமானது. அமெரிக்கப் பத்திரிகையாளர் பாப் டேபர், ஃபிடல் காஸ்ட்ரோவை, நேர்காணல் செய்யவும் ஹைடி வழிகாட்டியுள்ளார்.

ஹைடி தன் சகத் தோழர்களால் யெயெ என்று அழைக்கப்பட்டார். ஹைடி பெண்களுக்கான சிறப்பு ஆயுதப் படையான மரியானா கிராஜல்ஸ் பிளாட்டூனில் இணைந்து சியரா மேஸ்ட்ராவின் மலைகளில் சண்டையிட்டார். ஹைடி ஜூலை 26 இயக்கத்தின் வெளிநாட்டுப் பிரதிநிதியாக நாடுகடத்தப்பட்ட கியூபர்களை ஒருங்கிணைத்தார். கியூபா முழுவதும் அச்சமின்றி யாரிடமும் பிடிபடாமல் பயணம் செய்தார். கெரில்லா படைகளுக்கான ஆயுதங்களைக் குண்டர்களிடமிருந்து வாங்குவதற்காக மியாமிக்குச் சென்று ஆயுதங்களுடன் கியூபாவுக்குத் திரும்பினார். தனது பாவாடை மடிப்புகளிலும் தோட்டாக்களைத் தைத்திருந்தார். புரட்சியின் வெற்றியை அறிவித்த போது, அவர் மியாமியில் இருந்தார், புதிய அரசாங்கத்தை நிறுவ உதவி பெறும் வகையில் அங்கிருந்த கியூப வழக்கறிஞர்களையும் நீதிபதிகளையும் கியூபாவிற்கு அழைத்து வந்தார்.

## புரட்சிக்குப் பின்:

கியூபப் புரட்சியின் வெற்றிக்கு பின்னர், அவர் கல்வி அமைச்சகத்தில் குறுகிய காலம் பணியாற்றினார். பிறகு கியூபக் கலாசார மையத்தின் இயக்குநராகப் பணியாற்றி வந்தார். 1959இல் அவர் காசா டி லாஸ் அமெரிக்கா என்ற கலாசார அமைப்பை நிறுவினார், இருபதாண்டுக் காலம் அதன் இயக்குநராகப் பணியாற்றினார். 1965ஆம் ஆண்டில் ஆளும் கியூப கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழுவில் உறுப்பினரானார். கியூப மேலவையின் உறுப்பினராகவும் பணியாற்றினார். கண்டம் முழுவதும் கிளர்ச்சிப் போராட்டத்தை ஒருங்கிணைக்க 1967ஆம் ஆண்டில் ஹவானாவில் நடைபெற்ற சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த லத்தீன் அமெரிக்க ஒற்றுமைக்கான அமைப்பின் மாநாட்டிற்கு (OLAS) தலைமையேற்றார்.

மன்கடாவில் தன் காதலரை இழந்த ஹைடி, ஜூலை 26 இயக்க உறுப்பினரும், வழக்கறிஞருமான ஸர்மாண்டோ ஹார்ட் டெவலொஸை மணந்தார். ஹார்ட் டெவலொஸ் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு முதல் கல்வி அமைச்சராகவும், பின்னர் கலாசார அமைச்சராகவும் பணியாற்றினார். அவர்களுக்கு ஏபெல், சிலியா என இரண்டு குழந்தைகள் பிறந்தனர். 1960-80களின் லத்தீன் அமெரிக்கப் போர்களால் வீடிழந்து இடம்பெயர்ந்த ஆதரவற்றவர்களையும் ஹைடி இணையர் தத்தெடுத்து வளர்த்தனர்.

1967 ஜூலை 2இல் மன்கடா என்ற தலைப்பில் உரையாற்றும் போது ஹைடி மன்கடா




போராட்டத்தைத் தன் மகன் ஏபெலின் பிறப்புடன் ஒப்பிட்டுள்ளார்.

"என் மகன் ஏபெல் பிறந்த போது, நான் மிகவும் கடினமான சில தருணங்களை அனுபவித்தேன், எந்தவொரு பெண்ணும் குழந்தை பிறக்கும் போது அனுபவிக்கும் தருணங்கள் மிகவும் கடினமானவை. தாங்கமுடியாத வலிகள்! அவை என் உடலைக் கிழித்தன, ஆனாலும் அழுவது, அலறுவது அல்லது சபிப்பதைத் தடுக்க எனக்கு வலிமை கிடைத்தது. ஒருவருக்கு இத்தகைய வலி இருக்கும் போது அழுவது, அலறுவது, சபிப்பது இயல்பானது. அவ்வாறு செய்யாமலிருப்பதற்கான வலிமை எங்கிருந்து வருகிறது? நீங்கள் ஒரு குழந்தையைப் பெறுகிறீர்கள் என்பதால். அப்படித்தான் மன்கடா என்ன என்பதை நான் உணர்ந்திருந்தேன். . . எங்களால் எதிர்க்க முடிந்தது, ஏனென்றால் மிகப் பெரிய ஒன்று பிறக்க இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேசசியத்தில் ஹைடியும், சே குவேராவும் ஒத்த பார்வை கொண்டிருந்தனர். கியூபாவின் விடுதலையால் மட்டுமே ஹைடிக்கும், சே குவேராவுக்கும் நிறைவு ஏற்படவில்லை. இருவருமே அமெரிக்கக் கண்டம் முழுவதிலும் விடுதலை ஏற்படுத்தத் துடித்தனர்.

சேவின் மரணத்திற்குப் பிறகு ஹைடி சே-க்கு எழுதியக் கடிதத்தில், சியரா மேஸ்ட்ராவில் வாக்குறுதி அளித்தது போல் அமெரிக்க விடுதலைப் பயணத்திற்குத் தன்னை அழைத்துச் செல்லாததற்காக சே-வை மன்னிக்க முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

சே குவெரா 1960களில் ஹைடிக்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி

"**அன்புள்ள யெயெ,**

நீங்கள் ஓர் இலக்கியவாதியானதை நான் காண்கிறேன், ஆனால் உங்களை எப்படி நான் மிகவும் விரும்புகிறேன் என்றால் புத்தாண்டில் அந்த நாளில், மேலெங்கும் துவக்குகளுடனான உங்கள்

உருவத்தை, சியராவின் அந்த உருவத்தை --- அந்த நாட்களில் நம் போராட்டங்கள் இனிமையான நினைவுகள் --- உங்களுடையதாக என்னுடன் கொண்டிருப்பேன்."

தான் சியராவில் கெரில்லாப் போராளியாகப் போராடிய நாட்களையே ஹைடியும் மேன்மைக்குரிய நாட்களாகக் கருதினார்... அவருக்கு சியராவில் போராட்டம் என்பது "எல்லாவற்றையும் அழகாகக் கொண்ட ஒரு தருணம், வீரமிக்க அந்த தருணத்தில் வாழ்க்கை; மரணத்தையும், தோல்வியையும் வென்றது. அத்தகைய தருணத்தில், மதிப்பிற்குகந்ததைப் பாதுகாக்க ஒருவர் எல்லாவற்றையும் தியாகம் செய்வார். நீங்கள் உங்கள் வாழ்க்கைக்காக சமரசமின்றிப் போராடும் போது வாழ்க்கையும் மரணமும் அழகாகவும், உன்னதமாகவும் இருக்கும். நம் இளம் கியூபர்களுக்கு நான் காட்ட விரும்பியதெல்லாம், நீங்கள் அவ்வாறு வாழும் போது வாழ்க்கை மிகவும் அழகாக இருக்கும். அதுவே வாழ்வதற்கான ஒரே வழி" என்று குறிப்பிட்டுள்ளார்.

**கலாசாரப் புரட்சி:**

ஹைடியின் அதியுன்னதப் படைப்பாகப் போற்றப்படுவது அவர் உருவாக்கிய கலாசார இல்லமான காசா டி லாஸ். ஹைடி "கலையைப் புரட்சிகர சமூக மாற்றத்தின் உயர்ந்த வெளிப்பாடாக நம்பினார். ஹைடி கலாசாரப் பணியின் சர்வதேசியத்தையும், "கலையை மனித வெளிப்பாட்டின் மிக உயர்ந்த வடிவமாகவும், சமூக மாற்றத்தின் அவசியமான அங்கமாகவும் ஹைடி உணர்ந்ததை அந்தக் கலாசார இல்லம் ஏற்படுத்திய தாக்கத்திலிருந்து புரிந்துகொள்ள முடியும். ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குவதில் கலை மற்றும் கலாசாரம் வகிக்கக் கூடிய முக்கியப் பங்கை நிரூபிக்கும் சிறப்பிற்குரிய இடமாக காசா டி லாஸ் அமெரிக்காவை உருவாக்கினார்.

அமெரிக்கா தனது போரை வெறுப்பால், பொய்களால், பணத்தால், ஆயுதங்களுடன் நடத்தியது. ஹைடியும், கலைஞர்களும், அவர் உருவாக்கிய கலாசார இல்லமும் மகத்தான தங்கள் படைப்பாற்றலாலும், பேரன்பாலும் அதை வென்றனர். அமெரிக்க ஐக்கிய நாடுகள் கியூபாவில் தொடுத்த ஆயுதப் போர், கருத்தியல் முற்றுகை, பொருளாதாரத் தடைகளைத் தாண்டி சர்வதேசிய சமூகக் கலாசார ஒருங்கிணைப்பை ஏற்படுத்த ஹைடியும், அவரது கலாசார இல்லத்தின் கலைஞர்களும் கடுமையாக உழைத்துள்ளனர். அந்தக் கலாசார இல்லத்தில் உலகெங்கிலும்

உள்ள படைப்பாற்றல் மிக்கக் கலைஞர்கள், ஓவியர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாவலாசிரியர்கள், இசைக்கலைஞர்கள், நாடகக் கலைஞர்களுடன், சிற்பிகள், புகைப்படக் கலைஞர்கள் புத்தாக்க ஆர்வலர்கள், அறிஞர்கள் அனைவரையும் இணைக்கும் சர்வதேச இணைப்பகமாக வளர்ந்தது. புதியக் கலை இலக்கிய முயற்சிகளையும், சோதனைகளையும் ஊக்குவித்து ஒருமைப்பாட்டை உருவாக்கியது. பல்வேறு நாடுகளிகளிலிருந்து கலைஞர்களையும், எழுத்தாளார்களையும் கியூபாவிற்கு அழைத்து வந்து நெருக்கமான உறவுகளை வளர்க்க உதவியது. லத்தீன் அமெரிக்க கலைஞர்களுக்குப் புத்துயிரூட்டும் கலாசார ஈர்ப்பு மையமானது. அதிநவீன கலைஞர்களை ஈர்த்து கியூபர்களை உலகின் மிகச் சிறந்த படைப்பாற்றல் கொண்டவர்களுடன் இணைப்பை ஏற்படுத்தியது,

இந்தக் கலாசார இல்லம் கியூப மக்களுக்குப் புதுமையான இசை, ஓவியம், நாடகம் என நவீன கலைப் படைப்புகளைக் கொண்டு வந்தது. கியூபாவின் கலைகளையும் இலக்கியங்களையும் நாட்டின் எல்லைகளுக்கு அப்பால் அறியச் செய்தது. இவ்வாறு மிகவும் வியக்க வைக்கும் கலாசாரப் பாலங்களை ஹைடி கட்டமைத்தார். அவர் காசாவை மிகவும் அசாதாரணமான முறையில் ஜனநாயகமும், அதிகாரப் பரவலும் கொண்ட முற்றிலும் கிடைமட்டமான அமைப்பாக்கினார். அங்கே வேற்றுமைகள் மதிக்கப்பட்டன. சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட கலைஞர்களை ஹைடி பாதுகாத்து ஊக்குவித்தார், நோயல் நிக்கோலா, சில்வியோ ரோட்ரிக்ஸ் (அவரது நியூவா ட்ரோவா "புதிய பாடல் இயக்கம்") எனப் பல்வேறு கலைஞர்களை ஆதரித்தார். புத்தாக்கக் கலை ஆர்வலர்களின் படைப்பார்வத்தை விரிவுபடுத்தும் வகையில், மேலும் வாய்ப்புகளையும் வழங்கினார். இன, பாலின, பாலியல் வேறுபாடுகளைக் கடந்து பெண்ணியக் கலைஞர்கள், ஓரினச் சேர்க்கையாளர்கள், வேறுபட்ட பாலியல் போக்குடையவர்கள் என ஹைடி அனைவரையும் உள்ளிணைத்து அரவணைத்தார்.

2010ஆம் ஆண்டில் ஹவானாவில் வெளியிடப்பட்ட “ஹைடிக்கு எழுதிய கடிதங்கள்” என்ற நூல், சே குவேரா முதல் எட்வர்டோ கலேனோ, கேப்ரியல் கார்சியா மார்க்வெஸ், நிக்கோலஸ் கில்லன் வரை அமெரிக்கக் கண்டத்தின் முன்னணி அரசியல் மற்றும் கலாசார பிரமுகர்கள் ஹைடி மீது கொண்டிருந்த செல்வாக்கையும், மரியாதையையும் பற்றிய ஒரு கருத்துச் சித்திரத்தை அளிக்கிறது.

காசா டி லாஸ் கட்டிடத்தின் பரந்த கதவுகள் வழியாக நடந்து செல்லும் போது, ஹைடியை அறிந்தவர்கள் அவருடைய இருப்பை உணர்கிறார்கள். அவருடைய கதையை மட்டுமே அறிந்தவர்கள், அல்லது அதைக் கேள்விப்படாதவர்கள் கூட சுதந்திரம் மற்றும் படைப்பாற்றலுக்கான உண்மையான இடமாக அதைப் பார்க்கிறார்கள் என ஹைடியின் தோழியும் அவரது வாழ்க்கை வரலாற்றை நூலாக்கியவருமான மார்கரேட் ராண்டல் கூறுகிறார்.

**மரணம்:**

ஹைடி 1980 ஜூலை 28 அன்று தனது ஐம்பத்தேழு வயதில் ஹவானாவில் தற்கொலை செய்து கொண்டார். ஹைடி தற்கொலை செய்து கொண்டதால் கியூபா எங்கும் துயரமும் குழப்பமும் அசௌகரியமும் ஏற்பட்டது. புரட்சிக்கு அவர் வாழ்வு முழுவதையும் அர்ப்பணித்திருந்த போதிலும், புரட்சியில் தற்கொலை ஏற்கப்படாததால், மற்றப் புரட்சியாளர்களுக்கு அளிக்கப்பட்ட கௌரவம் போல் ஹைடி புரட்சிச் சதுக்கத்தில் கௌரவிக்கப்படுவதை அது தடுத்து விட்டது.

ஹைடியின் வாழ்வில் அடுத்தடுத்து நேர்ந்த விபத்துகளும் துயரச் சம்பவங்களும் பெருஞ்சுமையாக அவரை அழுத்தின. அவர் வாழ்வின் இறுதி வரை தனது அன்புக்குரியவர்களை இழந்த பெருந்துயரால் அவதிப்பட்டார். மன்கடாவில் அவரது சகோதரர், காதலர் மற்றும் தோழர்கள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டதால் ஏற்பட்ட காயங்கள் அவரை இறுதிவரை வதைத்தன..அதன் மீளாத்துயரால் வாழ்நாள் முழுவதும் கடுமையாகப் பாதிக்கப்பட்டார். அதனால் ஏற்பட்ட மனச்சிதைவு நோயால் ஒவ்வொரு காலையும் படுக்கையிலிருந்து எழுவதே அவருக்குப் பெரும் போராட்டமாக இருந்தது. அவருக்கு நெருக்கமானவர்களுக்கு இது தெரியும்.

பொலிவியாவில் சேவின் மரணம் ஹைடியைக் கடுமையாகப் பாதித்தது. தன்னால் இனி உயிர் வாழ முடியாது என்பதை அவருக்கு உணர்த்திய செய்திகளில் அதுவும் ஒன்று.1968ஆம் ஆண்டில் காசா டி லாஸ் அமெரிக்காஸ் வெளியிட்ட ஒரு கடிதத்தில், சே குவேராவுக்கு அவர் இறந்த பின் ஹைடி எழுதிய கடிதத்தில்: "பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பு நான் மிகவும் தீவிரமாக நேசித்த மனிதர்கள் இறக்கக் கண்டேன் -- நான் ஏற்கெனவே அதிகமாக வாழ்ந்து விட்டேன் என்று நினைக்கிறேன். சூரியன் அப்படி ஒன்றும் அழகாகத் தெரியவில்லை, பனை மரங்களைப்

பார்ப்பதில் எனக்கு மகிழ்ச்சி இல்லை. இப்போது போலவே, சில நேரங்களில், வாழ்க்கையை மிகவும் ரசித்திருந்தாலும், இந்த இரண்டு விஷயங்களுக்காக மட்டுமே தினமும் காலையில் ஒருவர் கண்களைத் திறப்பது இன்னும் மதிப்பிற்குரியதாக உணர்ந்தாலும், உங்களைப் போல அவற்றை மூடவே நினைக்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

திருமணமான இருபது வருடங்களுக்குப் பிறகு ஹைடியின் கணவர் அர்மாண்டோ ஹார்ட்டும் ஹைடி பயணத்தில் இருந்த போது அவரை விட்டுப் பிரிந்து சென்று விட்டார். கார் விபத்தில் ஹைடியின் கால் பலமாக அடிபட்டிருந்ததும் அவருக்கு நிரந்தாமான வலியேற்படுத்தித் துன்புறுத்திக் கொண்டிருந்தது. ஹைடியை உண்மையில் புரிந்து கொண்ட அவரது நெருங்கிய தோழியும், அவர் சோர்வுறும் போது உற்சாகப்படுத்தும் உற்ற துணையுமான சிலியா சஞ்செஸ் புற்று நோயால் இறந்தது அவரைத் தங்காவொண்ணா துயரத்தில் ஆழ்த்தி விட்டது. தனது வாழ்நாள் முழுவதையும் புரட்சிக்காக அர்ப்பணித்த ஹைடி, தன் வாழ்வின் பணி நிறைவேறியதாகப் பொறுப்புகளைத் தன் சக தோழர்களிடம் விட்டுவிட்டு, நீங்காது வதைத்த நிரந்தர வலிகளிடமிருந்து நிரந்தரமாய்த் தன்னை விடுவித்துக் கொண்டார்.

**ஹைடியின் நினைவில்:**

ஹைடியின் மகளும் சிறந்த எழுத்தாளருமான சிலியா ஹார்ட் 2005ஆம் ஆண்டில் ஹைடி மற்றும் சிலியா பற்றி வெளியிட்ட ஒரு கட்டுரையில், சிலியா சஞ்செஸின் மரணத்தினால்தான் தன் தாய் தற்கொலை செய்துகொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். சிலியா ஹார்ட் சிறுமியாக இருந்த போது ஹைடி அவரிடம் "அவர்கள் உன்னைக் கடைசிப் பெயரால் அடையாளப்படுத்தும் போது, முதல் பெயரால் உன்னை அடையாளப்படுத்துமாறு நீ சொல்ல வேண்டும் சிலியா சஞ்செஸினால் தான் உனக்கு இந்தப் பெயர் என்பதால் தான், அதை நீ கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். . இது நான் உனக்கு வழங்கிய மிகச் சிறந்த பரிசு, அதை மதிக்கக் கற்றுக்கொள்" எனக் கூறியதாக நினைவுகூர்கிறார்.

ஹைடியின் மனித நேயத்தை எடுத்துக்காட்டும் தன் குழந்தைப் பருவத்து சம்பவம் ஒன்றையும் சிலியா ஹார்ட் நினைவு கூர்கிறார். சிலியா ஹார்ட்டுக்கு ஏழு வயது இருக்கும் போது பிறந்தநாளன்று அவருக்குப் பொம்மைகளடங்கிய ஒரு பெட்டியை ஹைடி பரிசாக அளித்துள்ளார். ஒரு நாள் முழுவதும் பொம்மைளுடன் சிலியாவை விளையாட விட்ட பின் "இப்போது ஒன்றைத்

தேர்வு செய், மீதமுள்ளவற்றை பொம்மைகளில்லாத உன் நண்பர்களுக்குக் கொடு" என ஹைடி கூறியுள்ளார்.... "

2008 செப்டம்பர் 7 அன்று மூன்று தொடர் சூறாவளிகளால் வீடற்றவர்களாக வெளியேறியக கியூபர்களுக்கு உதவி செய்ய சென்ற போது ஏற்பட்ட கார் விபத்தில் ஹைடியின் மகள் சிலியா ஹார்ட்டும்(45), மகன் ஏபெல் ஹார்ட்டும்(48) உயிரிழந்தனர்.

ஹைடியின் நினைவாக வில்லா கிளாரா மாகாணத்தில் உள்ள என்க்ரூசிஜாடா நகராட்சியில் சண்டமரியா-குவாட்ராடோ குடும்பத்தின் இல்லம் அருங்காட்சியகமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளாது, ஃபிடல் காஸ்ட்ரோ சாண்டியாகோவில் ஒரு அச்சிடும் வளாகத்தை ஹைடி சண்டமரியாவின் பெயரில் அர்ப்பணித்து ஹைடிக்கு நீண்ட அஞ்சலி செலுத்தினார் "ஹைடிக்கு ஓர் அழகிய புரட்சிகர வரலாறு உள்ளது" என்று அவர் கூறினார், பின்னர் புரட்சியின் ஆரம்ப நாட்களில் ஹைடி சூட்கேஸ்களில் மறைவாகத் துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் எடுத்துச் செல்ல வேண்டியிருந்ததை நினைவு கூர்ந்தார், "யெயெ-இன் பெயர் உண்மையில் கியூபப் புரட்சியுடன் இணைந்துள்ளது" என்று கூறி ஃபிடல் காஸ்ட்ரோ கண்கலங்கினார்.

ஹைடி பற்றி எழுதிய வாழ்க்கை வரலாற்று நூலில் மார்க்கரேட் ராண்டால், "அவர் ஏன் தன்னைத் தானே கொன்றார்? என்று 'கேள்வி இருக்கக் கூடாது. அவர் எப்படி இவ்வளவு முழுமையாய் வாழ முடிந்தது, இவ்வளவு செய்ய முடிந்தது? என்றே கேட்க வேண்டும்" என முடித்துள்ளார்.

தொலைநோக்குப் பார்வையும், படைப்பாற்றலும் கொண்ட போற்றுதலுக்குரிய புரட்சியாளர் ஹைடி. தன் பேரன்பால் உலகத்தைப் புரிந்து கொண்ட ஹைடி, தன் இயல் நீதி உணர்வால் வர்க்கம், இனம், பாலினம் மற்றும் கலாசாரத் தடை வரம்புகளைக் கடந்தவர். கியூபப் புரட்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் நீக்கமற ஒன்றுகலந்தவர் நீங்காத துயர் இருந்தும் தளராத மன உறுதியோடு வீரஞ்செறிக்கப் போராடி கியூபாவில் கலாசாரப் புரட்சியை ஏற்படுத்திய புரட்சியாளர் ஹைடி சண்டமரியாவை நம் செயல்பாடுகளால் என்றென்றும் போற்றிடுவோம்.

சமந்தா

## டாலருக்கு வந்த வாழ்வு (1)

## ‘நொபெக்’கை நிறைவேற்றிய கொரோனா:

2019ஆம் ஆண்டில், அமெரிக்க காங்கிரஸில் ‘ஒபெக்’ அமைப்பின் (OPEC - Organization of Petroleum Exporting Countries) எண்ணெய் விலை நிர்ணயத்திற்கு எதிராக ‘நோபெக்’ / எண்ணெய் உற்பத்தி, ஏற்றுமதி கார்டெல் மறுப்பு (No Oil Producing and Exporting Cartels) மசோதா தாக்கல் செய்யப்பட்டது. இதை நடைமுறைப்படுத்தினால் ஒபெக்கின் மீது அமெரிக்க நீதித் துறை பொறுப்பாண்மை மீறல் (Anti-trust) நடவடிக்கை எடுக்க அனுமதிக்கும். இது ஒபெக் உறுப்பு நாடுகளின் இறையாண்மையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டது, எண்ணெய் விலைகளை உயர்த்துவதற்கான முயற்சியில் ஒபெக் உறுப்பு நாடுகள் உற்பத்தியைக் கட்டுப்படுத்தினால் அதை எதிர்த்து வழக்குத் தொடர இச்சட்டம் அனுமதிக்கிறது.

இம்மசோதாவை நடைமுறைப்படுத்தினால் பெட்ரோடாலர்களைக் கைவிடுவதாக சவுதி அரேபியா எச்சரித்துள்ளது. அதாவது எண்ணெய் வர்த்தகத்தை டாலர் தவிர வேறு நாணயங்களில் மேற்கொள்வோம் என்று எச்சரித்துள்ளது. அமெரிக்கர்கள் நோபெக்கை நடைமுறைப்படுத்தட்டும், அதனால் அமெரிக்கப் பொருளாதாரமே வீழ்ச்சியடையும் என்றும் சவுதி அரேபியர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஏற்கெனவே சவுதி அரேபியா மற்றும் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளால் பாதிக்கப்பட்ட கத்தார் ஒபெக் அமைப்பிலிருந்து வெளியேற இதுவும் ஒரு காரணமாகக் கருதப்படுகிறது. தற்பொழுது ஒபெக் அமைப்பில் சவுதி அரேபியா, ரஷ்யா என இரண்டு உறுப்பு நாடுகள் மட்டுமே உள்ளன.

சில ஆண்டுகளுக்கு முன்னர் சவுதி அரேபியா செப்டபர் 11 இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கான பழியை அமெரிக்க காங்கிரஸ் சவுதி மீது சுமத்தினால் அமெரிக்கக் கருவூலங்களில் செய்த முதலீடுகளிலிருந்து வெளியேறுவதாகவும், நூற்றுக்கணக்கான பில்லியன் டாலர் மதிப்புள்ள அமெரிக்கச் சொத்துக்களை விற்றுவிடப் போவதாகவும் எச்சரித்தது. அதாவது பெட்ரோ டாலர் ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுவதாக, மறைமுக எச்சரிகை விடுத்தது.

நோபெக்/எண்ணெய் உற்பத்தி ஏற்றுமதி கார்டெல் மறுப்பு மசோதா முதன்முதலில் 2000ஆம்

ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்மசோதா இதுவரை 16 முறை தாக்கல் செய்யப்பட்ட போதும் ஒரு முறை கூட சட்டமாகவில்லை. அமெரிக்காவின் இரு பிரதானக் கட்சிகளான ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக் கட்சியின் தலைவர்களும் இம்மசோதா அமெரிக்க-சவுதி உறவை சேதப்படுத்தும், பெட்ரோ-டாலருக்கு முடிவு கட்டும் என்ற அச்சத்தில் அதனைச் சட்டமாக்காமல் தடுத்துவந்தனர்.

அமெரிக்கப் பெட்ரோலிய நிறுவனங்களும் கிட்டத்தட்ட ஒபெக் அமைப்பைப் போலவே, நோபெக் மசோதாவை எதிர்த்துக் குரல் கொடுத்துள்ளன. ஏனென்றால் 2013- 2014ல் கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்த போது அமெரிக்காவின் ஷேல் எண்ணெய் உற்பத்தியாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டார்கள். இச்சட்டத்தால் அது போன்ற விலைவீழ்ச்சி ஏற்பட்டால் அமெரிக்காவின் ஷேல் எண்ணெய் உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்படும். ஷேல் எண்ணெய் உற்பத்திக்கு அபாயகரமான நீர்விரிசல் முறை பயன்படுத்தப்படுவதால் துரப்பண முறையில் எண்ணெய்க் கிணறுகளிலிருந்து கச்சா எண்ணெய் உற்பத்தி செய்ய ஆகும் செலவைப் போல் மூன்று மடங்கு செலவாவதால் ஒரு பீப்பாய் எண்ணெய் விலை 60 டாலர் இருந்தால்தான் அவர்களால் தொடர்ந்து தொழில் செய்ய முடியும், வங்கிக் கடன் பெற்றே நீர்விரிசல் முறையில் இத்தொழில் நடத்தப்படுகிறது. எண்ணெய் விலை தாழ்ந்தால் அந்தத் தொழிலே கடனில் மூழ்கிப் போகும். பெருமளவில் வங்கிக்கடன் நெருக்கடியும் ஏற்படும்.

இதை நடைமுறைப்படுத்தினால் அமெரிக்காவின். பொருளாதாரமே அச்சுறுத்தலுக்கு உள்ளாகி விடும். உலகின் மிகப்பெரிய எண்ணெய் நுகர்வாளராக இருந்த அமெரிக்கா, தற்பொழுது ஷேல் எண்ணெய் உற்பத்தி மூலம் உலகின் முதன்மையான எண்ணெய் ஏற்றுமதியாளராக உருவெடுத்துள்ளது. இம்மசோதா சட்டமாகியிருந்தால் ஏற்பட்டிருக்கும் விளைவையே தற்பொழுது பொருளாதார மந்தநிலையும், கொரோனா வைரஸ் தாக்கமும் ஏற்படுத்தியுள்ளது. தற்போது ஒரு பீப்பாய் கச்சா எண்ணெயின் விலை 30 டாலருக்குக் கீழே வீழ்ந்ததால் ஷேல் உற்பத்தித் தொழில்துறையும் வங்கிகளும் கடும் நெருக்கடிக்கு உள்ளாகும்.

சவுதி அரேபியா, அமெரிக்காவிடமிருந்து உலகிலே மிக அதிக அளவிற்கு ஆயுதங்கள் இறக்குமதி செய்கிறது. ஏமனில் சவுதி நடத்தும் யுத்தத்திற்கு அமெரிக்கா தான் ஆயுதங்கள் வழங்குகிறது. பத்திரிகையாளர் ஜமால் கஷோகி கொலையிலும் சவுதி அரேபியாவை அமெரிக்கா பாதுகாத்தது.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

இப்படிப்பட்ட கொலை சீனாவிலோ, ஈரானிலோ நடந்திருக்குமானால் அமெரிக்கா இரண்டில் ஒரு வழி செய்திருக்கும். யொம் கிப்புர் போரில் இஸ்ரேலுக்கு ஆதரவாகச் செயல்பட்டதால் அமெரிக்காவிற்கு எண்ணெய் விற்பனையை நிறுத்தி 1973-74ல் பொருளாதாரத் தடை விதித்த சவுதி அரேபியாவை, இஸ்ரேலிடமிருந்து பாதுகாப்பதாக அமெரிக்கா மூளைச் சலவை செய்து 1974ல் அதனுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தியது ஒரு வரலாற்று முரண். ஏன் சவுதி அரேபியாவிடம் மட்டும் அமெரிக்கா இவ்வளவு இணக்கப் போக்குடன் வலிந்து வலிந்து போய் நட்பு பாராட்டுகிறது என்று ஆராய்ந்தால் அதன் பின்னணியில் செத்துப் போன டாலருக்கு இன்று வரை முட்டுக் கொடுத்து மறுவாழ்வு கொடுத்திருப்பது சவுதியே என்ற பேருண்மை வெளிச்சத்திற்கு வரும். (தொடரும்)

---

## தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

பொதுச்செயலாளர்: தோழர் ***தியாகு***

அன்பிற்குரியீர்! வணக்கம்.

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் அரசியல்-கருத்தியல் நிலைப்பாடுகளையும் நடைமுறைச் செயல்பாடுகளையும் தொடர்ந்து கவனித்து வருவீர்கள் என நம்புகிறேன். தமிழ்த் தேசிய விடுதலைக்கும் சமூக நீதிக்குமான கொள்கைவழியைத் தொடர்ந்து பற்றி நிற்கிறோம். பதவி அரசியலைப் புறந்தள்ளிப் போராட்ட அரசியலை உறுதியாகக் கடைப்பிடிக்கிறோம். மக்கள் நலன் கருதி ஒன்றுபட்ட இயக்கங்களில் தொடர்ந்து எங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்து வருகிறோம். உணர்வு அரசியலில் மயங்காமல் அறிவார்ந்த அரசியல் களத்தில் ஊன்றி நிற்கிறோம். தமிழீழம் உள்ளிட்ட தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட அரசியலில் எமது இடம் சிறிதென்றாலும் இன்றியமையாத ஒன்றென்னும் அறிந்தேற்புப் பெற்றுள்ளோம்.

எம் கொள்கை நிலைப்பாடுகளையும் கருத்துகளையும் திங்கள்தோறும் வெளிவரும் ***உரிமைத்***

***தமிழ்த்தேசம்*** மின்னிதழில் உங்கள் பார்வைக்குப் படைத்து வருகிறோம். ***அறிவுக்குரல்*** வாயிலாகவும் புரட்சியச் சிந்தனைகளை விரிய விதைத்து வருகிறோம். எம் விடாமுயற்சியின் பயனாக இயக்கம் சீராகவும் உறுதியாகவும் வளர்ந்து வருகிறது. அறிவியல் நோக்கும் ஈகவுணர்வும் உழைப்பார்வமும் கொண்ட புதிய ஆற்றல்களை இயக்கத்தின் பால் ஈர்த்துள்ளோம்.

ஆனால், இன்றைய அரசியல் சூழலின் தேவைகளை நிறைவு செய்ய எமது வலிமையும் வளர்ச்சியும் போத மாட்டா என்பதை உணர்ந்துள்ளோம். இயக்கத்தின் பரவலான வளர்ச்சிக்கும் மக்கள்-பணிக்கும் மேலும் முழுநேர, பகுதிநேர ஊழியர்களைக் களமிறக்க வேண்டும். சமூக ஊடகங்களை இன்னும் விரிவாகப் பயன்படுத்தவும், மெய்ந்நிகர் அரசியல் செயல்நிரலைக் கடைப்பிடிக்கவும் தொடர்ச்சியான பொருள்வளம் தேவைப்படுகிறது. இதற்கென எம் தலைமைக் குழுவில் பேசி முடிவெடுத்து இந்தத் திங்கள் பங்களிப்புத் திட்டத்தை அறிவிக்கிறோம்:

எம் இயக்கப் பணிகளில் உங்களுக்கு நம்பிக்கையும் அக்கறையும் இருக்குமானால் தொடர்ந்து ரூ.100/- முதல் 2000/-க்குள் திங்கள் பங்களிப்பாகத் தாருங்கள். இது ஓராண்டுக்கான திட்டமாகும். இதற்கான படிவம் நிரப்பித் தந்து இத்திட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டுகிறேன். சிறுதுளி பெருவெள்ளம்!

தமிழர் விடுதலைப் போர்முழக்கம்! சமூகநீதித் தமிழ்த்தேசம்!

நன்றி! தோழமையுடன்

தியாகு / சென்னை /04/05/2020

**தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்**

பொதுச்செயலாளர்: ***தியாகு***

**திங்கள் பங்களிப்புப் படிவம்**

| | |
|---|---|
| **பெயர்:** | |
| **ஊர் / முகவரி:** | |
| **தொலைபேசி / புலனம் எண்:** | |
| **மின்னஞ்சல் முகவரி:** | |
| **திங்கள் பங்களிப்பு:** | **ரூ.** |
| **திங்கள்தோறும் பங்களிப்பு நாள்:** | |
| **பங்களிப்பு வழி (நேரில்/ வைப்பகக் கணக்கு/ ஏனைய வழி)** | |
| **இயக்கத்திடம் உங்கள் எதிர்பார்ப்பு:** | |

**கையொப்பம்**

**நாள்**